வெளியீடு 19-5-2006 Issued 19-5-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜனவரி 25, 2006—தொகுதி 90 — எண் 2

Wednesday, the 25th January, 2006 —Volume 90 — No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

927
21.7.06

**25–1–2006**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 201-234 |
| **2. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்—** | 234, 238-240 |
| **3. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்க்கு விடுதிகள் கட்டுதல் மற்றும் அவர்களுக்கு இலவச அகராதியும் Atlas-ம் வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 235-238, 243-244 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 240 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு | 241 |
| (இ) பொது நிறுவனங்கள் குழு | 241 |
| (ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 241 |
| (உ) அரசு உறுதிமொழிக் குழு | 242 |
| (ஊ) மனுக்கள் குழு | 242 |
| (எ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 242 |
| **5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதமும் பதிலுரையும்—** | 242, 244-304 |
| திரு. துரைமுருகன் | 244-278 |
| * மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 247,248, 249-250, 251-252, 253, 258, 261, 264-265, 272, 280-304 |

பக்கங்கள்

6. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் 304-305

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 305-308

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 12, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2037**
**2006 ஜனவரி 25, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற*
*சிலசொல்லல் தேற்றா தவர்"*

குற்றமற்றவனவாக சில சொற்களைத் தெளிவாகச் சொல்லத் தெரியாதவர்கள், பல சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கவே விரும்புவார்கள்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 101, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**101—**

### மின் மேம்பாடு

*** 55921—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி நகரில் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 25

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) நாகை மாவட்டம், மயிலாடுதுறை நகருக்கு ரூ.414.736 இலட்சம், சீர்காழி நகருக்கு ரூ.160.076 இலட்சம் அளவில் திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன், திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தமிழகத்தைக் கடந்த 5 ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழச் செய்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தலைசிறந்த ஆட்சியில், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி மற்றும் மயிலாடுதுறை நகரங்களுக்கு விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்மூலம் A.P.D.R.P. துணை மின் தொடர் மற்றும் மின் பகிர்மான இழப்பைக் குறைக்கவும், மின் பகிர்மானத்தைத் துரிதப்படுத்தவும், சீர்காழி நகருக்கு ரூ.160.076 இலட்சமும், மயிலாடுதுறை நகருக்கு ரூ.414.736 இலட்சமும் கோரி, மத்திய அரசின் ஒப்புதலுக்காக, திட்ட அறிக்கை அனுப்பியுள்ளமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் சீர்காழி தொகுதி மக்களின் சார்பாக, கோடானு கோடி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

மேலும், மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற்று வந்தவுடன், முன்னுரிமை அளித்து, சீர்காழி மற்றும் மயிலாடுதுறை நகரங்களில் இத்திட்டத்தினைச் செயலாக்கம் செய்திடவும், மேலும் இத்திட்டத்தின்மூலம் சீர்காழி நகரிலும், என்னென்ன பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதனையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் A.P.D.R.P. திட்டத்தின்மூலமாக என்னென்ன பணிகள் [illegible] என்பதை மாண்புமிகு உறுப்பினர்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227008
[illegible] — 600 008



2006 ஜனவரி 25]

அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக, ஒன்று, புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல். மின் விநியோகத்தை நிலைப்படுத்தவும், அந்தந்தப் பகுதிகளில் மின் வளர்ச்சிக்கேற்ற மின் திறனைப் பெறுவதற்காகவும், 71 துணை மின் நிலையங்கள் ரூ.292.29 கோடி செலவில் வடிவமைக்கப்படவுள்ளன.

இரண்டாவது, மின் திறன் மாற்றியின் திறனை அதிகரித்தல். திட்டப் பகுதிகளில், வளர்ச்சிக்கேற்ப 69 மின் திறன் மாற்றிகளின், மின் திறன், ரூ.38.54 கோடி செலவில் அதிகரிக்கப்பட உள்ளன. அந்தத் திட்டத்தின் மூலமாக, ஒட்டுமொத்தமாக, தமிழகத்தில் செய்யப்படவிருக்கின்ற பணிகள். கூடுதல் விநியோக மின்மாற்றிகள் நிறுவுதல். தாழ்வழுத்த பாதைகளில் நீளத்தைக் குறைத்து, மின் இழப்பைக் குறைக்க 5,734 விநியோக மின் மாற்றிகள் ரூ.161.288 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளன.

முற்பகல் 10-05

தற்போதுள்ள மின் பாதைகளையும் மின் கட்டமைப்பையும் மேம்படுத்துவதற்காக, தரமான சீரான மின் விநியோகத்திற்காக 6,446.9 கிலோ மீட்டர் மின் பாதை, ரூ.112.83 கோடி செலவில் நிறுவப்படவுள்ளன. தாழ்வழுத்த மின் இணைப்புகளுக்கான, மின் கட்டணப் பட்டியலைக் கணினிமயமாக்குதல் மற்றும் அனைத்துப் பணிகளையும் கணினி சார்புடையதாக்குதல். மின் பயனீட்டாளர்களுக்கு—உபயோகிப்பாளர்களுக்கு—திறனான முறையில் சேவை செய்வதற்காக, 446 அலுவலகங்களில் ரூபாய் 46.47 கோடி செலவில் கணினிமயமாக்கப்பட்ட பட்டியல் தயாரிக்கும் முறை ஏற்படுத்தப்பட உள்ளன. இதனால் கணினிமயமாக்கப்பட்ட பணிகள், வருகின்ற ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும். அதற்குப் பின்பு இந்த மின் பயனீட்டாளர்கள் கட்டணம் கட்ட வேண்டும் என்று சொன்னால், எந்த அலுவலகத்திலும், எங்கே வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் கட்டிக்கொள்ள முடியும். அந்தப் பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. அதாவது, அந்த மின் விநியோக மாற்றியில் குறைந்த மின்னழுத்த மின் தேக்கிகள் நிறுவுதல்; மின் இழப்பைத் தவிர்ப்பதற்கும் மின் பாதைகளை மேம்படுத்தவும், குறைந்த அழுத்த மின் தேக்கிகள் ரூபாய் 24.39 கோடி செலவில் அனுமதிக்கப்பட உள்ளன. இந்தத் திட்டத்தின்மூலமாக மின் பாதைகளில் இணைப்புப் பாதைகள் உருவாக்கப்படும். துணை மின் நிலையங்களில் உயர் மின் அழுத்த மின் தேக்கிகள் நிறுவப்படும். மின்

[2006 ஜனவரி 25

நிலையத்திலுள்ள கருவிகளைச் சீரமைத்து மேம்படுத்தப்படும். ஆக, இத்திட்டத்தின்மூலமாக அந்த சீர்காழி நகரிலும், மயிலாடுதுறையிலும் இந்தப் பணிகள் செய்யப்படவிருக்கின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை, சீர்காழி நகருக்கும், மயிலாடுதுறைக்கும் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக மத்திய அரசின் மின் அமைச்சகம் திட்டங்களை அனுமதிப்பதில் தற்பொழுது சில முன்னுரிமைகள் கொடுக்கவேண்டும் என்பதற்காகச் சில விதிமுறைகளை உருவாக்கி இருக்கிறது. அந்த அடிப்படையில், மாவட்டத் தலைநகரங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, மக்கள் தொகை 50 ஆயிரத்திற்கும் மேலுள்ள நகரங்களுக்கு இரண்டாவது முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மூன்றாவதாக, மக்கள் தொகை 50 ஆயிரத்திற்குக்கீழே உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், தேசிய அனல் மின் கழகம், மத்திய மின் அமைச்சக அலுவலக அதிகாரிகளுடன் 9-7-2004 அன்று, நமது மின் துறை அதிகாரிகள் விவாதித்து, ஏற்கெனவே அந்த 50 ஆயிரத்திற்கும் மேலுள்ள நகராட்சிகளுக்கு 43 திட்டங்கள், ரூபாய் 33.23 கோடி மதிப்பீட்டிலும் 19-10-2004-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை, இந்தத் தொகுப்பிலே இடம் பெறுகிறது. ஆகவே மயிலாடுதுறையில் அந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் நிலையங்களைத் தகுதி மாற்றம் செய்வதற்குரிய முயற்சிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே விரிவாக எடுத்துச் சொன்னார்கள். அதைப் போலவே தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகளாக மன்னார்குடி, மூவாநல்லூரிலே செயல்படுகிற 110 கிலோ வாட் மின் நிலையத்தை 250 மெகா வாட் மின் நிலையமாக மாற்றவேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனை செய்யப்பட்டு, விரைவாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற அநேக எதிர்பார்ப்போடு அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படுமா? அதேபோல



2006 ஜனவரி 25]

கூத்தாநல்லூர், உள்ளிக்கோட்டை பகுதிகளிலே இருக்கக்கூடிய துணை மின் நிலையம் 30 கிலோ வாட் சக்தி உள்ளதாகத்தான் இருக்கிறது. அது போதுமானதாக இல்லை. ஆகவே அதை 110 மெகா வாட் சக்தி உள்ளதாக மாற்றுவதற்குரிய முயற்சியையும் அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகுதியின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும், நிதிநிலைமைக்கேற்பவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் என்கிற A.P.D.R.P. திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். சாதாரண மின் திட்டத்திற்கும், இந்த விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் என்ன வித்தியாசம்? ஏனென்றால், சென்னையைப் போன்ற ஒரு பெரிய அளவிலே ஜனத் தொகை இருக்கக்கூடிய இடத்தில், சரியாக மின் மாற்றிகள் இல்லாத காரணத்தினாலும், line loss இருக்கிற காரணத்தினாலும், முந்தாநாள்கூட MLA Hostel-இல் இருக்கக்கூடிய D Block-இல் 20 நிமிடம் lift நின்றுபோய், நான் மாட்டிக்கொண்டு படாத பாடுபட்டு பிறகு யார்யாரோ ஓடிவந்து மீட்டார்கள். ஆகவே, line loss இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே குறைந்த line loss உள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் ஆளுகின்ற—காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற—மாநிலங்களிலேகூட, 25 சதவீதம், 30 சதவீதம் மின் இழப்பு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், பீகாரிலே 40 சதவீத மின் இழப்பு இருக்கிறது. ஆகவே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சிறந்த கட்டமைப்பு நிருவாகத்தின் காரணமாக புரட்சித் தலைவி

[2006 ஜனவரி 25

அம்மாவினுடைய தொலைநோக்குப் பார்வையோடு எடுத்த பல்வேறு சீரமைப்பு நடவடிக்கைகளின் காரணமாக, இந்தியாவிலேயே குறைந்த மின் அழுத்தம் உள்ள line loss உள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் அந்த line loss—ஐக் குறைப்பதற்கு 18 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைப்பதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அறிவுரையின்பேரில் பல்வேறு நடவடிக்கைகளை, சீரமைப்பு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக, மற்றொன்றைக் கேட்டார்கள். சாதாரண திட்டத்திற்கும் இந்த A.P.D.R.P. திட்டத்திற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டார்கள். இது மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்பேரில், மத்திய அரசினுடைய மின் துறை அமைச்சகத்தால் அங்கே உருவாக்கப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தின்மூலமாக மத்திய அரசும் உதவி செய்கிறது. மத்திய அரசு இந்தத் திட்டத்திற்குக்கூட நமக்கு 397.77 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. இதிலே 225.69 கோடி ரூபாய் மானியமாகவும், 172.08 கோடி ரூபாய் கடனாகவும் கொடுத்திருக்கிறது. இது ஒரு சிறப்புத் திட்டம். மற்ற விரிவாக்கத் திட்டங்கள் அனைத்தும், தன்னுடைய சொந்த நிதியிலிருந்து, தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்தினுடைய சொந்த நிதியிலிருந்து மாநில அரசினுடைய உதவியோடு, அவர்களுடைய சொந்த நிதியிலே செய்கின்ற திட்டம். இது மத்திய அரசு உதவியோடு மாநில அரசும் சேர்ந்து, இணைந்து செயல்படுத்துகிற திட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். ரமணீதரன்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி இருந்தும்கூட மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கிக்காட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோபிசெட்டிப்பாளையம், கெட்டிச்செவியூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசுக்குக் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2006 ஜனவரி 25]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 102, திரு. செ. அண்ணாதுரை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**102—**

## துணை மின் நிலையம்

*** 73164—திரு. செ. அண்ணாதுரை:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதி, பாப்பாக்குடியில் துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், பணிகள் தொடங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதி, பாப்பாக்குடியில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திற்கான பணிகள் அனைத்தும் முடிந்து, 21-1-2006 அன்று சோதனை மின்னோட்டம் செய்யப்பட்டது. மேற்படி துணை மின் நிலையம் வெகு விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் ஏந்தலாய் விவசாயிகளின் விடிவெள்ளியாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, நான் 2001 கன்னிப் பேச்சிலே எனது தொகுதியில் பாப்பாக்குடி, நடுவலூர் ஆகிய இடங்களுக்குத் துணை மின் நிலையம் வேண்டுமென்று அம்மா அவர்களிடத்திலே

[2006 ஜனவரி 25

கோரிக்கை வைத்து, கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுடைய கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு இரண்டு துணை மின் நிலையங்களையும் வழங்கிட்ட அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களுடைய சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இயக்கப்பட இருக்கிற இந்த பாப்பாக்குடி துணை மின் நிலையத்தின்மூலம் பயனடையும் கிராமங்கள் எவையெவை என்பதனைத் தங்கள் வாயிலாக அறிவதுடன், எங்கள் மாவட்டத்தில் திருமானூர், பாப்பலூர் ஒன்றியங்களை டெல்டாவாக அறிவித்து, 30-12-2004 வரை மனு செய்த விண்ணப்பதாரர்களுக்கு உடன் மின் இணைப்பு வழங்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு இளவழகன் சார்பாகவும் நன்றியை அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், அப்படி வழங்கப்பட இருக்கின்ற மின் இணைப்புகளுக்கு ஏதுவாக மேலும் கூடுதலாக துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் பரிசீலனை உள்ளதா என்பதனையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், திருச்சி மின் பகிர்மான வட்டத்துக்கு அரியலூர் கோட்டத்திற்கு உட்பட்ட, ஜெயங்கொண்டம் தொகுதி, பாப்பாக்குடியில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையப் பணிகள் 21-1-2006 அன்று முடிவடைந்து, சோதனை ஓட்டம் செய்யப்பட்டுள்ளது. இதனுடைய மதிப்பீடு 149.27 இலட்சம் ரூபாய். இதனால் பயனடையும் ஊர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இந்தத் துணை மின் நிலையத்தின் மூலமாக பாப்பாக்குடி, மீன்சுருட்டி, காடுவெட்டி, மேலணிகுழி, வங்குடி, எரவாங்குடி, வெட்டியார்வெட்டு, சலுப்பை, சத்திரம், கங்கைகொண்ட சோழபுரம், முத்துசேர்வா மடம், வீரபோகம், பிள்ளைபாளையம், வீரசோழபுரம், மெய்காவல்புத்தூர், வேம்புக்குடி, தென்னவநல்லூர் ஆகிய ஊர்கள் இந்தத் துணை மின் நிலையத்தின் மூலமாகப் பயனடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் புதிய மின் இணைப்புகள் அந்தப் பகுதியிலே கூடுதலாக வழங்கியிருப்பதை— விவசாயிகளுக்காக இன்றைக்குப் புதிய மின் இணைப்புகள் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளதை— மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டி, அதற்காக அந்தப் பகுதியிலே கூடுதல் துணை மின் நிலையங்கள் உருவாக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்தப் பகுதியினுடைய காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்குப் புரட்சித்



2006 ஜனவரி 25]

தலைவி அம்மா அவர்கள் இப்போது சிறப்பு முன்னுரிமை அடிப்படையிலே மின் இணைப்புகள் வழங்கியதன் காரணமாக, அந்தப் பகுதியிலே கூடுதலாகத் தேவைப்படுகின்ற புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற கருத்துருவும் அரசின் பரிசீலனையில் உள்ளது. டி. பழூரில் 33/11 புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அண்ணாதுரை

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதையெல்லாம் வழங்குவதோடு மட்டுமல்லாமல் எங்கள் பகுதிக்கு என்னென்ன தேவை என்பதனைத் தானே உணர்ந்து வழங்குகிறேன் என்று, இன்றைக்கு எங்கள் பகுதியை டெல்டா பகுதியாக அறிவித்ததோடு மட்டுமல்லாமல், மேலும் கூடுதலாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியில் காளிப்பேட்டை என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அங்கே தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பகுதிக்கு 33 மெகா வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் ஒன்று அமைத்துக் கொடுத்தார்கள். அதற்காக அந்தப் பகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், முதல்வராக இருந்தபொழுது பாப்பிரெட்டிப்பட்டியில் 33 கிலோ வாட் திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையம் அங்கே அமைக்கப்பட்டது. தற்போது பாப்பிரெட்டிப்பட்டி, வட்டத்தின் தலைமையிடமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே தொழிற்கூடங்கள் பெருகியிருக்கின்றன.

வீடுகளுக்கான மின்சாரம் அங்கே அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அப்பகுதியில் நீண்டகாலமாக மக்கள் 110 கிலோ வாட் மின் திறனைக் கொண்டதாக ஆக்க வேண்டுமென்று கேட்டு வருகிறார்கள். தற்போது அத்துறைமூலமாக அரசுக்குக் கோப்பு வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு அங்கே 33 கிலோ வாட் மின் திறன் கொண்ட அந்தத் துணை மின் நிலையத்தை 110 கிலோ வாட் மின் திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரிலேயே ஒரு துணை மின் நிலையம் அமைக்க அனுமதி அளித்தும் Revenue துறையின்மூலம் இதுவரை இடம் வழங்கப்படாமல் இருக்கிறது. அதேபோல கடற்கரையோரங்களில் இருக்கின்ற பல கிராமங்களிலே இப்படிப்பட்ட பணிக்கு இடம் கிடைக்காமல் அங்கேயெல்லாம் அந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்படாமல் வீளக்குகள் சரியாக எரியாத நிலை இருக்கிறது. ஆகவே, அதை உடனடியாக சரிசெய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் குறிப்பிடுவதுபோல, சில இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்குப் பணிகளை மேற்கொள்கின்றபொழுது, அதற்குரிய இடங்கள் கிடைப்பதில்லை. அதற்காக அந்தப் பகுதியிலே மின்சார வாரியம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, வருவாய்த் துறையுடன் இணைந்து, வருவாய்த் துறை அதிகாரிகளுடன் அடிக்கடி கலந்துபேசி அதற்காக சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கூட்டு நடவடிக்கையாக நிலத்தைக் கையகப்படுத்துகின்ற பணிகளிலே, இப்போது தமிழ்நாடு மின்சார வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மிக விரைவிலே நிலம் கையகப்படுத்தப்பட்டு அந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 110 துணை மின் நிலையங்கள் அமைவதற்குண்டான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடங்களுக்கு விலை நிர்ணயிக்கின்றபொழுது, மின்சார வாரியமானது வர்த்தகரீதியில் செயல்படுவதால் அந்த இடங்களுக்குக் கூடுதலாக, அந்தப் பகுதியில் இருக்கின்ற guideline value-வின்படி,இரண்டு மடங்காகக் கேட்கப்படுவதால், பல இடங்களில் இந்த இடங்களைப் பெறுவதில் தடை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, தனியாகக் குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்களின்வாயிலாக இப்படிப்பட்ட இடங்கள் விரைந்து கிடைப்பதற்கு வழிவகை செய்வதோடு, 2001 ஆம் ஆண்டிலிருந்து இந்த 2006 ஆம் ஆண்டு வரையில் எத்தனை துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன ? எத்தனை துணை மின் நிலையங்களுக்குண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் சொன்னதுபோல், சென்னை மாநகரில் 110 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடம் கையகப்படுத்துவதிலே, இடம் கிடைப்பதில் சற்று பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, கிராமப் பகுதிகளிலேகூட அந்தப் பிரச்சினை இருக்கின்றபோது சென்னை மாநகரில் அந்தப் பிரச்சினை சற்று அதிகமாகவே இருக்கிறது. அந்த நிலத்தைக் கேட்டால், வருவாய்த் துறையிலே அந்த நிலத்தை ஒதுக்குகின்றபோது, இப்போதுள்ள மார்க்கெட் நிலவரத்திற்கு அதை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். Government guideline-லேயுள்ள market நிலவரத்திற்கு வாங்குவதற்குக்கூட, இன்றைக்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்கை அளவிலே ஒப்புக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வருவாய்த் துறையோடு இணைந்து, சென்னை மாநகரிலும், அதற்கென்று தனிக் கூட்டங்கள், கலந்துரையாடுகின்ற வகையில் ஆய்வுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து,

அதன்மூலமாக மிக விரைவிலே சென்னை நகரிலே நிலங்கள் கையகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் கேட்டுள்ளார். இந்த ஆண்டிலே, ஏறத்தாழ 28 துணை மின் நிலையங்களுக்கான பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மீதியிருக்கின்ற 39 துணை மின் நிலையங்களுக்கு நிலம் கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகளும் விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ.கு. முருகேசன்.

**திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பி.ஜி. பாளையம், உத்திரகவுண்டன்பாளையத்திலே 110 kilo volt துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நிதியை ஒதுக்கியும் இன்னும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. அந்தப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதைப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேவேளையிலே, எனது தொகுதிக்குட்பட்ட மல்லியக்கரையில் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பணியும் எப்போது தொடங்கப்படும் என்பதைப் பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மின்சார வாரியத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று இப்போது அரசு ஆணையிட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் நான் ஏற்கெனவே சொன்னதுபோல, சில இடங்களில் நிலம் கிடைப்பதிலே இருக்கின்ற பிரச்சினையின் காரணமாகத்தான் துணை மின் நிலையம் அமைப்பதிலே காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. அந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்காகத்தான் இப்போது சிறப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பணியும் மிக விரைவிலே முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 103, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**103—**

**தொழிற்கூடம்**

*** 41067—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி மலைப் பகுதியைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் கல்லுடைக்கும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி மலைப் பகுதியைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் கல்லுடைக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூலாம்பட்டி, வடக்குத்திக்காடு, குஞ்சாம்பாளையம், ஆடையூர், பக்கநாடு, கல்லுருளைக்காடு, புளியம்பட்டி ஆகிய பகுதிகளிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்தச் செயற்கை வைரக் கற்களைத் தோண்டி எடுத்து அவர்கள் அத்தொழிலைச் செய்து அதிலிருந்து தங்களுடைய குடும்ப வாழ்க்கையை மிகவும் சிரமப்பட்டு நடத்தி கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்குப் போதுமான வருமானம் கிடைக்கவில்லை. அத்தோடு அந்தச் செயற்கைக் கற்களை வெளி மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்துகொள்கிறார்கள். இடைத்தரகர்கள் மூலமாக அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. ஆகவே, அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை அரசே ஏற்று அங்கு ஒரு தொழிற்கூடம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதனை உங்கள்மூலம் அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடப்பாடி, பூலாம்பட்டி பகுதியில்

[2006 ஜனவரி 25

blue metal என்ற ஜல்லி வகைகள் தயாரிக்கப் பயன்படும் cornetite என்ற பாறை வகைகள் அப்பகுதியில் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், இப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் I.G. அவர்கள் செயற்கை வைரக் கற்களைப் பற்றி இங்கே குறிப்பிடுகின்றார்கள். I.G. தானே? (குறுக்கீடு) I.G. குறிப்பிடுகின்றார்கள். ஆக, அது சிறு தொழிலாகக் கருதப்படுகிறது. சிறுதொழில்கள் அமைக்கவேண்டும் என்கின்றபோது, மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாகவே சில சட்ட திட்டங்களுக்குட்பட்டு அது அமைக்கப்படவேண்டும். அவ்வாறு அமைக்க தனியார்கள் யாரேனும் முன்வரும்போது, அவர்களுக்கு மாவட்டத் தொழில் மையங்கள்மூலமாகவும், வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்தும், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய அனுமதியையும் பெற்ற பின்பு, அவர்கள் அதை அமைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார்கள் இதுபோல சிறுதொழில்கள் அமைப்பதனால், அங்கு அந்தத் தொழிலையே நம்பியிருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மிக வறுமையிலே வாடிக் கொண்டிருக்கின்றன. அந்த வறுமை நிலையைத் தொழிலாளர்களிடமிருந்து போக்குவதற்கு, அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கம் சிறுதொழில் துறை மூலமாக ஒரு சிறிய தொழிற்கூடம் அமைக்க முன்வருமா என்பதனை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, பின்னர் ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல் உடைக்கின்ற தொழில், சமீப காலமாக, இல்லாத ஒன்றாகப் போய்க் கொண்டிருக்கின்றது. அரசுக்கு வரவேண்டிய வருமானம் இல்லாத காரணத்தினால், கள்ளத்தனமாக இன்றைக்குக்



2006 ஜனவரி 25]

கற்களை உடைக்கின்ற சூழ்நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம், ஏற்கெனவே அரசாங்கம் அனுமதி கொடுத்திருந்த அந்தக் குவாரிகளில் இன்றைக்கு இரண்டு பனைமரம், மூன்று பனைமரம் உயரத்திற்கு மிகப் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டதற்குப் பிறகு, அதை மேய்க்கால் புறம்போக்கு என்று சொல்லி, நீங்கள் தடை செய்திருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு அங்கே கல் உடைக்கப்படுவதற்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் இல்லையென்றாலும், கற்கள் எடுக்கப்படுகின்றன; அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானம் இன்றைக்குத் தடைபட்டிருக்கின்றது. அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Blue metal, அதாவது, கல் குவாரி எடுத்து நடத்துபவர்களைப் பற்றி இங்கே குறிப்பிடுகின்றார்கள். அவர்களுடைய பகுதியில் அதிகமாக அது இருக்கின்றது. என்றாலும்கூட, கள்ளத்தனமாக, திருட்டுத்தனமாக யாரேனும் கற்களை ஏற்றிச் செல்கின்றபோது, நிச்சயமாக அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து, அரசாங்கத்தின் வரி வருவாயை அதிகமாக ஏற்படுத்திக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மதுரை மாவட்டத்திலே இருக்கின்ற சில ஒன்றியங்களிலே இந்தக் கல் குவாரிகள் ஏற்கெனவே பல ஆண்டுகளாக ஏலம் விடப்பட்டிருந்த நிலையில், கடந்த 3, 4 ஆண்டுகளாக அது ஏலம் விடப்படாமல் நிறுத்தி வைக்கப்படுகின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், மலைப் பகுதியை ஒட்டியிருக்கிறது. அதிலே HACA Clearance என்று சொல்கிறார்கள். அதை clear செய்தால்தான், அந்தக் குவாரிகளை எல்லாம் ஏலம் விடமுடியும் என்று இந்த மூன்று ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அவை ஏற்கெனவே உபயோகத்தில் இருந்த குவாரிகள்தான். அவை நிறுத்தப்பட்டதன் காரணமாக, நமது அரசுத் துறையிலே செய்கின்ற வேலைகளுக்கெல்லாம் பல கிலோ மீட்டர் தூரம் சென்று அந்தக் கற்களையும் ஜல்லிகளையும் எடுத்து வருகின்ற ஒரு சூழல். இதனால் அரசாங்கத்திற்குத்தான் நிதி இழப்பீடு ஏற்படுகிறது. அங்கே ஓரிரு கிலோ மீட்டர் தொலைவிலே கிடைக்கின்ற கற்களைப் பயன்படுத்தமுடியாமல், 30 கிலோ மீட்டர்

தொலைவிற்குச் சென்று அதை எடுத்து வருகின்ற நிலை ஏற்படுமேயானால், அது அரசாங்கத்திற்குத்தான் அந்தப் போக்குவரத்துச் செலவு சுமையாக இருக்கிறது. எனவே, அதைக் கவனத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த HACA Clearance–ஐப் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தாமலும், குந்தகம் ஏற்படுத்தாமலும் இருக்க, அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவே Hill Area Conservation Authority என்கின்ற குழுவாகும். மலைப் பகுதியிலே ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சிப் பணிகளைச் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாதவண்ணம் மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட குழு அது. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் சொல்வது, ஏற்கெனவே நடைபெற்ற குவாரி, அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் அது Hill Area Conservation Authority–ன்கீழ் வருமா என்பதையும் ஆராய்ந்து, அந்த இடத்தில் ஏன் நிறுத்தப்பட்டது என்பதற்கான காரணத்தை அறிந்து, உடனடியாக அது நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல் தொழிற்கூடங்களை அனுமதிக்கும்போது, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதையும், noise pollution level என்ற அந்த விழுக்காடு, அந்த சப்தத்தின் அளவு எவ்வளவு இருக்கவேண்டும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல் குவாரி உடைக்கப்படுகின்றபோது, முக்கியமாகக் கருதப்படவேண்டியது பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள், குடியிருப்புப் பகுதிகள் போன்ற பகுதிகளிலிருந்து





300 மீட்டர் தொலைவில் இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியமான விதி. அதேநேரத்தில், மாசு கட்டுப்பாடு வாரியத்தினுடைய அனுமதி பெற்று இருக்க வேண்டும் என்பதையும் முக்கியமான விதியாகக் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே, சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்கும், சேலத்திலிருந்து பெங்களூருக்கும், சேலத்திலிருந்து நாமக்கல், சேலத்திலிருந்து உளுந்தூர்பேட்டை ஆகிய பகுதிகளுக்கெல்லாம் தேசிய நெடுஞ்சாலைகள் –Highways– நெடுஞ்சாலைத் துறைமூலமாக, சாலைகள் அகலப்படுத்தும் பணிக்கு டெண்டர் விடப்பட்டு, பணிகள் துவங்குவதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால், அந்தச் சாலைகளுக்கெல்லாம் இலட்சக்கணக்கான டன் கற்கள், Blue Metal-கள் தேவைப்படுகின்றன. ஆனால், சேலம் மாவட்டத்திலே மிகக் குறைந்த அளவிற்கு கருங்கல் குவாரிகளில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு, சேலம் மாவட்டத்திலே பல்வேறு குவாரிகள் இருக்கின்றன; அவற்றிற்கு FOB கொடுத்து, அவற்றை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எடப்பாடிக்குக் கேளுங்கள். சேலத்திற்குக் கேட்கிறீர்கள்!

**திரு. மு. கார்த்தி:** இல்லை, அந்தக் கருங்கல் குவாரிகள் பற்றிதான். அந்தக் கல் குவாரிகளைக் கூடுதலாக அமைத்து—மேற்கண்ட அந்தச் சாலைகள் எல்லாம் அமைப்பதற்கு கல் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; ஆகவே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், சேலம் மாவட்டத்திலே இன்னும் இருக்கின்ற, வேலை செய்யாதிருக்கின்ற கருங்கல் குவாரிகளுக்கு விரைவில் அனுமதி வழங்கி—அந்தச் சாலைகளை எல்லாம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே four lane road போடுவதற்காக crusher கற்கள் தேவைப்படுகின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே, புதிதாக அங்கே குவாரிகளை அமைக்க முடியாது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், பாறைகள் இருக்கின்ற நாமக்கல், ராசிபுரம், ஏற்காடு, சேலம், ஆத்தூர் ஆகிய சில பகுதிகளில் இந்தக் கல்

[2006 ஜனவரி 25

உடைப்பதற்கு HACA clearance தேவைப்படுகிறது. அது என்ன என்பதைப் பார்த்து ஆராய்ந்து அங்கு சாலைகள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல் குவாரிகள், பொதுவாக, இன்றைக்கு ஒருவிதமாகத் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அரசினுடைய வேலைகளுக்கு, அது சாலைகளானாலும் சரி, நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களில் வரக்கூடிய கட்டடப் பணிகளானாலும் சரி, அவற்றிற்குத் தேவையான இந்தக் கற்கள் கிடைக்காத காரணத்தால், அந்த வேலைகள் தாமதமாகின்ற ஒரு சூழ்நிலையும் இருக்கின்றது. எனவே, இதிலே கையாண்டு வருகின்ற சில விதிமுறைகளைத் தளர்த்தி அரசு வேலைகளுக்கு முன்னுரிமை தருகின்றவகையில் இந்தக் கல் குவாரிகளுக்கு, அதனுடைய உரிமம் கிடைக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை மேற்கொள்ளுவார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு, வேலைகள் நடைபெறுகின்ற பகுதிகளில் crusher-கள் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது; நிச்சயமாக தடைபடாதவண்ணம் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த Blue metals உடைக்கின்றபோது, உரிமம் இல்லாமல் எங்கும் உடைக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல பகுதிகளிலே அந்த labourer-களுக்குள்ளே சண்டைகள் ஏற்பட்டு கொலைகூட நடைபெற்றிருக்கிறது. பல பகுதிகளிலே அதிகாரிகள் போய், அந்த Blue metals உடைக்கிற இடத்திலே பிடிக்கப்போகும்போது, அதிகாரிகளின் மேலே லாரி ஏற்றியிருக்கிறார்கள். பல பகுதிகள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குற்றச்சாட்டுச் சொல்லக்கூடாது.



2006 ஜனவரி 25]

**திரு. போளூர் வரதன்:** இல்லை. கேள்விக்குத்தான் வருகிறேன். என்னுடைய தொகுதியிலே 10, 15 Blue metals உடைக்கக்கூடிய இயந்திரங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே யாரும் உரிமம் பெற்று மலையை உடைப்பதாகத் தெரியவில்லை எனக்கு. அப்படி அதிகாரிகள் அங்கே செல்கின்றபோது அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு தனியாருக்கு உள்ள உடைக்கக்கூடிய அந்த உரிமத்தை இரத்து செய்து அரசாங்கமே அதை ஏற்று நடத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்பதை உங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, குறிப்பிட்டு எந்தெந்த இடங்களில் தவறாக நடைபெறுகிறது என்று சுட்டிக்காட்டினால், தவறாக நடைபெறுகின்ற இடங்களில் நிச்சயமாக அரசு கடும் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அரசே எடுத்து நடத்துவதற்கு தற்போது அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 104, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**104—**

**பயிற்சி மையம்**

*** 22744—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், இந்தப் பயிற்சி மையம் ஏற்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

[2006 ஜனவரி 25

(ஆ) தமிழ்நாடு மாநில அளவிலான உணவு பதனிடும் தொழில்நுட்பப் பயிற்சி மையத்தினை சேலத்தில், மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் நிதியுதவியுடன் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக தக்க கருத்துருவை 4–11–2003 அன்று வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் மைய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளார். இதுசம்பந்தமாக அந்த அமைச்சகத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய 15 அம்சத் திட்டத்தின்மூலம், தமிழகத்தில், உணவு உற்பத்தியில் பசுமைப் புரட்சி ஏற்பட, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கிடவும், விவசாயிகள் பொருளாதாரத்தில் உயர்நிலை அடையவும், தொலைநோக்குச் சிந்தனையோடு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொடுத்தும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1014 ரூபாய் கொடுத்தும், உலகம் போற்றும் உன்னத திட்டமாம் உழவர் பாதுகாப்புத் திட்டத்தையும் வழங்கிய, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை உருவாக்கி வருகிறது. அதன் அடிப்படையில், திராட்சை, முந்திரி, வெங்காயம், வாழைப்பழம், மஞ்சள், பருத்தி, மருத்துவ குணம் கொண்ட பயிர்கள் தொழில்நுட்ப முறையில் செயல்பட்டு வருகின்றன. எனவே, இதுபோன்ற உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் பயிற்சிகளை அறிய, மைய அரசின் அனுமதியை விரைவில் பெற்று சேலம் மாவட்டத்தில் இந்தப் பயிற்சி மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் அனுமதியோடு கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று மத்திய அரசினுடைய உணவு பதனிடும் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சுபோத் காந்த் சகாய் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோதுகூட, இதுகுறித்து நேரடியாகக் கோரிக்கை வைக்கப்பட்டு, இதற்கு உடனடியாக நிர்வாக அனுமதியும், நிதி



2006 ஜனவரி 25]

ஒதுக்கீடும் கிடைத்திட உதவ வேண்டுமென்று வேண்டுகோள் வைத்ததற்குப் பிறகும்கூட, ஒன்பது முறை நினைவூட்டுக் கடிதங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதற்குப் பிறகும்கூட, மூன்று முறை ஆய்வுக் கூட்டத்திலே நினைவுபடுத்தியதற்குப் பிறகும்கூட, இன்னும் மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்காதபட்சத்திலே இந்தப் பயிற்சி மையத்தை உடனடியாக துவங்க முடியவில்லை என்பதையும், மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சுபோத் காந்த் சகாய் அவர்களிடத்திலே தொடர்பு கொண்டு, உடனடியாக இந்தத் திட்டத்திற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்க ஆவன செய்யுமாறு கோருகின்றோம் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயம் செய்ய முடியாத நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கு, விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகளை உதவிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து வருகிறது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நான்கரை ஆண்டுக் கால பொற்கால ஆட்சியிலே, வேளாண் பெருமக்களுக்காக பல்வேறு சலுகைகள் வழங்கி வந்ததை, நான் இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டி அமர்ந்திருக்கின்றேன். அதோடு மட்டுமின்றி, இன்ன[illegible]க்கு நீர் வளத்தை மிச்சப்படுத்துவதற்காகவும், மின்சாரத்தைச் சேமிப்பதற்காகவும், உற்பத்தியைப் பெருக்கி உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காகவும், பத்தாண்டுகளுக்கு மேலாக இருக்கின்ற செயல் திறனற்ற மின் மோட்டார்களை மாற்றுவதற்காகவும், இன்றைக்கு 5 H.P. மற்றும் 5 H.P.-க்குக் கூடுதலாக இருக்கின்ற குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார்களை மாற்றுவதற்காகவும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 25 சதவீதத்திலே மானியம் கொடுக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 5 H.P.–க்குக் குறைவாக மற்றும் அதற்கும் கீழாக இருக்கின்ற மோட்டார்களை மாற்றுவதற்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். Starter மற்றும் wire–களை மாற்றுவதற்காக 50 சதவிகித மானியத்திலே இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மானியம் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்

[2006 ஜனவரி 25

என்பதையும், சொட்டு நீர்ப்பாசனத்திற்காக, தெளிப்பு நீர்ப்பாசனத்திற்காக, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தோடும், பெரிய விவசாயிகளுக்கு 25 சதவிகித மானியத்தோடும் இன்றைக்கு மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்கள்மூலமாக இன்றைக்கு தரிசு நிலங்களையெல்லாம் விளை நிலங்களாக மாற்றுவதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்கள்மூலமாக மானியத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று, விசைத் தெளிப்பான்கள், கைத் தெளிப்பான்கள் போன்ற கருவிகளுக்கும் இன்றைக்கு மானியத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு பதப்படுத்தும் பயிற்சி நிலையம் அமைப்பது, மத்திய அரசைக் கலந்தாலோசித்து கருத்துரு பெற்று ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நாமக்கல் மாவட்டத்தில், கொல்லிமலையில், இராசிபுரத்தில் வெங்காயம், மா, பலா போன்ற விவசாயப் பொருட்கள் அதிகமாக விளைகின்றன. ஓரிரு நாட்களிலே அவையெல்லாம் அழுகக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. குறிப்பாக, வெங்காயத்தைப் பொறுத்தவரை, கிலோ 50 பைசாவுக்கும் விற்கப்படுகிறது; 5 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. அதேபோல, தக்காளியும் ஒரு நேரத்தில் 50 பைசாவுக்கும், 5 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு, அப்படியொரு கருத்துரு வரும்பொழுது, நாமக்கல் மாவட்டத்தில், ராசிபுரத்தில் அந்த உணவு பதப்படுத்தும் நிலையத்தை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, நமது நாட்டில் உற்பத்தியாகின்ற பழம் மற்றும் காய்கறிகளிலே ஏறக்குறைய 30 விழுக்காடுகளுக்கு மேலாக, இன்றைக்கு அறுவடைக்குப் பின் நேர்த்தி செய்யாத காரணத்தினாலே, அவை நம்முடைய பயன்பாட்டிற்கு வராமல் இருக்கின்றன என்பதையும், மேலும், தற்சமயம் விளைவிக்கப்படுகின்ற மொத்த விளைபொருட்களிலே, ஒரு சதவிகிதம் உணவுப் பொருட்கள் மட்டும்தான் இன்றைக்குப் பதப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும்



2006 ஜனவரி 25]

நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலேதான் இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, உணவு பதப்படுத்தும் தொழில்களுக்குச் சிறந்த பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு, சேலத்திலே அந்தப் பயிற்சியைத் தொடங்க வேண்டுமென்கின்ற நல்ல எண்ணத்தோடுதான் மத்திய அரசினுடைய மேலான ஒப்புதலுக்காக, நிர்வாக அனுமதிக்காக, மாண்புமிகு அம்மா அவர்களாலே கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும், விரைவில் அந்தக் கருத்துருவிற்கு ஒப்புதல் பெற்று, அந்த உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கு பயிற்சி மையத்தைத் தொடங்க, போர்க்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சுருக்கமாக, Minister போலச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில், இந்த உணவு பதப்படுத்துகிற மையம் ஒன்றே ஒன்றுதான் இதுவரை வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து—ஏனென்றால், mutton-எல்லாம் இப்பொழுது 120 ரூபாய் கிலோவிற்கு விற்கப்படுகிறது—அதையெல்லாம் பதப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்குமேயானால், அதேபோல தக்காளி, 5 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது, சில நேரங்களிலே கிலோ 40 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இப்படி, சைவ உணவுப் பொருட்களானாலும் சரி, அசைவ உணவுப் பொருட்களானாலும் சரி, இந்த உணவு பதப்படுத்துகிற மையங்கள் இல்லாத காரணத்தினாலே, அவை அந்தந்தக் காலகட்டத்தில் உச்சகட்டத்திற்கு விலை போகிற காரணத்தினாலே, மக்களாலே பயன்படுத்தமுடியாமல், மக்கள் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தினாலே, நீங்கள் உடனடியாக—ஒரேயொரு மையம் சித்தேரியிலே மட்டும் வந்திருக்கிறது—உணவு பதப்படுத்தக்கூடிய இந்த மையங்களை வேலூர் மாவட்டத்தில் அதிகமாக உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு பதப்படுத்தும் தொழில்களை

[2006 ஜனவரி 25

அமைப்பதற்காகத் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்கின்ற தொலைநோக்குத் திட்டத்தின்மூலமாக, அதற்குப் பல்வேறு சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகத்திலே இருக்கின்ற 385 ஒன்றியங்களிலேயும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக, உணவு பதப்படுத்தும் தொழில்களைத் தனியார் தொடங்குவதற்கு முன்வந்தால், அதற்குரிய சலுகைகளை, மானியங்களை நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்குவதற்கு, மாவட்டத் தொழில் மையத்தினுடைய மேலாளர் அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

முற்பகல் 10–45

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திலே கொய்யாவும், தேங்காயும் அதிகமாக விளைகின்றன. ஆகவே, அவற்றைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைக்க அரசு முன்வருமா? அல்லது தனியார்கள் அப்படிப்பட்ட மையங்களை அமைக்கும்போது என்னென்ன உதவிகள் அரசு செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டதைப் போன்று, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக வேளாண் சார்ந்த பொருட்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக உருவாக்குவதற்காக, இன்றைக்குப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்கின்ற மகத்தான திட்டத்தை, தொலைநோக்குத் திட்டத்தை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அவருடைய மாவட்டத்திலே அவர்களுடைய பகுதியிலே கொய்யா மற்றும் பல்வேறு பழ வகைகளுக்கு, அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டுமென்றால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு கோடி ரூபாய்க்கு



2006 ஜனவரி 25]

மேற்பட்டிருக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு 25 இலட்சம் ரூபாய்—தளவாடங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காக 15 இலட்ச ரூபாயும், அந்தத் தொழிற்சாலைக்கு மின்னாக்கி வாங்குவதற்காக 15 சதவிகிதம் மானியமோ அல்லது 5 இலட்சம் ரூபாய் மானியமோ, இதில் எது குறைவோ அதை வழங்குவதற்கும், அந்தத் தொழிற்சாலையிலே பாதிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பெண்கள் பணிபுரிவதாக இருந்தால், 5 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்குவதற்கும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக அம்மா அவர்கள் வழிவகை செய்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, மூன்று ஆண்டுகளுக்கு மின் சலுகை—அதாவது, முதலாம் ஆண்டிற்கு 30 சதவிகிதம் மின் சலுகையும், இரண்டாம் ஆண்டிற்கு 20 சதவிகிதம் மின் சலுகையும், மூன்றாம் ஆண்டுக்கு 10 சதவிகித மின் சலுகையும் வழங்குவதற்கு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப்போன்று ஒரு தொலைநோக்குத் திட்டம் தமிழகத்திலே மட்டும்தான் சிறப்பாக வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, திரு. கோவை தங்கம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**105—**

**மிளகு உற்பத்தி**

* **58003—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியார் அருகிலுள்ள சின்னார்பதி பகுதியில் மிளகு பரப்பு அதிகரிப்பு திட்டத்தின்கீழ், மலைஜாதி மக்கள் மூலம் மிளகு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர்

மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியார் பகுதியிலுள்ள சின்னார்பதி பகுதியில் மிளகு பரப்பு அதிகரிப்பு திட்டத்தின்கீழ் மலைஜாதி மக்களுக்கு மிளகு செடிகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மலைவாழ் மக்களுக்கு சுயஉதவிக் குழுக்கள்மூலமாக மிளகு செடிகள் விநியோகம் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை சட்டமன்ற தொகுதியில் சின்னார்பதி, பழையசர்க்கார்பதி, தம்மபதி, கோழிகமுத்தி, எருமைப்பாறை, வலைகளியூர், கூமட்டி, டாப்சிலிப் போன்ற பகுதிகளிலும், காடம்பாறை மாவடப்பு, காடம்பாறை வெள்ளிமுடி, சங்கரன்குடி, அட்டகட்டி, கீழ்புணர்ச்சி, கருமுட்டி, கவர்கல், பாலகனர், சேக்கல்முடி, பரமன்கடவு, உடும்பன் பாறை, ஆனைமுடி, சின்னக்கல்லார், சிங்கோனா, வில்லோனி, ஊசிமலை, அக்காமலை, கருமலை, மானாம்பள்ளி மற்றும் ஆழியார், நெல்லித்துறை, மன்னம் பகுதிகளிலும் மலைஜாதி மக்கள் மிக அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்துகின்றவகையில், மிளகு பரப்பு அதிகரிப்பு திட்டத்தின்கீழ் மலைஜாதி மக்களுக்கு மிளகு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு, பரப்பளவை அதிகரிப்பதற்காக பெருமளவு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி, ஆழியார் நகரைச் சுற்றிலும் உள்ள சின்னார்பதிக்கு அருகில் பில்சின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி, கரியாஞ்செட்டிபாளையம், ஜல்லிபட்டி, கம்பாலப்பட்டி, அர்த்தநாரிபாளையம், சோமந்துறை, தென்சித்தூர், தென்சங்கம்பாளையம், காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர் போன்ற ஊராட்சிகளும், மேலும், கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் ஆகிய சிறப்பு ஊராட்சிகளும் அருகில் உள்ளன. இங்கு பெருந்திரளாக, விவசாயிகள் குடியிருந்து வருகிறார்கள். விவசாயம் செய்து வருகிறார்கள். அருகில் உள்ள சின்னார்பதியில் மிளகு அதிகரிப்புத் திட்டத்தின்கீழ் அரசு நடவடிக்கை எடுத்து உதவினால், நிலங்களை ஒதுக்கீடு செய்து



உதவினால், அருகிலுள்ள கிராமங்களும் வளர்ச்சி அடையும். ஏற்கெனவே மலைஜாதி மக்கள் செய்து வந்த தேன் எடுத்தல், நெல்லிக்காய், புளி போன்றவற்றை இப்போது எடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. வனத்தில், முதலில் செய்த எந்தத் தொழிலையும் செய்யமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். மலைஜாதி மக்கள் வறுமையில் இருக்கிறார்கள். ஆகவே, மலைஜாதி மக்களுக்கு மிளகு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய, சிறுகடன் உதவி கொடுத்து மிளகு அதிகரிக்கும் திட்டத்தின்கீழ் தரிசு நிலம் அல்லது அவர்கள் குடியிருக்கும் வனப் பகுதியைச் சுற்றிலும் இடஒதுக்கீடு செய்து கொடுத்தால், மலைஜாதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைவார்கள். மேலும் அவர்களுக்குக் குடிநீர், தெரு விளக்கு, குடியிருக்க வீடுகள் போன்ற அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சின்னார்பதியில் மிளகு அதிகரிக்கும் திட்டத்தினை, மற்ற மலைஜாதி மக்கள் குடியிருக்கின்ற பகுதிக்கும் விரிவுபடுத்த முன்வருவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ்நாடு முழுவதும் வாசனைப் பயிர்களினுடைய பரப்பளவை நாம் எண்ணிப் பார்க்கின்றபோது 3,81,447 ஏக்கரிலே இன்றைக்கு வாசனைப் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன என்பதையும், கோவை மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே 19,927 ஏக்கர் பயிரிடப்பட்டு வருகின்றது என்பதையும், அதோடுமட்டுமின்றி சின்னார்பதி பகுதியிலே மலைவாழ் மக்களுக்காக 25 சதவிகித மானியத்திலே இன்றைக்கு அந்த வாசனைத் திரவியங்களைப் பயிர் செய்வதற்காக, மிளகு உற்பத்தியை அதிகரிப்பதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, வருங்காலத்திலே மேலும் அந்த மிளகு உற்பத்தியைப் பெருமளவு சாகுபடி செய்வதற்காக நடவடிக்கை துரித அளவிலே மேற்கொள்ளப்படும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

[2006 ஜனவரி 25

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட உடுமலை தொகுதியிலே மலைவாழ் பகுதி அதிகமாக உள்ளது. 18 settlement areas அங்கு உள்ளன. அங்குள்ள மலைவாழ் மக்கள், பெண்கள் சுய உதவிக் குழுக்களை அதிகமாக ஆரம்பித்து, அங்கு சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறார்கள். அங்கே திருமூர்த்தி அணைப் பகுதியிலே பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 150 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலம் ஏற்கெனவே விவசாயத் துறையின்மூலமாக எண்ணெய் வித்துத் துறைக்கு எடுக்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தை அங்கே உள்ள மலைவாழ் மக்களுக்குக் கொடுத்து, அவர்களை அந்த மிளகு அதிகரிப்பு திட்டத்தின்மூலமாக வாசனைத் திரவியங்களான மிளகு போன்றவற்றை உற்பத்தி செய்வதற்குரிய ஏற்பாடுகளை, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், செய்வதற்கு முன்வருவார்களா. என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நல்ல ஆலோசனையை மாண்புமிகு அம்மாவினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, தாயுள்ளத்தோடு அது பரிசீலிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 106, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**106—**

### மாணவர் விடுதி

*** 33509—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 25]

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர். அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரம் ஒரு சிறப்பு வாய்ந்த நகரம். இந்த நகரிலே—கலை நகராக இருக்கிற நகரிலே-- சிறபக் கலைக் கல்லூரி தொடர்ந்து செயலாற்றி வருகிறது. இந்தக் கல்லூரியிலே, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து மாணவர்கள் படித்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த நகரைச் சுற்றி 3 வட்டங்கள் இருக்கின்றன. அந்த 3 வட்டங்களிலும் மாமல்லபுரம், புதுப்பட்டினம், திருக்கழுக்குன்றம், சதுரங்கப்பட்டினம், மணமை, வாயலூர், வெங்கப்பாக்கம் ஆகிய பகுதிகளிலே உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் ஏராளமாக இருக்கின்றன. அங்கே பிற்படுத்தப்பட்டோர்களுக்கென்றோ அல்லது தாழ்த்தப்பட்டவர்களுக்கோ இதுவரையிலே எந்தவித மாணவர் விடுதியும் இல்லை. எனவே, தமிழக அரசாங்கம் உடனடியாகப் பரிசீலித்து அங்கே பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை அமைக்க முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகில் செங்கல்பட்டு, நந்திவரம் போன்ற பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோருடைய மாணவர் விடுதி இருக்கிறது. அதில் 50 மாணவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். எனவே, கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோருடைய மாணவர்களின் கூடுதல் சேர்க்கையை வரலாறு காணாத அளவிற்கு அந்த மாணவர்களைச் சேர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் 3,275 கூடுதல் இடங்களைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொண்டு, தேவைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டுக்கும், மாமல்லபுரத்திற்கும் ஏறக்குறைய 38 கிலோ மீட்டர் இருக்கிறது. மாமல்லபுரத்திற்கும், நந்திவரத்திற்கும் ஏறக்குறைய 55 கிலோ மீட்டர் இருக்கிறது. எனவே, இது முக்கியமான பகுதி. அருகிலே செங்கற்பட்டு வட்டத்திலே இருக்கிற மாணவர்களுக்கும், அருகிலே செய்யூர்

வட்டத்திலே இருக்கிற மாணவர்களுக்கும் இது மையமான பகுதி. ஏற்கெனவே சொன்ன 10–க்கு மேற்பட்ட பள்ளிகள் எங்களுடைய இந்தப் பகுதியிலே இருக்கின்றன, செங்கற்பட்டு தொகுதியிலே இருக்கின்றன. அருகிலே இருக்கிற திருப்போரூர் தொகுதியிலிருந்தும், அருகிலே இருக்கிற மதுராந்தகம் பகுதியிலிருந்தும் இந்த மாணவர்கள் இங்கே வந்து படிக்கிறார்கள். எனவே, இங்கே இந்த மாணவர் விடுதியை உடனடியாக அமைப்பதற்கு அரசு ஆணையிட வேண்டுமென்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது 50 மாணவர்களையாவது விடுதியில் சேர்ப்பதற்கான தகுதி வேண்டும். அந்த அடிப்படையில் தேவை இருக்கின்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**107—**

## மாணவர் விடுதி

*** 36066—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–55

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம், பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித்தர மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு உத்தரவு வழங்கி இருக்கிறது என்ற





நல்ல செய்தியைத் தெரிவிப்பதோடு, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் துறை என இந்தத் துறை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, தமிழகத்தினுடைய வரலாற்றிலேயே—கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் வெறும் 471 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீட்டை, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ரூ. 860.63 கோடியாக உயர்த்தியது. மேலும், மக்கள் தொகையில் சுமார் 68 சதவிகிதமாக இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் தங்கியிருக்கக்கூடிய நிலையில், 761 தனியார் கட்டட விடுதிகளில் போதுமான வசதி இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிற நிலைமையை உணர்ந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 235 கோடி ரூபாய் ஒதுக்கி, அவற்றிலே 297 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரத்தால் தொடங்கப்பட்டு, 304 விடுதிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும் செய்யப்பட்டுள்ளது. இன்றையதினம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோருடைய விடுதிகள் அனைத்தும் புதிய விடுதிகளாக, தமிழக வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடிய அளவுக்குக் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஆண்டிமடமும் சேர்க்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், இருக்கையில் இல்லை. திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே தனியார் கட்டடத்தில் செயல்பட்டுவந்த மாணவர் விடுதிகளையெல்லாம் அரசுக் கட்டடத்தில் செயல்படுவதற்கு வழிவகை செய்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே கல்லூரி இல்லை என்ற நிலை 50 ஆண்டுக் காலமாக நிலவி வந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2002–லே ஒரு கல்லூரியை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்மூலம் அமைப்பதற்கு ஆணையிட்டதன்பேராலே இன்று கல்லூரி ஒன்று செயல்பட்டு வருகிறது. இங்கு, 450 மாணவ மாணவியர் பயின்று வருகிறார்கள். இந்தக் கல்லூரிக்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கல்லூரிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். வெகுதொலைவில் இருந்து மாணவ, மாணவியர் இங்கு வந்து பயின்று வருகிறார்கள். இது கிராமக் கல்லூரி என்ற காரணத்தால், இங்கு அதிகமான பஸ் வசதிகளும்

[2006 ஜனவரி 25

இல்லை. மேலும் இங்கு படிக்கின்ற மாணவ மாணவியர் தங்களுடைய சொந்த செலவிலே ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்து, சமையல் செய்து அங்கு படித்து வருகிறார்கள். ஆகையினால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே இந்த நாகம்பட்டி கல்லூரியிலே புதிதாக ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம் அல்லது மாணவியர் இல்லம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, அந்தப் பகுதியில் இருக்கிற தேவைக்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியிலே திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. அந்தப் பள்ளி கடற்கரை அருகில் உள்ளது. கிட்டத்தட்ட 2800–க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் அந்தப் பள்ளியிலே படித்து வருகின்றார்கள். அங்கு ஒரேயொரு பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி மட்டும் செயல்பட்டு வருகிறது. அங்கு மாணவர் விடுதி இல்லை. அதனால், அங்கு ஒரு புதிய மாணவர் விடுதியைத் தொடங்கவும், அதேபோல சீர்காழி தொகுதியிலே வைத்தீஸ்வரன் கோயில் என்கிற பிரசித்தி பெற்ற கோயில் நகரம் உள்ளது. அங்கு பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்காக, பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி இல்லை. அங்கு இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அதனால் மாணவ, மாணவிகள் நலன் கருதி வைத்தீஸ்வரன் கோயிலிலே ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதியைத் தொடங்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கையை அங்கிருக்கிற மாணவர்களுடைய சேர்க்கையின் தேவைக்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.



2006 ஜனவரி 25]

**திரு. எச். எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி கலைக் கல்லூரியில் நமது மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவிகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் . . .

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கான அமைச்சரின் பதில் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எச்.எம். ராஜு:** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 5 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறேன். இன்னும் அந்தப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. மாநிலம் முழுவதிலிருந்தும் மாணவிகள் அங்கு வந்து படிப்பதற்கு விருப்பப்பட்டு படிப்பதன்மூலமாக, அவர்களுக்கு வசதியில்லாமல் வாடகை வீடுகளில் தங்கிக்கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வருடம் உடனடியாக அந்தப் பணியை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு பொறுப்பு ஏற்கின்றபோது 972 விடுதிகளில் 761 விடுதிகள் தனியார் கட்டடங்களில் இருந்தன. அந்தத் தனியார் விடுதிகள் அனைத்தையுமே அரசுக் கட்டடமாகக் கட்டப்பட வேண்டுமென்ற திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்து, இன்று தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினராக பெரும் பகுதியினர் இருக்கின்ற அத்தகைய பள்ளி மாணவ, மாணவிகள், கல்லூரி மாணவ, மாணவிகளுடைய வாழ்வு மேம்பட வேண்டுமென்பதற்காக உன்னதமான திட்டமாக, 235 கோடி ரூபாயில் அத்தனை விடுதிகளுக்கும் கட்டடம் கட்டுவதற்கான திட்டத்தைச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி அந்தக் கட்டடம் துவக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் இந்த விடுதிகளில் வெறும் 36 விடுதிகள் மட்டும்தான் கட்டடம்

[2006 ஜனவரி 25

கட்டப்பட்டிருந்தன. புரட்சித் தலைவி அம்மாவினுடைய 2001-2006 ஆட்சியில் 761 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருடைய விடுதிகள் கட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் ஆணை பிறப்பிக்கப் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் 68 சதவீதத்தினராக இருக்கக்கூடிய, நிலையில் அடித்தளத்தில் இருக்கின்ற அத்தகைய பள்ளி மாணவ, மாணவிகள், கல்லூரி மாணவ, மாணவிகளுடைய உணர்வை மதித்து, இன்று மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற, மனித நேயமிக்க முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தமிழகத்தில், எல்லா விடுதிகளும் அரசு விடுதிகளாக, அத்தனை வசதிகளும் கொண்டதாக இருக்கின்றன என்ற நல்ல செய்தியை அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே..

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்லிவிடுகிறேன். நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) பேரவை விதி 110—ன்கீழ் . . . (குறுக்கீடு) துரைமுருகன், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். மறுபடியும் கூப்பிடுகிறேன்.



## 3. விதி 110—ன்கீழ் அறிக்கை

### ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்க்கு விடுதிகள் கட்டுதல் மற்றும் அவர்களுக்கு இலவச அகராதியும் Atlas-ம் வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்விக்கு எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து பள்ளி மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக, அனைத்துக் குடியிருப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளாக தொடக்கப் பள்ளி; 3 கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளாக நடுநிலைப் பள்ளி; 1 முதல் 12 ஆம் வகுப்புவரை இலவசப் பாடப் புத்தகங்கள்; +1 மற்றும் +2 பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவச சைக்கிள்கள்; கல்வி உதவித் தொகை; இலவசச் சீருடை; சத்துணவு என சிறப்புடன் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைளின் பயனாக தமிழகம் இன்றைக்குப் பள்ளிக் கல்வியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பொருளாதாரத்தில் கீழ்த்தட்டில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கு, அரசு, மாணவ, மாணவியர் விடுதிகள் மிகப் பெரும் உதவியாக இருக்கின்ற காரணத்தால், 2001 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்கிப் பயிலுகின்ற அனைத்து விடுதிகளுக்கும் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தந்திட ஆணையிட்டேன். மேலும், விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்குத் தரமான உணவு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக பள்ளி விடுதிகளுக்கான உணவுக் கட்டணத்தை 1-10-2001 முதல் 225 ரூபாயில் இருந்து 300 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் ஆணையிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 25

முற்பகல் 11—05

2001 ஆம் ஆண்டு எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், மொத்தம் உள்ள 1,102 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கான விடுதிக் கட்டடங்களில், 493 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. அதேபோல், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்கிப் பயின்று வந்த 972 விடுதிகளில், 760 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. இவ்வாறு, தேவையான அடிப்படை வசதிகளும், போதிய இட வசதியும் அற்ற, இத்தகைய தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளில் தங்கிப் பயிலுகின்ற மாணவ, மாணவியர், முழு ஊக்கத்துடன் தங்களது கல்வியைக் கற்க இயலாது என்பதால், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த மாணவ, மாணவியருக்கான அனைத்து விடுதிகளுக்கும், போதிய இடவசதி, காற்றோட்ட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன கழிப்பிட வசதி ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளுடன், சொந்தக் கட்டடங்கள் கட்ட நான் ஆணையிட்டேன்.

இதன்படி, தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவந்த 493 ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்கள், 155 கோடி ரூபாய் செலவில் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டு, அவற்றில் 360 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 133 விடுதிகள் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர் விடுதிகளைப் பொறுத்தமட்டில், 2005–2006 ஆம் ஆண்டில் கமுதியில் தொடங்கப்பட்ட ஒரு சீர்மரபினர் கல்லூரி விடுதியையும் சேர்த்து, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த 761 விடுதிகளுக்கும், சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணி 235 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. இதில் 294 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டுவிட்டன. மேலும், 304 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இதுவன்றி, மீதம் இருக்கும் ஏனைய விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் அமைத்திட, பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் உட்கோடி கிராமங்களில் வசித்து வருகின்ற, பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளிய மாணவ, மாணவியர் பள்ளிக் கல்வி, குறிப்பாக நடுநிலைக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை



2006 ஜனவரி 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பயிலவும் மற்றும் உயர்கல்வி பயிலவும் ஊக்கம் அளிக்கும் ஒரு வரப்பிரசாதமாக இந்த மாணவ, மாணவியர் விடுதிகள் அமைந்துள்ளன.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த மாணவ, மாணவியர்க்கு விடுதிகளில் போதிய இடம் கிடைக்கவில்லை என்ற முறையீட்டின் அடிப்படையில், 2005–2006 ஆம் ஆண்டு முதல், 3,275 கூடுதல் இடங்களுக்கு எனது அரசு ஒப்பளிப்பு வழங்கி மாணவ, மாணவியரின் தேவையை நிறைவு செய்தது.

கிராமப்புறங்களிலும், பிற பகுதிகளிலும், கல்வி நிலையங்கள் அதிக அளவில் திறக்கப்படுவதுடன், நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படுவதாலும், இப்பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ, மாணவியர் இடை நிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஆர்வம் கொண்டிருப்பதாலும், புதிய விடுதிகள் திறக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டே, 4 கோடி ரூபாய் செலவில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்காக மேலும் 108 மாணவ, மாணவியர் விடுதிகளை எனது அரசு தொடங்கும் என்று மேதகு ஆளுநர் அவர்கள் 13–01–2006 அன்று நிகழ்த்திய தனது உரையில் தெரிவித்தார்.

இதேபோல, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த ஏழை எளிய மாணவ, மாணவியரின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, 108 புதிய விடுதிகள் தொடங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி 4.76 கோடி ரூபாய் செலவில் 20 கல்லூரி விடுதிகளும், 88 பள்ளி விடுதிகளும், ஆக மொத்தம் 108 விடுதிகள் தொடங்கப்படும். ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கென தொடங்க ஆணையிடப்பட்டுள்ள இந்த 216 விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில் உடனடியாகத் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரிந்து பரந்த உலக வாய்ப்புகளை, எளிதில் நமது கைகளுக்குக் கொண்டு வந்து சேர்க்கின்ற கருவிகளில் ஒன்றாக ஆங்கில மொழி அறிவு திகழ்கிறது. மாணவ, மாணவியர் தங்களது பாடங்களில் உள்ள

ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான பொருளைப் புரிந்துகொண்டு, அப்பாடங்களை நல்லமுறையில் கற்றுத் தேறவும், தமது ஆங்கில மொழி அறிவுக்கு நல்ல அடித்தளம் அமைத்துக்கொள்ளவும் ஏதுவாக, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும், ஆங்கிலம் – ஆங்கிலம் – தமிழ் அகராதி ஒன்றை இலவசமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

மேலும், உலக நாடுகள் பற்றிய தங்களது பூகோள அறிவை விரிவுபடுத்திக்கொள்ளும்வகையில், இந்த மாணவ, மாணவியர் அனைவருக்கும் உலக நாடுகளின் பூகோள வரைபடத் தொகுப்பான Atlas ஒன்றையும் இலவசமாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு அகராதி ஒன்றும், Atlas ஒன்றும் இலவசமாக வழங்கப்படுவதன்மூலம் அரசுக்கு 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். இதனால் ஒரு இலட்சத்து 24 ஆயிரம் மாணவ, மாணவியர் பயன்பெறுவர்.

கல்வித் துறையில் முதன்மை இடத்தில் இருக்கும் தமிழகம், தொடர்ந்து மேம்பாடு காண, இன்று நான் அறிவித்துள்ள அறிவிப்புகள் உறுதுணையாக அமையும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

## 2. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்ன?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதே ஆரம்பித்துவிட்டீர்களா? பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஏற்கெனவே இந்த அவையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது, முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வந்திருக்கிற செய்திகள், பாலாற்றிலே ஆந்திர அரசு அணை கட்டுவது குறித்து, மேலும் பயங்கரமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. திட்டம் தயார், பணம் தயார், ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் நிறைவேறும் என்று சொன்னால், அதனால் வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்படும். விவசாயிகள்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன். ஏற்கெனவே இதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) பிரச்சினை என்ன என்பதைப்பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் நான் சொல்கிறேன். இன்றைக்கு அதை நான் சொல்கிறேன் என்றால்.. (குறுக்கீடுகள்) அதற்காகத்தான் அவை இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதைச் சொல்லவேண்டிய முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள், இன்றைக்குப் பேச இருக்கிறீர்கள்!

**திரு. துரைமுருகன்:** என்ன செய்ய இருக்கிறீர்கள்? முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் இன்றைக்குப் பேச இருக்கிறீர்கள். சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கல்லே நாட்டப் போகிறார்கள். 15-2-2006 . . .

**திரு. துரைமுருகன்:** அதைத்தான், அதைத்தான் சொல்கிறேன். ஆகையினாலே, இதுகுறித்து அரசு என்ன நிலைப்பாடு எடுத்திருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரே நிமிடம். 15-2-2006 . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அவர் இன்றைக்குப் பேச இருக்கிறார். விரிவாகப் பேசுவார். மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின்

அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநில அரசு ஓர் அணையைக் கட்டத் திட்டமிட்டுள்ளது என்பதைப்பற்றி இந்த அவையில் பல முறை இந்தக் கூட்டத் தொடரில் பேசிவிட்டோம். இன்று காலையில்கூட இதுசம்பந்தமாக அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் ஆய்வு நடத்திவிட்டுத்தான் இந்த அவைக்கு நான் இப்போது வந்திருக்கிறேன். பாலாற்றின் குறுக்கே, ஆந்திர மாநில அரசு அணை கட்டுவதைத் தடுப்பதற்காக உடனடியாக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவராக நியமித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வணங்கி, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் சமூக நலம் குறித்த முப்பத்து மூன்றாவது அறிக்கையினையும், வனம் குறித்த முப்பத்து நான்காவது அறிக்கையினையும், எரிசக்தித் துறை குறித்த முப்பத்து ஐந்தாவது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால், முப்பத்து மூன்று முதல் முப்பத்து ஐந்து வரையிலான அறிக்கைகளை அச்சடித்து, பேரவைக்கு அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிபெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்றுத் தொண்ணூறு முதல் இருநூற்றுத் தொண்ணூற்று ஆறு வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுத் தொண்ணூற்று நான்கு முதல் இருநூறு வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் சார்பாக, குழுவின் பதினைந்து மற்றும் பதினாறாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால், மேற்படி அறிக்கைகளின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

### (உ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பதாவது முதல் நாற்பத்து மூன்றாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11–15

### (ஊ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஆறு மற்றும் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (எ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதமும் பதிலுரையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது விவாதமும் பதிலுரையும். திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு. (குறுக்கீடு)



## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

### ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்க்கு விடுதிகள் கட்டுதல் மற்றும் அவர்களுக்கு இலவச அகராதியும் Atlas-ம் வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சந்தானம் அவர்கள் ஏதோ கேட்க வேண்டும் என்கிறார். திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கையாகிய மிகவும் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், அதுபோல ஆதிதிராவிட மாணவர்களுக்கும் 116 விடுதிகளை ஆரம்பிப்பதாக தங்களுடைய அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அதற்காக ஒட்டுமொத்தமாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 216 புதிய விடுதிகள் கட்ட உள்ளோம்.

**திரு. லா. சந்தானம்:** 216 விடுதிகள் கட்டுவதாக இங்கு அறிவித்திருக்கிறார்கள். அதோடுகூட அந்த விடுதிகள் உடனடியாகத் தொடங்கப்படும் என்கின்ற தித்திப்பான செய்தியையும் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி. (குறுக்கீடு) 110 விதிக்குள்ளே விவாதம்தான் கூடாதே தவிர, நன்றி சொல்வதற்கு அதிலே வாய்ப்பு இருக்கிறது. நான் நன்றியைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதோடு ஒரு சின்ன கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு) தனியார் நடத்துகின்ற சில விடுதிகள் இருக்கின்றன. அவை அரசினுடைய நிதியுதவியோடு நடத்தப்படுகின்றன. இங்கே முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது 200 ரூபாயாக இருந்த மாதக் கட்டணத்தை 300 ரூபாயாக ஒவ்வொரு மாணவருக்கும் உயர்த்திக் கொடுப்பதாக அறிவித்தார்கள். அது அரசு விடுதியிலே தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு. இந்தத் தனியார் நடத்துகின்ற, அரசு உதவி பெறுகின்ற விடுதிகளிலே இன்னும் அந்தப் பழைய 200 ரூபாய்தான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த மாணவர்களுக்கும் தயைகூர்ந்து ஏதாவது

[திரு. லா. சந்தானம்] [2006 ஜனவரி 25

உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்கிற ஒரு கருத்து இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சந்தானம் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதமும் பதிலுரையும்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் 2006–2007 ஆம் ஆண்டிற்கான இந்த அவையிலே வைக்கப்பட்ட ஒரு இடைநிலை நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக நிதிநிலை அறிக்கை அரசினுடைய வருவாயைத் தெரிவிக்கும். அரசினுடைய திட்டங்களை அறிவிக்கும். அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கத்தைத் தரும். நிதிநிலை அறிக்கை என்று நான் அறிந்தவரையிலே எனக்குத் தெரிந்தது அதுதான். ஆனால் இதுவரையிலே அப்படி அறிக்கைகளை முதலமைச்சர் வைத்தபொழுதுகூட, சில திட்டங்களை அறிவித்தார்கள்; நிதி ஒதுக்கினார்கள்; அது தப்பு, சரி, சரியில்லை என்று பேசினோம். ஆனால் இந்த முறை அந்தத் திட்டங்கள் எதையும் அதிலே அறிவிக்காவண்ணம் அல்லது அதற்கு முன்னாலேயே—நிதி அமைச்சர்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களை, அறிவிப்புகளைத் தனியாக எடுத்துச் சொல்லிவிட்ட காரணத்தால் நிதி அமைச்சருடைய அறிக்கையிலே நான் எதையும் பார்க்க முடியவில்லை. பலாப்பழம் அறுக்கின்றபொழுதுகூட ஊரிலே பார்த்தோம் என்றால், சுளையை எல்லாம் எடுத்துவிட்டு அதில் நார், நாராக இருக்கும்; அதை எதிர்வீட்டுப் பையன்கிட்டே கொடுத்துவிடுவான்; அவன் இழுத்துக் கொண்டு கிடப்பான். அப்படி முதலமைச்சர் அறிவிப்புகளை எல்லாம் எடுத்துச் சொல்லிவிட்டு, இழுத்துக் கொண்டு இதை வைத்துக் கொண்டு ஏதாவது நடத்தட்டும் என்று சொல்லி விட்டுவிட்டார். அதனாலே



2006 ஜனவரி 25] [திரு. துரைமுருகன்]

அவரும் முடிந்த அளவிற்கு இதைச் செய்திருக்கிறார். ஆனால், ஒன்று செய்திருக்கிறார்; எனக்கு திருப்தி என்னவென்று கேட்டால், என்றைக்கு 2001–ல் இந்த மன்றத்தில் ஒரு நிதிநிலை அறிக்கையைப் படித்தாரோ அதிலிருந்து 2006 வரையில் மாறாமல் இருக்கிறார் Sir. அதுதான் அவருக்குப் பெரிய பாராட்டு. என்னவென்றால், நிதிநிலைமை சீர்கெட்டு விட்டது; கடன் சுமையை வைத்துவிட்டு தி.மு.க. போய்விட்டது; மைய அரசு வஞ்சகம் செய்துவிட்டது; வட்டியோ தாளமுடியவில்லை; கருணாநிதி ஆட்சி இப்படிச் செய்துவிட்டது; நிதிநிலை சரியில்லை; இதையே Sir, ஐந்து வருடமாக (குறுக்கீடுகள்) ஆனால், பாராட்டவேண்டும். (குறுக்கீடுகள்) உண்மையிலேயே பாராட்டவேண்டும் Sir. முன்னால் இருந்த ஒரு முதலமைச்சரைப் பற்றியே அல்லது ஆட்சியைப் பற்றியே, ஐந்து ஆண்டுக்காலம் ஒப்பாரி வைத்து, ஒரு ஆட்சியை ஓட்டிவிட்டீர்களே! கின்னஸ் சாதனையில் வைக்க வேண்டியது Sir! (குறுக்கீடு)

*முற்பகல் 11–20*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை சொல்லவேண்டுமென்றால், 2001–ல் ஆட்சியைவிட்டு இறங்கிய தி.மு.க. அவ்வளவு மோசமான நிலையில் தமிழகத்தின் பொருளாதாரத்தை விட்டுச் சென்றதே, நிதிநிலையை விட்டுச் சென்றதே, அந்த மோசமான நிலையை இதுவரை வரலாற்றில் கண்டதில்லை. அதுதான் உண்மையில் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெறவேண்டும். நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறோம் என்றால், ஒப்பாரி வைக்கவில்லை. பெருமையாகச் சொல்லுகிறோம். பெருமிதத்துடன் கூறுகிறோம். வரலாறு காணாத, மோசமான நிதிநிலையை, தி.மு.க. அரசு விட்டுவிட்டுச் சென்றது. இந்த, அதலபாதாளத்திலிருந்து தமிழகத்தை மீட்கவே முடியாது என்று எல்லோரும் சொன்னார்கள். உலக வங்கி கை கழுவிவிட்டது. Asian Development Bank கை கழுவிவிட்டது. பொருளாதார மேதைகளெல்லாம் தமிழகத்தைக் காப்பாற்றவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால், அந்த நிலைமையை மாற்றி, இன்றைக்குத் தமிழகம் இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலமாக, முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் பெருமையுடன் சொல்லுகிறோம். பெருமையோடு சொல்ல எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, நாங்கள் ஒப்பாரி வைக்கவில்லை. மார்தட்டிப் பெருமையோடு சொல்லுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறு காணாத மோசமான நிதி நெருக்கடியை ஏற்படுத்திச்

சென்ற தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டினையும் மீறி, மீண்டும் தமிழகத்தை ஓர் ஆரோக்கியமான நிலைக்கு, வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறோம் என்றால், அது பெருமைக்குரிய செயல்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது என்னவோ தி.மு.க. ஆட்சியிலே மட்டும்தான் மத்திய அரசு பணம் தந்த மாதிரியும் இவர்களிடம் ஒன்றும் கிடையாது; இவர்கள் வருமானமே இல்லாமல் செய்தார்கள் என்கிற மாதிரி—உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். 1996–1997 ஆம் ஆண்டு, அதாவது கலைஞர் ஆட்சிக்கு வந்தபோது, அந்த நிதியாண்டின் கணக்குப்படி, இந்த மாநிலத்தின் வருவாய் 11 கோடியே, 961 கோடி. (குறுக்கீடு) வருவாய்க் கணக்கில் (குறுக்கீடுகள்) ஆமாம் வருவாய்க் கணக்கில் (குறுக்கீடு) 11 ஆயிரத்து—sorry, right, right. I thank you for correcting. 11 ஆயிரத்து 961 கோடி. (குறுக்கீடு) பரவாயில்லை. பரவாயில்லை என்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்களுக்கு, 11 கோடிக்கும், 11 ஆயிரம் கோடிக்கும் வித்தியாசம் புரியவில்லை என்றால், எவ்வளவு இலட்சணமாக இங்கே பேச தயார்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

**திரு. துரைமுருகன்:** ஆளானப்பட்ட முதலமைச்சரே, நானும் மனுஷிதானே என்று சொல்லுகிறபோது, அடியேன் ஒன்றை திருப்பிச் சொல்லுவதிலே என்ன இருக்கிறது? அதனால் இருக்கட்டும். அதுபோகட்டும். 2000–2001–ல், அதாவது கலைஞர் ஆட்சியைவிட்டு இறங்கும்போது, அந்த நிதியாண்டின் கணக்குப்படி, மாநிலத்தின் வருவாய் நிதிநிலை அறிக்கையின்படி 18 ஆயிரத்து 316 கோடி. ஆனால் 2005–2006–ல், அ.தி.மு.க ஆட்சியில், இந்த நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, அதாவது Budget Estimate எவ்வளவு என்றால் 30,252 கோடி ரூபாய். ஆக, ஏதோ வருமானமே இல்லாமல் போய்விட்ட மாதிரியும்— வருமானம் பெருகியிருக்கிறது; உங்களுடைய ஆட்சியிலே வருமானம் revenue, வந்திருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். 11,961 கோடி எங்கே, 30,252 கோடி எங்கே? (குறுக்கீடு)



***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் நிதி நிர்வாகச் சாதனையை திரு. துரைமுருகன் பாராட்டுவதற்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** இது நிதி நிர்வாகம் அல்ல. ஒரே நாளில் இந்த நிதி நிர்வாகம் வராது. ஏற்கெனவே வைத்துவிட்டுப் போனதிலிருந்துதான், நிதி நிர்வாகம் வருமே தவிர, வந்துவிடாது உங்களுக்கு. (குறுக்கீடு) அது தெரியும். ஒரு மாநிலத்தின் வருவாய் என்பது... (குறுக்கீடு)

முற்பகல் 11–25

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னவோ தி.மு.க. அரசு எதையே வைத்துவிட்டுப் போனதுபோல் பேசிக்கொண்டிருக்கிறார் திரு. துரைமுருகன் அவர்கள். தி.மு.க. அரசு பதவியிலிருந்து இறங்கியபோது எதனை விட்டுவிட்டுச் சென்றது? கடன்களை விட்டுவிட்டுச் சென்றது. Unpaid bills–க்கு ரூ. 4 ஆயிரம் கோடி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ. 5 ஆயிரம் கோடி கடன். இப்படி இதைத்தான் அவர்கள் விட்டுவிட்டுப் போனார்கள்.

**திரு. துரைமுருகன்:** வைத்துவிட்டுப் போனோம், சரி. ஒரு மாநிலத்தின் வருவாய் என்பது—தலைவர் அவர்களே—அந்த மாநிலத்தின் சொந்த வருவாய் மட்டுமல்ல; பல வழிகளில் மாநிலத்திற்கு வருவாய் கிடைக்கிறது. அதில்—State share of Union taxes and duties—மத்திய அரசு விதிக்கிற வரி மற்றும் கட்டணங்களின்மூலம் வரும் வருவாயில் மத்திய அரசு மாநிலங்களுக்கு ஒரு தொகையைத் திருப்பிக் கொடுக்கிறது. அது மாநிலத்தின் வருவாயை அதிகரிக்கும். அதன்படி 1996–97–ல் கலைஞர் ஆட்சிக்கு வந்த அந்தக் காலகட்டத்தில் மத்திய அரசு நமது மாநிலத்திற்குப் பிரித்துக் கொடுத்த தொகை, 2,165 கோடி ரூபாய் எங்களுக்கு. நாங்கள் ஆட்சியைவிட்டு இறங்குகிறபோது மத்திய அரசு பிரித்துக் கொடுத்த தொகை 2,783 கோடி ரூபாய். ஆனால், இன்று, உங்களுக்கு மத்திய அரசு கொடுத்திருக்கிற தொகை 4,236 கோடி ரூபாய்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் அடிப்படை உண்மையை

மறந்துவிட்டுப் பேசுகிறார். மத்திய அரசு எங்களுக்குக் கொடுத்தது, மத்திய அரசு உங்களுக்கு இவ்வளவு கொடுத்தது என்கிறார். மத்திய அரசு கொடுத்தது உங்களுக்கும் இல்லை, எங்களுக்கும் இல்லை, தமிழக மக்களுக்கு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் மேலும் ஒரு தவறான தகவலை அவைக்குத் தருகிறார். தமிழ்நாட்டிலிருந்து ஒட்டுமொத்தமாக, உதாரணமாக 2003–2004 ஆம் ஆண்டு மைய அரசுக்குப் பல துறைகளில் கிடைத்த வருமானம் 22 ஆயிரம் கோடி. ஆனால், தமிழகத்திற்கு மைய அரசு மீண்டும் திருப்பித் தந்த தொகை எவ்வளவு தெரியுமா? வெறுமனே ரூ. 3,396 கோடி. மைய அரசைப் பொறுத்தவரைக்கும் அந்த நிதிக் குழுவின்மூலமாக அவர்கள் மேற்கொண்ட தவறான அணுகுமுறையை, 1998–99–லிருந்து டெல்லியிலே ஆட்சிப் பீடத்தில், மாநில சுயாட்சிக் கொள்கையோடு இருந்த நீங்கள், கேட்கத் தவறிவிட்டீர்கள். உதாரணமாக, 2000–2001–ல் தமிழ்நாட்டிற்கு அவர்கள் தந்திருக்க வேண்டிய பணம், 10–வது நிதிக் குழுவின் அடிப்படையில் 6.637 சதவீதம் என்ற அடிப்படையில் தந்திருந்தால், அவர்கள் ரூ. 3,515.64 கோடி தந்திருக்க வேண்டும். ஆனால், மாநிலத்திற்குத் தர வேண்டிய அந்தப் பணத்தை நீங்கள், உங்கள் மைய அரசு, அந்த 10–வது நிதிக் குழுவினுடைய பரிந்துரையை, 11–வது நிதிக் குழுவிலே மாற்றி அமைக்கின்றபோது 5.385 சதவீதம் குறைத்தீர்கள். நீங்கள் குரல் எழுப்பவில்லை. அதைத் தடுக்கவில்லை. மாநில அதிகாரம் பறிக்கப்பட்டது. அதனால், தமிழகத்திற்கு 663.9 கோடி ரூபாய் குறைக்கப்பட்டது. அவர்கள் தந்ததே வெறுமனே ரூ. 2,852.45 கோடிதான். அதைப்போல 2001–2002–ல், ரூ. 663.86 கோடி மைய அரசு அந்த நிதி வகைகளில் கொடுத்த பணத்தைக் குறைத்துவிட்டார்கள். 2002–2003–ல் ரூ. 708.65 கோடி குறைந்துவிட்டது. 2003–2004–ல் ரூ. 823.77 கோடி குறைந்துவிட்டது. 2004–2005–ல் ரூ. 1030.16 கோடி. ஆக மொத்தம் ரூ. 3,226.44 கோடி 2001–லிருந்து 2005 வரை டெல்லியிலே நீங்கள் மாநில சுயாட்சி என்ற கொள்கையை வைத்துக்கொண்டு, அதைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு ஆட்சி நடத்துகிற காரணத்தால், தமிழகத்திற்கு, அம்மாவின் ஆட்சிக்கு வரவேண்டிய பணம்கூட வருமளவிற்கு, ஒரு கொள்கை முடிவு உங்களால் எடுக்க முடியவில்லை. மாநிலத்திற்கு வேண்டிய நிதி அதிகாரத்தை உங்களால் பெற முடியவில்லை. தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு 3,889.63 கோடி ரூபாய். அவர்கள் எதையும் அள்ளித் தந்துவிடவில்லை. சட்டரீதியாக தரவேண்டிய பணத்தைக்கூட மைய அரசு தரவில்லை.



**திரு. துரைமுருகன்:** அதேபோல், தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மானியமாகவும், உதவியாகவும் ஆண்டுதோறும் நிதி கிடைக்கிறது. அந்தவகையில் 1996–97–ல் தமிழகத்திற்குக் கிடைத்த தொகை ரூ. 926 கோடி. நாங்கள் ஆட்சியைவிட்டு இறங்குகிறபோது கிடைத்த தொகை ரூ. 1,539 கோடி. ஆனால், 2004–2005–ல் அந்தக் கணக்கை, நான் அந்த accounts மட்டும்தான் எடுத்தேன். 2004–2005–ல்—அதாவது, இந்த ஆட்சி வந்த பிறகு, இந்த ஆட்சிக்குக் கிடைத்திருக்கிற தொகை ரூ. 2,649 கோடி. எங்களுக்கு மானியமாகவும், உதவியாகவும், எங்கள் ஆட்சியிலே கிடைத்த தொகை, நாங்கள் ஆட்சிக்கு வந்த நேரத்திலே கிடைத்த தொகை ரூ. 926 கோடி. நாங்கள் ஆட்சியை விடுகிறபோது 1,539 கோடி ரூபாய். ஆனால் உங்களுக்குக் கிடைத்த தொகை 2,649 கோடி ரூபாய்.

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, குறிப்பாக திட்டக் கமிஷன் ஒரு மாநில அரசின் செயல்பாட்டைப் பார்த்து, மாநில அரசின் performance, achievements — சாதனைகள், இவற்றைப் பார்த்து நிதியை ஒதுக்கித் தருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* நிதி நிர்வாகத்தை தமிழக அரசு கையாண்ட விதத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். மத்திய திட்டக் குழுவும் பாராட்டியிருக்கிறது. ஆகவே, எங்களுடைய excellent performance and achievements–ஐ கண்டுதான் கூடுதலாக நிதி தந்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நாங்கள் 11–வது நிதிக் கமிஷனில் மாட்டிக் கொண்டதால் எங்களுக்கும் எவ்வளவு கஷ்டம் என்பது அவர்களுக்குத் தெரியும். இங்கே உட்கார்ந்து இருக்கிற அதிகாரிகளுக்கும் தெரியும். 12–வது நிதிக் கமிஷன் வந்ததும் உங்களுக்குப் பணம் கொட்டோகொட்டு என்று கொட்டிவிட்டது அவ்வளவுதான்.

அடுத்து, மத்திய அரசிடமிருந்து கடனாகவும் முன்பணமாகவும் Loans and Advances- ஆக ஒரு மாநில அரசுக்கு மானியம் வரும். நாங்கள் 1996–97–லே Loans and Advances-ஆக வாங்கிய தொகை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12–வது நிதிக் குழுவினால்

மாநில அரசுக்குப் பணம் கொட்டோ கொட்டு எனக் கொட்டவில்லை. 10-வது நிதிக் குழுவினுடைய அணுகுமுறையான 6.637 சதவிகிதத்தைக் குறைத்து 5.3505 சதவிகிதம்தான் மாநிலத்திற்கு நிதிப் பகிர்வு என மாநில உரிமையை, பண உரிமையைப் பறித்த காரணத்தால் நமக்கு 76.02 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது, குறைத்துதான் தந்திருக்கிறார்கள், கொட்டோ கொட்டு எனக் கொட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. துரைமுருகன், கொட்டியது என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. தேள் கொட்டுவதற்கும் கொட்டியது என்றுதான் சொல்வார்கள்! *(சிரிப்பு)*

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, அப்படி Loans and Advances-ஆக நாங்கள் ஆட்சியைவிட்டு இறங்குகிறபோது எவ்வளவு வாங்கினோம் என்று கேட்டால் 66 கோடி ரூபாய்தான். ஆனால் 2004-2005-ல் இந்த ஆட்சி வாங்கிய தொகை 1,258 கோடி ரூபாய்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் ஆட்சியில் நீங்கள் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவில்லை. செலவினங்களுக்கு, அன்றாடச் செலவினங்களுக்கு 81 சதவிகிதத்தை நீங்கள் செலவு செய்திருந்தீர்கள். வளர்ச்சிக்கு 18 சதவிகிதம்கூட பணம் இல்லாத நிலையில் இருந்தீர்கள். அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட Neyveli Lignite Corporation-லிருந்து Advance கடன் வாங்கிக் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தீர்கள். நாங்கள் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்கிறோம். Capital Expenditure என்று சொல்லக்கூடிய வளர்ச்சிப் பாதையில் இந்த அரசு செல்கிறது. அதற்காக நாங்கள் நிதி கேட்கிறோம், நிதி பெறுகிறோம் வளர்ச்சித் திட்டங்களை மக்களுக்காக, மக்களின் நலனுக்காக மேற்கொள்கிறோம்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, Capital Expenditure, Revenue Expenditure-க்கு எல்லாம் நான் வருகிறேன். வெளியாரிடமிருந்து அரசு கடன் வாங்கும். நாங்கள் அப்படி ஆட்சியை விட்டு இறங்கியபோது, 2001-ல் போகிறபோது 4,666 கோடி ரூபாய். ஆனால் நீங்கள் 2004-2005-ல் அப்படி வாங்கிய கடன் 10,877 கோடி ரூபாய். இன்னும் இப்போது அதிகமாக இருக்கும். இங்கே இன்னொன்றையும் சொன்னார்கள், கடன் வைத்துவிட்டுப் போய்விட்டார்களே என்று. ஆனால் ஒரு மகிழ்ச்சி, Sir. இப்போது நீங்கள் போகும்போது கடனே வைக்கப் போவதில்லை எங்களுக்கு! (குறுக்கீடுகள்). பூாவம் மக்கள் கையிலே இருக்கிற... (குறுக்கீடு)



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் தன்னையே மறந்து பகல் கனவு காணுவதை நிறுத்திவிட்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவது நல்லது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. துரைமுருகன்:** பகல் கனவா, இரவு கனவா என்பது election முடிந்தால் தெரியும்; இப்போது எதற்கு அதுவெல்லாம்.

Sir, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள், கடனை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று சொல்கிறார்களே, நாங்கள் அந்த ஆட்சியில் 2001-லே outstanding fiscal liabilities மட்டும் நாங்கள் எவ்வளவு வைத்துவிட்டுச் சென்றோம் என்று கேட்டால், அதாவது 2001-ல் 32,421 கோடி ரூபாய்தான் உங்களுக்கு outstanding fiscal liabilities நாங்கள் வைத்தது. நான் உங்களுடைய Performance Budget-ல் இன்றைக்குப் பார்த்தேன், 2005-2006-ல் வரவு-செலவு பட்ஜெட்டின்படி, 61 கோடியே 815 கோடி ரூபாய் (குறுக்கீடு) 61 ஆயிரத்து 815 கோடி ரூபாய். ஆக, 30,000 கோடி எங்கே, 61,000 கோடி எங்கே? நாங்கள் 30,000 கோடி வைத்துவிட்டுப் போனால் நீங்கள் 60,000 கோடியை double-ஆக வைத்துவிட்டுப் போகிறீர்கள்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், Capital Expenditure-க்கும் Revenue Expenditure-க்கும் வித்தியாசம் தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார். உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் கடனை வாங்குவதெல்லாம் அன்றாடச் செலவுகளுக்கு, சம்பளம் கொடுப்பதற்கு போன்ற பணிகளுக்கு வாங்கினீர்கள். கடனைத் திருப்பிக் கட்டுவதற்கு நிதி ஆதாரங்கள் இல்லாத வகையில், நிதிச் சீரழிவில் தமிழகத்தை விட்டுச் சென்றீர்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். தேவையான திட்டங்களை மட்டுமே நாங்கள் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். Schedule of Rates என்று ஒரு estimates-ல் ஒரு திட்டத்திற்கு, அதற்கு உங்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு கோடி ரூபாய் திட்டத்தை ஒரு கோடியே 42 இலட்சம் என்று எல்லாம் போட்டு நடத்தினீர்கள். ஆனால், எங்கள் ஆட்சிக் காலத்தில் அதனுடைய 20 சதவீதம், 25 சதவீதம் திட்டச் செலவு, வீ... ...பட்டது. Estimates-ல் Schedule of Rates கு... ...ப்

227008
சென்னை-600 009

பொறுத்தவரைக்கும் ஏழாயிரத்துச் சொச்சம் கோடி என்ற நிலையிலே உங்கள் வரி வருமானம் இருந்தது. எங்களுடைய வரி வருமானம் 16,000 கோடியைத் தாண்டியிருக்கிறது, விற்பனை வரியிலே. ஆயத் துறையைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் 7,000 கோடிக்கு மேல் அதிகமாக வருமானத்தை ஆண்டுக்காண்டு பெற்றிருக்கிறோம். இப்படி அளவுகடந்த வருமானம் எங்களுக்கு வருகிறது. வருமானம் வருகிறபோது நாங்கள் சாலைகளை அமைக்கின்றோம், பாலங்களைக் கட்டுகிறோம், நீர்ப்பாசனத் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டமாக உழவர்களுக்குத் திட்டங்கள், ஏழைகளுக்குத் திட்டங்கள், எண்ணற்ற நலத் திட்டங்களுக்கு நாங்கள், சமூகப் பாதுகாப்பு வளையத்திற்குச் செலவு செய்கின்றோம். ஆக்கப் பணிகளுக்கு, assets creation–க்கு செலவு பண்ணுகிறோம். அதற்குப் பணத்தை வாங்குகிறோம். பணத்தைத் திருப்பிக் கட்ட வருவாயை உங்கள் ஆட்சிக் காலத்தைவிட பல மடங்காகப் பெருக்கி, செலவைக் குறைத்திருக்கிறோம். இதுதான் நடைமுறை உண்மை. அதைப் புரிந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் தரவேண்டும்.

**திரு. துரைமுருகன்:** எனக்கு Capital Expenditure–க்கும் Revenue Expenditure–க்கும் வித்தியாசம் தெரியவில்லை என்று சொன்னார். பரவாயில்லை. என்னைவிட அவர் பெரிய படித்தவர். அவர் பெரிய மேதாவி. நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

இரண்டாவதாக, என்னவோ இவர்கள் வாங்கி Capital Expenditure பண்ணிவிட்டார்கள் என்றால், மற்ற Government–லே எல்லாம் வாங்கி என்ன அவன் ரம்மியா ஆடிவிட்டான்? என்ன Sir அர்த்தம்? என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, அது உண்மை. உண்மை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் விளக்கம் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரே ஒரு பதிலை மட்டும் சொல்லிவிடுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லட்டும். நிதியமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் கேள்வியைக் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், உங்கள் கேள்விக்கு நிதியமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** One answer I have to tell. I have to answer your query. நாங்கள் கடனை வாங்கி, கடனை வாங்கி வீணாகச் செலவு செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே (குறுக்கீடு) புள்ளி விவரங்கள் அறிக்கையில்—உங்களுக்கு, அவைக்கு அது ஏற்கெனவே தரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) இருங்கள், அவைக்கு, உங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்கார்ந்துகொண்டு பேசுவது முறையல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** விவரங்கள் உங்களுக்கு அந்தப் புத்தகத்தில் தந்திருக்கிறோம். 100 ரூபாய் உங்கள் ஆட்சிக் காலத்தில் கடனை வாங்கினீர்கள் என்றால், 81 ரூபாய் 75 காசு வாங்கிய கடனை வளர்ச்சித் திட்டத்திற்குச் செலவு செய்யாமல், ஆக்கப் பணிகளுக்கு முதலீடு செய்யாமல் அன்றாடச் செலவுக்கே, Revenue Expenditure–க்கு 81.75 ரூபாயை 100 ரூபாயில் செலவு செய்தீர்கள். வெறுமனே 17, 18 ரூபாயைத்தான் நீங்கள் ஆக்கப் பணிகளுக்குச் செலவு செய்தீர்கள். ஆனால், அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தற்போது இந்த 4 ஆண்டுக் காலத்தில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொண்ட காரணத்தால் 100 ரூபாய் கடன் வாங்கினால், அதிலே சுமார் 90 சதவீத அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது ஆக்கப் பணிகளுக்கு மூலதனச் செலவாக, assets creation–க்கு சமூக வளையப் பாதுகாப்புக்குச் செலவு செய்கிறோம். புள்ளி விவரங்கள் உங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே சொன்னது மாதிரி, ரூ. 30,000 கோடி, ரூ. 60,000 கோடி வாங்கியிருக்கிறீர்கள். எல்லாம் பண்ணியிருக்கிறீர்கள். ஆனால், என்ன பிரயோஜனம்? நான் சொல்கிறேன், அப்படி வாங்கி இந்த மாநிலத்திலே என்ன சாதித்திருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) GSDP, GSDP என்று சொன்னால் என்ன என்று உங்களுக்குத் தெரியும். அதிலே இந்த மாநிலத்திலே அரசு மற்றும் தனியார் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டுக் கூறுவது. அதன்

அடிப்படையிலே நேற்றைக்குக்கூட இங்கே சொன்னார்கள். அவர்கள் இதுவரையில் அதிகமாக எட்டியிருப்பது 8.61 per cent தான். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1967-68-ல், நாங்கள் சாதித்த சாதனை 16.4 per cent. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1967-68,* அண்ணாவினுடைய ஆட்சி! *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் குழப்பத்தின் உச்சியில் இருக்கின்றார். வந்தபோதே, காலையிலிருந்தே பார்க்கின்றேன், குழப்பமாகவே இருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் இன்றைக்குப் பேசுவதாக இல்லை. உடல்நலக் குறைவோடு வந்தார். கடுமையான காய்ச்சலோடு வந்தார். இன்றைக்குப் பேசுவதாகவே இல்லை. நான்தான் கேட்டுக்கொண்டேன். சரி.

*முற்பகல் 11-40*

**திரு. துரைமுருகன்:** *1997-98*-ல் நாங்கள் எட்டிய அந்த GSDP சாதனை 16.4 per cent. நாங்கள் எட்டிய அந்தச் சாதனையை, இதுவரையில் நீங்கள் சாதித்தது இல்லை. ஆனால், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால், 'நாங்கள் Capital expenditure; Capital expenditure-லே செய்தோம், துரைமுருகனுக்கு Capital expenditure என்றால் என்ன என்று தெரியாது' என்று. நான் சொல்வது *(குறுக்கீடு)* please. தலைவர் அவர்களே, நான் படித்த Public Finance-லே—அவர் M.Com. படித்தவர். நான் B.A. Economics படித்தவன். ஒரு paper-தான் எனக்கு Public Finance. ஆனால், M.A.-வில் நான் Politics and Public Administration படித்தவன். அதனால் நான் என்ன சொல்கிறேன் என்றால் Capital expenditure, எப்படி create ஆகிறது என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதையும் படிக்காமலேயே எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அவ்வளவு புள்ளிவிவரங்களையும் விரல் நுனியில் வைத்திருக்கிறார்கள்! *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. துரைமுருகன்:** நான் அவர்களுடைய திறமையைக் குறைத்து மதிப்பிடவில்லையே? இன்றையதினம் வரைக்கும் நான் பார்த்து—



I have astonished; ஆச்சரியப்பட்டிருக்கிறேன். நான் ஒன்று சொல்கிறேன்; Capital expenditure என்றால், கடன் வாங்குவார்கள். அரசாங்கம் கடன் வாங்கிவிட்டு, முதலில் வாங்கிய கடனை re-payment பண்ணுவார்கள். repayment பண்ணிவிட்டு அதிலே loan-ஐக் கொடுத்துவிட்டு மீதியிருக்கிற அந்தப் பணத்திலே revenue deficit-ஐக் cover பண்ணுவார்கள். அந்த revenue deficit -ஐக் cover பண்ணிய பிறகுதான் balance இருக்கிறதே பாருங்கள்; அதை Public Accounts—நம்முடைய சட்டசபைக்கே வராது அது; Public Accounts-ஐயும் சேர்த்தால் that is called Capital expenditure. Am I correct, Secretary? அதுதான் Capital expenditure, அவர் Capital expenditure-க்கு என்ன mean பண்ணுகிறார் என்று எனக்குத் தெரியாது. ஆனால்... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த கடன் தொகை எவ்வளவு என்பது முக்கியமல்ல. Total amount of debt is not relevant. What is relevant is, the percentage of Interest payment to total revenue receipts. மொத்த வருவாய் என்னவோ, total revenue receipts—அதற்கு Interest payment-இனுடைய percentage என்ன என்பதைத்தான் பார்க்க வேண்டும். *2001-2006,* இந்தக் காலக்கட்டத்தில் இந்த percentage-ஐ அதிகமாகக் குறைத்திருக்கிறோம். பெருமளவு குறைத்திருக்கிறோம். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அது அபாயக் கட்டத்திற்குச் சென்று விட்டது. It reached danger level. Interest payment எப்படி என்று சொன்னால், ஒருவருக்குக் காய்ச்சல் வந்தால், எவ்வளவு ஜுரம் இருக்கிறது என்று அளவிடக்கூடிய Thermometer-ஐப் போன்றது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அது கடுமையான காய்ச்சல் அளவுக்குச் சென்று விட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)* High fever level என்ற அளவிற்குச் சென்று விட்டது. ஆனால், இப்போது என்னுடைய ஆட்சிக் காலத்தில் அதை மீண்டும் normal temperature-க்குக் கொண்டு வந்துவிட்டோம். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் இப்போது *14.27* per cent என்ற அளவில் உள்ளது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகள் வரும். எங்களாலும் கடன் வாங்கினால் எல்லாம் வரும். இவர்கூட சொன்னார். இவர் மட்டுமல்ல; 'இந்து' பத்திரிகையிலேகூட அவர் சொன்னதுமாதிரி "Rise in capital outlay unprecedented. Enhanced Tax Receipts; Reduction in Revenue Expenditure; Better debt management" என்றெல்லாம் போட்டுவிட்டு, இந்த Government -க்கு ஒரு certificate கொடுக்கிறது 'இந்து' பத்திரிகை. என்ன certificate என்றால், 'Rosy economic and fiscal scenario'. *(குறுக்கீடு)* கொடுக்கும், கொடுக்கும்,

கொடுக்கும். Rosy economic (குறுக்கீடுகள்) 'Rosy economic and fiscal scenario' என்று கொடுத்திருக்கிறார்கள். சரி, பரவாயில்லை. நல்ல பட்டம்தான். ஆனால், ஒன்று கேட்கிறேன். இந்த Capital expenditure எப்போது அதிகமாகும்? Revenue expenditure-ஐக் குறைத்து விட்டால் Capital expenditure அதிகமாகும். Revenue expenditure - ஐ எப்படிக் குறைப்பது? யாருக்கும் ஒன்றும் கொடுக்கக் கூடாது. 'கடன் வைத்துவிட்டோம்; நாங்கள் வாரி இறைத்துவிட்டோம்' என்று சொல்கிறீர்களே, ஒருவன் சம்பளம் வாங்குகிறவன், பையன்களுக்கு துணி எடுத்துக் கொடுத்து, சோறு போட்டு, அப்பா அம்மாவிற்கு வைத்தியம் பார்த்து, school fees–ஐக் கட்டி, போய் வருவதற்கு bus charge கொடுத்து அதற்குப்பிறகு, வீடு கட்டிவைத்து அதிலே மிச்சம் பண்ணிக் காட்டினான் என்றால், அவன் பரவாயில்லை. நான் ஒத்துக்கொள்கிறேன். மூன்று வேளை சோறில் ஒரு வேளை சோறு; சட்டையிலே, மூன்று சட்டையிலே ஒரு சட்டை; பள்ளிக்கூடத்திற்கு fees கிடையாது; நடந்தே போய்விட்டு வாங்கடா என்று சொல்லிவிட்டீர்கள். இவ்வளவு பண்ணிவிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உவமானம் சரி; உவமேயம் என்ன என்று கேட்கிறேன்.

*முற்பகல் 11–45*

**திரு. துரைமுருகன்:** அதுமாதிரி மிச்சம் பண்ணிவிட்டேன் என்று சொல்கிறார்கள். எப்பொழுது? நீங்கள் Capital expenditure-இல் Revenue expenditure என்கிற குரல்வளையை நெரித்துவிட்டீர்கள். 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களுக்குக் கலைஞர் காலத்திலே கொடுத்து வந்த சலுகையைப் பறித்துவிட்டீர்கள். Capital expenditure வராமல் என்ன செய்யும்? அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆண்டுதோறும் பெற்று வந்த bonus-ஐக் காணாமல் செய்துவிட்டீர்கள். Capital expenditure வராமல் என்ன செய்யும்? அரசுப் பணிகளுக்கு ஆள் எடுப்பதை இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் தடை செய்துவிட்டீர்கள். Capital Expenditure கூடாமல்—ஏனென்றால், Revenue Expenditure–தான் முடிந்து போய்விட்டதே? Capital Expenditure கூடாமல்—என்ன செய்யும்? கல்விக் கூடங்களிலே கலைஞரின் ஆட்சிக் காலத்தில் மாணவர்கள் கட்டிவந்த கல்விக் கட்டணத்தைவிட, பல மடங்கு உயர்த்திவிட்டீர்கள்! Revenue Expenditure close; Capital Expenditure increase. இலவச வேட்டி சேலைகளை நிரம்ப நாட்கள் நிறுத்திவிட்டீர்களே! Revenue Expenditure close; Capital Expenditure raise.



மாணவர்களுக்கு இருந்த bus pass-ஐ நிறுத்திவிட்டீர்களே! Revenue Expenditure close; (குறுக்கீடுகள்) அது இப்போது.. (குறுக்கீடு) இல்லை, இப்போது கொடுத்தீர்கள்..(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கான bus pass-ஐ எப்போதும் நிறுத்தவே இல்லை. இது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்போது நிறுத்தினார்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைக்கிள் வாங்குவதற்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை (குறுக்கீடுகள்) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 4½ ஆண்டுக் காலத்திலே, தமிழகத்திலே இருக்கின்ற எந்தக் கல்விக் கட்டணமும் உயர்த்தப்படவில்லை. கடைசியாக, பள்ளிகளில் இருக்கின்ற கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டது அவர்களுடைய ஆட்சியிலே என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** சத்துணவுக் குழந்தைகளுக்கு முட்டை போட்டோம். அந்த முட்டையை நிறுத்திவிட்டீர்கள். Revenue Expenditure close; Capital Expenditure increase. ஏழைப் பெண்களுக்குத் திருமணத்திற்கு உதவி கொடுத்தோம், நிறுத்திவிட்டீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தில் முட்டை மேற்கொண்டு வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2006 ஜனவரி 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். One point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், கோபப்படாதீர்கள். (குறுக்கீடுகள்) நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டையைப் பொறுத்தவரைக்கும் (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. முட்டை நிறுத்தப்பட்டதற்குக் காரணம், முட்டை—கெட்டுப்போன முட்டை—குழந்தைகளுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நிலை உருவாக்கப்பட்டிருந்த காரணத்தால் அப்போது நிறுத்தப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அது மட்டுமல்ல... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. இல்லை... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்களுடைய குற்றச்சாட்டு Revenue Expenditure குறைந்துவிட்டது என்பதாகும். அவர் கூறுகின்ற குற்றச்சாட்டு தவறானது. Revenue Expenditure குறையவில்லை. ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. Budget Memorandum-Part-I என்ற புத்தகத்தில் இந்த விவரம் உள்ளது. Revenue Expenditure, 1997-ல் தி.மு.க. ஆட்சியில், ரூ. 13,065 கோடி, 1997–98-ல் ரூ. 14,951 கோடி, 1998–99–ல் ரூ. 17,697 கோடி, 2000–2001-ல் ரூ. 21,752 கோடி. பின்னர் 2001–2002-ல் எங்கள் ஆட்சிக் காலத்தில் ரூ. 21,557 கோடி, 2003–2004-ல் ரூ. 25,271 கோடி, 2004–2005-ல் ரூ. 29,155 கோடி, 2005–2006-ல் ரூ. 33,264 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) 2006–2007-ல் ரூ. 34,254 கோடியாக இருக்கும்.

**திரு. துரைமுருகன்:** மொத்தம் total உங்களுடைய மொத்த வருமானம் என்ன? அதைச் சொல்லுங்கள். எங்களிடமுள்ள வருமானத்தை-(குறுக்கீடு)

* **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இருங்கள், இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை நிறுத்தப்பட்டது என்று சொன்னார். அந்த முட்டைக்குப் பதிலாக கலோரி சக்தி அதிகமாக



2006 ஜனவரி 25] [திருமதி பா. வளர்மதி]

உள்ள... (குறுக்கீடுகள்) யார் நீங்கள்? ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் எதற்குப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான் அவருக்குப் பதில் சொல்கிறேன்; நீங்கள் யார் பேசுவதற்கு? (குறுக்கீடுகள்) என்ன எல்லோரும் பேசுவீர்களா நீங்கள்? (குறுக்கீடுகள்) எப்படிப் பேசுவீர்கள் நீங்கள்? (குறுக்கீடுகள்) அவருக்கு நான் பதில் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** ** நான் அவருக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை; திரு. பொன்முடி, ஆரம்பத்திலிருந்தே நான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறார்கள். சில விளக்கங்கள் கேட்கப்படுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் விளக்கம் சொல்லுகிறார்கள், முதலமைச்சர் விளக்கம் சொல்லுகிறார். நீங்கள் ஒவ்வொரு முறையும் திரு. துரைமுருகனுக்குப் பின்னணி கொடுப்பதுபோலவே பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. திரு. துரைமுருகனுக்கு எல்லா விவரமும் தெரியும்; அவர் பேசுவார். தயவுசெய்து நீங்கள் இடையிடையே பின்னணி கொடுக்காமல் திரு. துரைமுருகனைப் பேச விடுங்கள். அவர் கேள்விகளுக்கு இவர் பதில் சொல்வார். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் ஒரு விளக்கம் சொல்லட்டும். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை நிறுத்தப்பட்டதே தவிர, அதற்கு இணையாக உருளைக்கிழங்கு, கொண்டைக்கடலை, பச்சைப் பயறு மூன்றையும், கலோரி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வளர்த்திருக்கிறோம். வருவாயை அதிகமாக ஈட்டியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், Borrowings என்ற கடன்களை, Capital Expenditure–க்காகச் செலவிடுகிறோம். நாங்கள் கடன் வாங்கி Revenue Expenditure செய்யவில்லை. கடன் வாங்கி Capital Expenditure-க்காக நாங்கள் செலவிட்டிருக்கிறோம், இதுதான் பொது நிதி நிருவாகத்தில் ஆரோக்கியமான வழிமுறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் நான் சொல்கிறேன். கடன் வாங்குகிறபோது Capital Expenditure கூடும். அதிலே ஒன்றும் மாறுபட்டுச் சொல்ல வரவில்லை. அதனால்தான் இப்படிச் சொன்னேன். அதேமாதிரி, உங்களுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து வருகிறது. மத்திய சர்க்காரிடமிருந்து வருவதை வெளியிலே சொல்லமாட்டேன் என்கிறீர்கள். சித்த வைத்தியம் மாதிரி செய்துவிடுகிறீர்கள்! (சிரிப்பு) ஆமாம். சித்த வைத்தியம் மாதிரி. இதைப் பாருங்கள். இந்த கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறீர்கள். "2001 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வி நிறுவனங்களைத் தொடங்குவதிலும் தற்போதுள்ள நிறுவனங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நிலை உயர்த்துவதிலும் அரசு ஈடு இணையற்ற கவனம் செலுத்துகிறது". அதாவது இந்தக் கட்டமைப்பு Infrastructure - பண்ணுவது இருக்கிறதே, இது என்னவென்றால், இது இவர்கள் காசு இல்லை. அது மத்திய சர்க்கார் காசு. அதனாலே நைசா என்ன என்கிறார்கள்; 'அதில் ஈடு இணையற்ற கவனம் செலுத்துகிறோம்.' இதில் என்ன விஷயம் என்று கேட்டால்—அது என்னவென்றால்—சர்வ ரிக்ஷா அபியான்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வ ரிக்ஷா அபியான் அல்ல; சர்வ சிக்ஷா அபியான். Capital Expenditure மூலமாக பொதுமக்களுக்காக நிரந்தரமான பொதுச் சொத்துக்களை உருவாக்கி வருகிறோம். அது பாராட்டக்கூடிய ஒரு அம்சம்தான்.

**திரு. துரைமுருகன்:** நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், அதைக் காட்டமாட்டேன் என்கிறீர்கள். ஏனென்றால், அதை, உடனே மத்திய சர்க்காரிலிருந்து வருகிறது என்று சொல்லியிருக்க வேண்டாமா? சொல்லவில்லை. அதேமாதிரி மத்திய சர்க்காரிலே உங்களுக்குக் கொடுப்பதை நீங்கள் வெளியிலே சொல்லமாட்டேன் என்கிறீர்கள். இங்கே எல்லாம் சொன்னார்கள்; 'நாங்கள் வந்து சைக்கிள் கொடுக்கிறோம்.' நல்லதுதான். யார் கொடுத்தால் என்ன? சைக்கிள் கொடுத்தால் என்ன? எல்லாம் கொடுக்கலாம். ஆனால் சைக்கிள்



கொடுப்பதில் என்ன ஆயிற்று என்று கேட்டீர்கள் என்றால், இவர்கள் ஒரு உதவி கேட்கிறார்கள். 2002–2003 ஆம் ஆண்டு இந்தப் பணத்தை மத்திய சர்க்காரிலிருந்து வாங்கிதான் இருக்கிறீர்கள். அதுவும் மத்திய சர்க்காரிலிருந்து கடனாகவும், மானியமாகவும் வாங்கியிருக்கிறீர்கள். 14 கோடி கடன் மற்றும் 6 கோடி மானியமாக வாங்கி, இங்கே சைக்கிள் கொடுத்தீர்கள். மறுபடியும் ஒரு 6 கோடி வாங்கும்போது 4½ கோடி கடன், மானியம் 1.80 கோடி வாங்கியிருக்கிறீர்கள். ஆக, மத்திய சர்க்காரிலிருந்து மானியமாகவும் வாங்கியிருக்கிறீர்கள். ஆனால் வெளியிலே சொல்லாமல், இது எங்களுடைய மகத்தான release, சைக்கிள்; அப்படி என்று சொல்லுகிறீர்கள். எப்படி? அதுமட்டுமல்ல; அதைக் கொடுப்பதிலேகூட பல தவறுகள் நடக்கின்றன. அதில் கொடுப்பதிலேகூட பல தவறுகள் நடக்கின்றன. அதுபற்றிகூட நான் கவலைப்படவில்லை. ஆனால்... (குறுக்கீடு) யார், நானா சொல்கிறேன்?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் சொல்கிறார். அந்த வார்த்தையைச் சபைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். தவறுகள் நடக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இலவச சைக்கிள் திட்டத்தில், எந்தவிதத் தவறும் நடைபெறவில்லை; ஊழலும் நடைபெறவில்லை. ஆனால், இது பொத்தாம்பொதுவான குற்றச்சாட்டு. எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், பொத்தாம்பொதுவாகக் குற்றச்சாட்டுச் சொல்வது தி.மு.க.–வினுடைய கொள்கை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர். திரு. துரைமுருகன், கொஞ்சம் கவனியுங்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிதி வண்டிகள் வழங்கக்கூடிய திட்டம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, 6 லட்சத்து 20 ஆயிரம் மிதிவண்டிகள் 115 கோடி ரூபாய்க்கு வழங்கிய அத்தகைய உன்னதமான திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு

வந்திருக்கிறார்கள். அதிலும் எந்தவித விமர்சனத்திற்கும் ஆளாகாமல் இத்தனை மிதிவண்டிகளும் கொடுக்கப்பட்ட வரலாறு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த ஆட்சியில்தான் நடைபெற்றிருக்கிறது. அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்பொழுது சில கருத்துகளைக் கூறினார்கள். கடந்த முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வெறும் 36 பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினுடைய விடுதிகள் மட்டும்தான் கட்டப்பட்டன. அதிலே (குறுக்கீடு) இருங்கள், இருங்கள், உங்களைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். கொஞ்சம் இருங்கள். அந்த விடுதிகளில் பள்ளி மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்ட ரூ. 36.60 இலட்சமும், பள்ளி மாணவியர் விடுதிக்கு கட்டடம் கட்ட ரூ. 43.92 இலட்சமும், கல்லூரி விடுதிகள் கட்ட ரூ. 51.30 இலட்சமும் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செலவு செய்யப்பட்டது. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் இன்றையதினம் 761 விடுதிகள், 31.50 இலட்சம் ரூபாய்க்கு இன்னும் கூடுதல் வசதிகளோடு கட்டப்பட்டு வருகின்றன என்கின்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுபோன்ற தேவையற்ற செலவுகளை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளிலே செய்தார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.A.G. Report–ஐ மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் படிக்கிறார் என்று கருதுகிறேன். Central Planning Commission–ஐப் பொறுத்தவரைக்கும், அவர்கள், திட்ட ஒதுக்கீடு என்று கொடுக்கின்றபோது discretionary–ஆக ஒரு தொகையை, Deputy Chairman, Planning Commission கேட்கும் மாநிலங்களுக்குத் தருகிறார். அப்படித் தருகின்ற பணம் மாநிலத்திற்கு வரும். அது மைய அரசுக்குச் சொந்தமான திட்டம் இல்லை. அப்படி ஒதுக்கக்கூடிய அந்தப் பணம், ரூ. 100 கோடியை அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், அந்தப் பணத்தை எந்தப் பணிக்குச் செலவிடுவது என்பது மாநில அரசுக்கு உள்ள அதிகாரம். அந்த வரம்பிலே, அந்தப் பணம் மாநில அரசால் சைக்கிள்களுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது, மைய அரசு, மைய அரசினுடைய தேசிய அளவுத் திட்ட நிதியிலிருந்து எங்களுக்குக் கொடுத்த பணம் இல்லை. இது எங்களுக்கு discretionary allocation, discretionary grant given by the Deputy Chairman, Planning Commission. இந்த சைக்கிள் திட்டம்



mandatory–யாக அவர்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் கொடுப்பது அல்ல. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய திறமையின் காரணமாக, தமிழகத்தினுடைய அந்த நிர்வாகத்தை, நிதியாதாரத்தை Deputy Chairman ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு அவர்களிடம், அவர்கள் பேசி, அவர்கள் சாமர்த்தியத்தால் பெற்ற பணம். அந்தப் பணம் தமிழ்நாடு அரசுக்கு மட்டுமே சைக்கிள் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. எப்படி வேண்டுமென்றாலும் நாங்கள் செலவு செய்யலாம்.

**திரு. துரைமுருகன்:** எனக்குத் தெரிந்து மானியம் என்றால், மானியமாகத்தான் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். அதுவும், இரண்டாவது, நீங்கள் அந்தப் பணத்தை வாங்கியதிலே, 11.46 கோடி ரூபாய் மொத்தமும் பயன்படுத்தாமல் வைத்துக்கொண்டிருந்தீர்கள். இங்கேகூட நீங்கள் எப்படிச் செய்திருக்கிறீர்கள் என்றால், திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் இந்த சைக்கிள்கள் கொடுத்தது குறித்து ஆய்வு செய்ததில், '15 பள்ளிகளைச் சேர்ந்த 1,116 நேர்வுகளில் இத்திட்டத்தின்கீழ் தகுதி பெறாமல் 262 மாணவியர், அதாவது மாதாந்திர இலவசப் பேருந்து அட்டை பெறுபவர்களாகவோ அல்லது பள்ளியின் வளாகத்திலே இருப்பவர்களாகவோ உள்ளவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்'; '262 மிதிவண்டிகள் மீதான முறையற்ற செலவினம் 3.56 இலட்சம் ரூபாய் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மிச்சப்படுத்தப்பட்டிருக்கிற 11.46 கோடி ரூபாயான இந்தத் தொகை வேறு திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது' என்று இங்கே இந்த அதிகாரியினுடைய தகவலிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் படிக்கின்ற மாணவ, மாணவியர் அனைவருக்கும் இலவச சைக்கிள்கள் வழங்குவது என்பது முழுக்க முழுக்க மாநில அரசின் திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசின் இந்தத் திட்டத்தை எந்தவகையிலும் மத்திய அரசு support செய்யவில்லை. அதற்கு எந்த ஆதரவும் கொடுக்கவில்லை. முதல் ஆண்டில், மத்திய அரசு, ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டில் States legitimate share of plan assistance என்ற வகையில் ஒரு நிதியைக் கொடுத்தார்கள்; அவ்வளவுதான். அந்த நிதியின் ஒரு பகுதியை நாங்கள் இந்த இலவச சைக்கிள்கள் வழங்குகின்ற திட்டத்திற்காகப் பயன்படுத்தினோம். அவ்வளவுதானே தவிர, இந்த சைக்கிள்கள் வழங்குகிற திட்டம் முழுக்க முழுக்க மாநில அரசின் திட்டம்தான். இந்த இலவச சைக்கிள்கள் வழங்குகிற திட்டம்,

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்தே இது இந்த மாநில அரசின் தனிப்பட்ட திட்டமாகும் என்பது தெளிவாகிறது.

மேலும், Sarva Shiksha Abhiyan என்ற திட்டத்தின்கீழ்கூட, மாநில அரசு ஒட்டுமொத்தச் செலவில் 25 சதவீதம் கொடுக்கிறது, தனது பங்காக. 2005–2006–ல்கூட, மாநில அரசு இந்த Sarva Shiksha Abhiyan திட்டத்திற்கு 125 கோடி ரூபாய் வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** அப்பாடா! இப்போதுதான் சொல்கிறார்கள். சரி, right. (குறுக்கீடு) சரி, right, right. இன்னொன்று, பணத்தை ஒதுக்குவதுகூட பெரியது இல்லை. ஆனால், எப்போது செலவு பண்ணுகிறீர்கள்? இதோ Audit Report. இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று கேட்டால், இந்தச் செலவினங்கள் எல்லாம் ஒரே மாதத்திலே செலவு பண்ணியிருக்கிறார்கள் Sir. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இதுபற்றியெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு இலாகாவிற்கும் number உண்டு. அந்த number பிரகாரம் பார்த்தீர்கள் என்றால், '3604 199 1A'; 192 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், அந்த head–லே. (குறுக்கீடு) அந்த head, நீங்கள் பாருங்கள். அந்த head–ஐப் பாருங்கள். அந்த head, பஞ்சாயத்திலே வருகிறது. அந்த head–ஐ நீங்கள் பார்க்கவேண்டும். பஞ்சாயத்திலே, சொல்லவில்லையா என்ன திட்டம் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பெரிய மர்மக் கதை மாதிரி இருக்கிறதே, என்ன? Head என்றால், ஒதுக்கப்பட்டது என்ன திட்டத்திற்கு?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை, ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, head of account பற்றி அவர் சொல்கிறார். அவர் (குறுக்கீடு) இல்லை... (குறுக்கீடு) Head of account என்று சொல்கிறீர்கள். எந்தத் திட்டத்திற்கு எந்த head of account–லே ஒதுக்கப்பட்டது? அதைப்பற்றி முதலில் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** Audit Report –லே இவர்கள் சொல்கிறமாதிரி போடமாட்டார்கள். அதிலே என்ன போடுவார்கள் என்றால், இது எதிலே வருகிறது என்றால், பஞ்சாயத்திலே வருகிற பல திட்டங்களுக்கு–



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவரத்தைச் சட்டப் பேரவையிலே சொல்கிறோம் என்றால் அந்த head of account என்று அவர் சொல்லும்போது எந்தத் திட்டத்திற்கு ஒதுக்கியது என்று தெளிவாகச் சொல்லவேண்டாமா? (குறுக்கீடு) இல்லையென்றால் அதுபற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் Head of account என்று சொன்னால், அந்தப் பணத்தை எந்தத் திட்டத்திற்கு ஒதுக்கினார்கள்; எதற்கு ஒதுக்கினார்கள்?

**திரு. துரைமுருகன்:** இது Audit Report. அப்படித்தான் போடுவார்கள். Head–ஐச் சொல்கிறேன். அது எந்த head –க்கு ஒதுக்கப்பட்ட பணம் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. திரு. துரைமுருகன், Report–இலே அப்படிச் சொல்லியிருப்பது சரி.

**திரு. துரைமுருகன்:** நான் சொல்கிறேன் Sir. இப்போது நான் ஒன்றைச் சொல்கிறேன், கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதை எடுத்துச் சொல்கிறபோது, எந்தத் திட்டத்திலே என்பதை நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பிற்பகல் 12–05

**திரு. துரைமுருகன்:** Sir, 2235, இது head. இது என்ன head என்று பார்த்தால், முதியோர் pension என்றிருக்கும். அந்த முதியோர் pension (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள், நீங்கள். அப்படிச் சொன்னால்தானே அந்தத் துறை அமைச்சர் விளக்கம் சொல்லமுடியும்.

**திரு. துரைமுருகன்:** முதியோர் pension வந்தது என்றால், அதற்கு ஒதுக்கப்பட்டது– (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இடையிலே குறுக்கே பேசாதீர்கள். யாராக இருந்தாலும், ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கே பேசக்கூடாது.

**திரு. துரைமுருகன்:** Sir, ஒன்றை வைத்துக்கொள்ளுங்கள். இது கொஞ்சம் பெரிய விஷயம். கொஞ்சம் அவாளையெல்லாம் பேசாமல் இருக்கச் சொல்லுங்கள். அதாவது.. (சிரிப்பு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் பேச ஆரம்பித்தது முதல் ஏதோ மத்திய அரசு அதிகப்படியான நிதியை மாநில அரசுக்கு வழங்கிக்கொண்டிருப்பதாக, அதுபோல அவர் பேசினார். மத்திய அரசுக்கு வருகின்ற வருவாயை மாநில அரசுகளுக்கு எவ்வாறு பகிர்ந்து கொடுக்கவேண்டும்; எந்த அளவிற்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்பதை முடிவு செய்வது Finance Commission—உங்களுக்காகத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து கவனியுங்கள்—மத்திய அரசு, மத்திய அரசுக்கு வருகின்ற வருவாயை—திரும்ப நீங்கள் எதையோ பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்காகத்தானே கஷ்டப்பட்டு விளக்கத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) கேளுங்கள் நீங்கள்—மத்திய அரசுக்கு வருகின்ற வருவாயை மாநில அரசுகளுக்கு எவ்வாறு பகிர்ந்தளிப்பது; மாநில அரசுக்கு எவ்வளவு வழங்குவது என்பதை முடிவு செய்வது Finance Commission. அந்த Finance Commission ஒரு Constitutional body. அதாவது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு. ஆகவே, மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்குகின்ற பணம் இனாம் அல்ல, அது தருமமும் அல்ல, பிச்சையும் அல்ல. அது மாநில அரசின் உரிமை. (மேசையைத் தட்டும் ஒலி) The Central Government is giving the States' legitimate share of revenues.

உண்மையைச் சொல்லவேண்டுமானால், தமிழ்நாட்டின் பங்கு, மத்திய அரசுக்கு வருகின்ற வரிப் பணத்தில் தமிழ்நாட்டிற்கு வழங்குகின்ற பங்கு படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பிற மாநிலங்களைவிட மத்திய அரசின் வருவாய்க் கணக்கிற்கு மிக அதிகமாக வழங்குகிறது. வரிப் பணத்தை வசூல் செய்து வழங்குகிறது. ஆனால், மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு மிகக் குறைந்த அளவே நிதி வழங்குகிறது. அது படிப்படியாகக் குறைக்கப்பட்டே வருகிறது. ஆகவே, மாநில சுயாட்சி என்று கொள்கை அளவில் பேசுகின்ற தி.மு.க. போன்ற கட்சிகள், மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலே, மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலே பேசக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. துரைமுருகன்:** இதில் வேறு என்ன பெரிய பிரச்சினை என்று கேட்டீர்கள் என்றால், நான் வேறு Subject-க்குப் போகும்போது, அவர்கள் எழுதிக் கொடுத்ததைப் படித்தார்கள் என்றால், பழைய கணக்குக்குப் போய் விடுகிறார்கள். அதனால் பரவாயில்லை, இதையாவது சொன்னார்களே! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன். (குறுக்கீடு) இன்னொன்றைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** முதியோர் pension-க்கு . . .(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள், சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. துரைமுருகன், Audit Report எல்லாம் வந்து, அதைப் பொதுக் கணக்குக் குழுவிலே வைத்து, அது விவாதித்து முடிவு செய்யவேண்டிய ஒன்று, Audit Report என்பதெல்லாம். அதைச் சட்டமன்றத்திலே சொல்லக்கூடியது மரபு அல்ல. (குறுக்கீடுகள்) இப்பொழுது அதைப் பொதுக் கணக்குக் குழுவிலே வைத்திருந்தால், அது என்ன head-லே வருகிறது என்று உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) பொதுக் கணக்குக் குழுவிலே வைத்திருந்தால், அது என்ன head-லே வருகிறது என்று தெரியும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இப்போது அவர் விவரம் தெரியாமல் திண்டாடுவதால் சொல்கிறேன். திரு. எஸ்.ஆர்.பி அவர்கள், அவர் அதைக் குறிப்பிட்டு எந்தத் துறை என்று சொல்லமுடியாமல் திண்டாடுகின்ற காரணத்தால் சொல்கிறேன். நீங்கள் பொதுக் கணக்குக் குழுவிலே வைத்தால், எந்த head என்பது உங்களுக்குத் தெரியும். திரு. துரைமுருகன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 115 கோடி ரூபாய் சத்துணவிற்காக ஒதுக்கப்பட்டது. ஆனால், மார்ச் 2003-ல் மேற்கொள்ளப்பட்ட செலவினம் 115 கோடி ரூபாய். 100% மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்ட செலவில் மொத்தச் செலவினத்தின் மீதான சதவிகிதம். அதாவது, ஒரே மாதத்திலே, மார்ச் மாதத்திலே மட்டும் அந்த 115 கோடி ரூபாயைச் செலவு செய்திருக்கிறார்கள். அந்த மாதம் மட்டுமா அவ்வளவு என்று கேட்டால், அதற்கு முன்னாலே சத்துணவிற்காகச் செலவு பண்ணப்படவில்லையா; என்ன ஆயிற்று; ஏன் இந்த நிலைமை என்று இதிலே பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆகையினாலேதான் நான் சுட்டிக்காட்டுகிறேன். பணம் ஒதுக்குவது பெரிதல்ல. ஆனால், ஒதுக்கப்பட்ட பணம் வேகமாகச் செல்கிறதா என்பதை நீங்கள் காணவேண்டும் என்று கேட்டேன்.

இன்னொன்று, இங்கேகூடச் சொல்கிறார்கள். அதாவது, வெளிநாட்டிலேயிருந்து எல்லாம் எங்கள் ஊருக்கு வருகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலேயிருந்து எல்லாம், எங்கள் மாநிலத்திற்கு வந்து தொழில் நடத்துகிறார்கள். நல்லதுதான், யார் வேண்டாமென்கிறார்கள்? நல்லதுதான், உண்மைதான், நடத்தினால் நிரம்ப மகிழ்ச்சிதான். ஆனால், அமெரிக்காவில் இந்த மாநிலத்தைப் பற்றி ஒரு விளம்பரம் கொடுத்தார்கள். அந்த விளம்பரம் 3¾ கோடி ரூபாய். அதை அந்த ஊரிலே எவன் பார்க்கிறான்? அந்த ஒரு நாளைக்கு வாங்கிப் பார்த்துவிட்டுப் போய்க் கொண்டேயிருப்பான்.

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளம்பரத்தை Wall Street Journal என்ற பத்திரிகையில் தமிழக அரசு வெளியிட்டது. இது அமெரிக்காவில் மட்டுமல்ல, உலக நாடுகளில், வளர்ந்த நாடுகளில் தொழில் அதிபர்கள் அனைவரும் வாங்கிப் படிக்கின்ற ஒரு பத்திரிகை. தமிழ்நாட்டில் என்னென்ன கட்டமைப்பு வசதிகள் உள்ளன; புதிய தொழில் முதலீடுகள் செய்வதற்கு எந்தவகையில் மாநில அரசு ஊக்கம் அளிக்கும் போன்ற விவரங்களையெல்லாம் இந்த விளம்பரத்தில் வெளியிட்டோம். ஆகவேதான், பல நாடுகளிலிருந்து நிறைய முதலீடுகள் தமிழகத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இது பயனுள்ள ஒரு செலவுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** வந்தால் சரிதான். மகிழ்ச்சிதான். ஏனென்றால், மூன்றே முக்கால் கோடி என்பது பெரிதல்ல. ** யோவ், agency-க்குக் கொடுக்கவேண்டும் ஐயா. Agency-க்குக் கொடுத்தாக வேண்டும் ஐயா. விளம்பரத்தை நாமாகவே கொடுக்கமுடியாது அங்கே. அதற்கென்று ஒரு agency அங்கே இருக்கும். அதற்குக் கொடுத்தாகவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன ** என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) விளம்பரத்தோடு நில்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அது சரி, சரி, சரி Sir. நான்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. துரைமுருகன்:** நீக்கலாம். அடுத்து இன்னொன்று Sir. நான் யாரையும் குறை சொல்லவில்லை, எந்தப் பத்திரிகையையும் குறை சொல்லவில்லை. 2003 வரையில் ஒரு column சென்டி மீட்டருக்கு தினத்தந்தியில் 986 ரூபாய் இருந்தது. இப்போது, 9–1–2006 முதல் ஒரு column–க்கு 1,786 ரூபாய் போட்டிருக்கிறார்கள். அதேபோல் மாலை முரசுக்கு, 2003–ல் ஒரு column–க்கு 200 ரூபாய் இருந்தது, விளம்பரம். (குறுக்கீடு) மாலை மலருக்கு. ஆனால், இப்போது 9–1–2006 முதல் 406 ரூபாய் கொடுக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், தினத்தந்திக்கு circulation இருக்கிறது, நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்கு நீங்கள் விளம்பரம் கொடுத்தால் நல்லதுதான், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இதேபோல் மற்ற பத்திரிகைகளுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுமா என்று முதலமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஏதோ ஒரு தனிப்பட்ட பத்திரிகைக்கு மட்டும் நாம் சலுகை அளிப்பதாக, என்ற தோற்றத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பத்திரிகையினுடைய circulation–ஐப் பொறுத்துதான் அதனுடைய வரியே நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரி அல்ல, விளம்பரம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதன் விளம்பரத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** அதேமாதிரி ஒரு review பண்ணிக் கொடுத்துவிட்டீர்கள் என்றால் நிரம்ப மகிழ்ச்சி. எனக்கு ஒன்றும் அதிலே பிரச்சினை கிடையாது. இன்னொன்று, இந்த ஆட்சியில் முக்கியமாக மக்களுக்கு எந்தத் திட்டம் போட்டாலும், எது போட்டாலும் கடைசியிலே என்ன? கீழே இருக்கிற மக்களை வாழ வைக்கவேண்டும். அதுதானே எந்தச் சர்க்காராக இருந்தாலும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும், உங்கள் ஆட்சிக்கும் இன்றைக்கு என்ன நிலைமை? விலைவாசி ஆகாயத்திலே பறக்கிறது. 20–1–2001–ல் (குறுக்கீடு) அதற்காகத்தான், Super market–இலே போய் வாங்கிக்கொண்டு வந்தேன். (குறுக்கீடு) 20–1–2001–ல் துவரம்பருப்பு ஒரு கிலோ 23 ரூபாய் 50 பைசா.

ஆனால் இன்றைக்கு 26 ரூபாய் 50 பைசா. (குறுக்கீடுகள்) கடலைப் பருப்பு, எங்களுடைய ஆட்சியில் 24 ரூபாய்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை (குறுக்கீடுகள்) உட்காருங்கள். துரைமுருகனுக்கு அந்த விலை தெரியாத காரணத்தால்தான், அவர் Super market-க்குப்போய் அவ்வளவு சிரமப்பட்டு வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவரம் பருப்பெல்லாம் விளைவதே வடபுலத்து மாநிலங்களில். அங்கிருந்து இங்கு கொண்டுவர லாரிக்கு டீசல் விலையை நீங்கள்தான் உயர்த்திவிட்டீர்கள். இந்த அரிசி, பருப்பு போன்ற உணவு தானிய விலை உயர்வுக்கே காரணம் டீசல் விலை உயர்வுதான். அதற்கு மைய அரசுதான் காரணம். அங்கம் வகிக்கின்ற நீங்களும் அதற்கு ஒரு காரணம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவரம் பருப்பாக இருந்தாலும், கடலைப் பருப்பாக இருந்தாலும் grading இருக்கிறது. அந்த grading அடிப்படையிலேதான் விலை நிர்ணயம் பண்ணுவார்கள். நீங்கள் Super market-லே வாங்கினால், அதற்கு ஒரு rate. அதையே Food World-லே வாங்கினால் அதற்கு ஒரு rate. அதையே கிராமத்திலே இருக்கிற மளிகைக் கடையிலே வாங்கினால் அதற்கு ஒரு rate. நீங்கள் கிராமத்திலே இருக்கின்ற மளிகைக் கடையிலேயிருந்து வாங்கி, அந்த list-ஐ எடுத்துக்கொண்டு வாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** கிராமத்திலே போனால் இதைவிட அதிகமாக இருக்கும். உளுத்தம் பருப்பு எங்களுடைய ஆட்சியில் 28 ரூபாய். இன்றைக்கு 42 ரூபாய். சர்க்கரை எங்களுடைய ஆட்சியில் 14 ரூபாய் 50 பைசா. இன்றைக்கு ரூ.18.90. மிளகாய் எங்களுடைய ஆட்சியில் 26 ரூபாய்... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த விலைவாசி என்ன; இன்று இருக்கின்ற விலைவாசி என்ன என்பதைப் பற்றி திரு. துரைமுருகன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். தி.மு.க. இங்கே ஆட்சியைவிட்டு இறங்கும்போது அவர்கள் மத்திய அரசில் இருந்தார்கள். அதன்பிறகு, இன்றுவரை மத்திய அரசில் இருக்கிறார்கள். இந்தக் காலக்கட்டத்தில், கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் தி.மு.க. அங்கம் வகிக்கின்ற மத்திய அரசு 22 முறை டீசல் விலையை ஏற்றியிருக்கிறது. ஆகவே, டீசல் விலை



உயர்ந்தாலே மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருட்களின் விலைவாசியும் உயரும் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மைதான். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு இந்த அளவுக்கு டீசல் விலையை உயர்த்தாமல் இருந்திருந்தால் இங்கேயும் விலைவாசி உயராமல் இருந்திருக்கும்.

பிற்பகல் 12-15

**திரு. துரைமுருகன்:** இவ்வளவு நிலையிலும் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதுதான் ஒரு அரசாங்கத்தினுடைய கெட்டிக்காரத்தனம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விஷயங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. உதாரணத்திற்கு, பொது விநியோக முறையில் வழங்கப்படுகின்ற அரிசி. ஆகவே, அதன் விலையை உயராமல் பார்த்துக்கொண்டிருக்கிறோம். கிலோவிற்கு மூன்று ரூபாய் ஐம்பது பைசா என்ற விலையிலேயே கொடுத்துக்கொண்டிருக்கிறோம். பஸ் கட்டணங்களை மாநில அரசு நிர்ணயிக்கலாம். நீங்கள் எத்தனை முறை அங்கே டீசல் விலையை உயர்த்தினாலும், இங்கே தமிழ்நாட்டில் பஸ் கட்டணங்கள் உயராமல் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவையெல்லாம் மாநில அரசின் சாதனைதான். மக்கள்மீது மாநில அரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகின்றது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், ஒரு பத்து மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதற்குள்ளேகூட பேசி முடித்துவிடுகிறேன், Sir. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு பத்து மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** சரி, சரி, இப்போது முடிக்கச் சொன்னால்கூட முடித்துவிடுகிறேன். அதில் ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. அமராவதி பாலம் அடித்துக்கொண்டு போனது பற்றியெல்லாம் இங்கே ஒரு நாள் விவாதம் நடந்தது. பாலங்கள் கட்டுவது சில நேரங்களில் அடித்துக்கொண்டு போவதும் இயற்கையினுடைய சீற்றத்தால் நடக்கும்.

உடனே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்டது அந்தப் பாலம். ஆகையினாலே அதற்கு ஒரு Commission–ஐப் போடு; கலைஞர்மீது ஒரு case–ஐப் போடு என்று போட்டார்கள். அது அவர்களுடைய இஷ்டம். அதற்குள் நான் போகவில்லை. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திருவண்ணாமலை மாவட்டம், மேற்காரணி ஊராட்சி ஒன்றியம், அப்பநல்லூர் ஊராட்சியில் ஒரு பாலம் கட்டப்பட்டு, 'மாண்புமிகு அம்மா ஜெ ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது' என்று போட்டு, அதன் திறப்பு விழா 7–11–2003–இல் நடந்தது. இப்போதுதான், 2003–இல்தான் கட்டி வைத்தார்கள். அந்தப் பாலத்தைப் பார்த்தீர்களானால், அடியோடு அடித்துக்கொண்டு போய்விட்டது. அடியோடு போய்விட்டது. அந்தப் பாலத்தினுடைய படத்தை வைத்திருக்கிறேன். பாலம் அடித்துக்கொண்டு போய்விட்டது.

மூன்றாவது இன்றைக்கு என்ன நிலைமை என்று கேட்டீர்களானால், செண்பகத்தோப்பு அணை என்று போளூரில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. கலைஞருடைய காலத்தில் அந்த அணை கட்டுவதற்கு ஆணையிடப்பட்டது. அப்போது 1996–ல் அதனுடைய மதிப்பீடு 23.46 கோடி ரூபாய். அதற்குப்பிறகு நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அதற்கு revised estimate போட்டிருக்கிறீர்கள், அது போடாமல் இருக்க முடியாது, போட்டிருக்கிறீர்கள். அது 41 கோடி ரூபாய்க்குப் போய் நின்றிருக்கிறது. ஆனால் இப்போது கேரளாவைச் சேர்ந்த ஒருவர் அதை எடுத்து கட்டினார். உங்களுடைய ஆட்சியில்தான் கட்டினார். ஆனால் நிலைமை என்ன தெரியுமா, தலைவர் அவர்களே? இன்றைக்கு அந்த dam இப்படி விரிசல்விட்டுப்போய் கிடக்கிறது. எந்த நேரத்திலும் உடைந்து போகலாம். இப்படி விரிசல்விட்டு ஐந்து கண்களிலே மூன்று கண்கள் மூடியபிறகும் dam-ல் விரிசல் ஏற்பட்டிருக்கிறது. முழுக்க வீடியோ எடுத்து வைத்திருக்கிறேன். (குறுக்கீடு) சி.டி.யா இது? நமக்குத் தெரியாது. சி.டி. வைத்திருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் குறிப்பிடுகின்ற பாலங்களைப் பற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. ஆகவே, அவர் சொல்வது உண்மைதானா, சரிதானா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால், இந்த அமராவதி பாலத்தைப் பற்றி ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு திறக்கப்பட்ட இந்த அமராவதி பாலம், 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த பெருமழையில் உடைந்துபோய்விட்டது. ஆனால்,



இப்பாலத்திற்கு அருகிலேயே 40 மீட்டர் தூரத்தில் ஏற்கெனவே உள்ள, கடந்த 1924 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழைய ஆற்றுப் பாலத்தில் மழை வெள்ளத்தில் சிறிய சேதம்கூட ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** உங்களிடம் ஓர் ஆதாரம் இருக்கிறது. என்னிடம் உள்ள ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறேன், பார்த்துக்கொள்ளுங்கள், அதிலே ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஆனால்—நீங்கள் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.(குறுக்கீடு)

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சுட்டிக்காட்டிய மேற்காரணி, அப்பநல்லூர் என்கிற அம்மாபாளையம் என்ற கிராமத்தில் சிறு பாலம் பத்து இலட்ச ரூபாயில் கட்டப்பட்ட அந்தப் பாலம்—60 ஆண்டுகளுக்கு மேலாக மழையே இல்லாமல் வெள்ளமே வராத அந்தப் பாலத்தை 60 ஆண்டுகளுக்குமேல், பாலத்திற்கு மேல் ஒரு ஆள் ஒன்றரை ஆள் உயரத்தில்—6 அடி தண்ணீர் போனதால், ஒரு மரம் கொண்டுவந்து – ஆற்று வெள்ளத்தில் அடித்து குறுக்கே நின்றுவிட்ட காரணத்தால் வெள்ளம் தாங்க முடியாமல் அந்த ஊர் மக்களே 60 ஆண்டுகளுக்கு மேலாக வராத வெள்ளம் இப்போது வந்திருக்கிறது, யார்மீதும் தவறு கிடையாது என்று ஊர் மக்களே சொன்னதை அவர்கள் அறிவார்கள். இது என் தொகுதி சார்ந்த அம்மாபாளையம் என்ற ஊர்; அப்பநல்லூர் என்கிற அம்மாபாளையம், இதுபற்றி அப்போதைக்கு அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்கூட தகவல் தந்திருக்கிறார்; பத்திரிகையிலும் வந்திருக்கிறது. அதுவும் பத்து இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். 60 ஆண்டுகளுக்கு மேலாக வராத வெள்ளம் அப்போது வந்தது. நான்கு ஆண்டுகளாக பஸ், லாரி போன்ற எல்லா வாகனங்களும் போய்க் கொண்டிருந்தன, அந்தப் பாலத்தின் வழியாக என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் தொகுதி. அதனால், அவர் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், செண்பகத்தோப்பு நீர்த்தேக்கத் திட்டத்தினுடைய கட்டுமானப் பணியில், சில குறைபாடுகள் இருப்பதாக அரசின் கவனத்திற்கு இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்த செண்பகத்தோப்பு நீர்த்தேக்கத் திட்டம், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கமண்டல ஆற்றின் குறுக்கே அமைக்கப்படுகின்ற இந்தத் திட்டத்திற்கு, 5–01–2001–ல், 34 கோடி ரூபாய் என்ற அளவிற்கு, அப்பொழுதே திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, சந்திரகிரி என்ற ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது அந்தத் திட்டம், இரண்டாவது முறையாக, திருத்திய மதிப்பீடாக, ரூ.41 கோடியே 50 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதிக்கு அரசினுடைய கவனத்திற்கு, இங்கே அரசுக்கு வரப்பெற்றிருக்கின்றது. இந்த நீர்த்தேக்கத் திட்டத்தின்மூலம், 6,293 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. 96 சதவிகிதப் பணிகள் தற்போது நல்ல முறையில் முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த செண்பகத்தோப்பு நீர்த்தேக்கக் கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக, நானேகூட நேரில் சென்று, கட்டுமானப் பணிகளுடைய தரத்தைப் பார்த்தபொழுது, நல்ல முறையிலும், உறுதித் தன்மை மிக்கதுமாக அந்தப் பணி, நிறைவாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கு அதில் சில குறைபாடுகள் இருப்பதாக, இப்பொழுதுதான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதனை முழுமையாக, அந்த நீர்த்தேக்கத் திட்டத்தினுடைய கட்டுமானப் பணியில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், உடன் மேற்கொண்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றுவரை, அந்தக் கட்டுமானப் பணியில், ஒவ்வொரு கட்டுமானப் பணியும் நடைபெறுகின்றபொழுது, மாதம் வாரியாக அதனுடைய கட்டுமானத்தினுடைய உறுதித் தன்மையைப் பரிசோதனை செய்த பிறகுதான், அடுத்த கட்டுமானத்திற்கு நாம் அனுமதி கொடுக்கின்றோம். அந்தவகையில்தான், இந்த நீர்த்தேக்கமும், ஒவ்வொரு மாதமும், அதனுடைய கட்டுமானப் பணியின் உறுதித் தன்மையைப் பரிசோதனை செய்த பின்புதான், அடுத்த கட்டுமானப் பணிக்கு அனுமதி



கொடுக்கின்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், எந்தத் தவறும் அங்கே நடக்க வாய்ப்பில்லை; இருப்பினும், அரசு அதனை ஆய்வு செய்து, தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதுதான், இப்பொழுது நான் குற்றஞ்சொல்லவில்லை. இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதை எப்படி வாங்கி, மீண்டும் அரசு கவனிக்கும் என்பதைச் சொல்கிற அந்தப் பெருந்தன்மையைப் பார்த்தேன். உள்ளபடியே தனிப்பட்ட முறையில், அவருக்கு என் பாராட்டு. இதுதான் ஒரு அமைச்சருடைய பதில்; இப்படித்தான் இருக்க வேண்டும். மைய அரசு, மைய அரசு, மைய அரசு என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம்? உயிரை வாங்கிக் கொண்டிருப்பது. இதுதான் விளக்கம். That is the Minister's Statement.

கடைசியாக ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், இங்கே பட்ஜெட்டைப் பற்றி இறுதியாக, நிறைவாக ஒன்று சொல்ல வேண்டும்; ஏதாவது சொல்ல வேண்டும் என்று பார்க்கிறேன். அதிலே ஒன்றுமே இல்லை, நான் எதைச் சொல்வது? ஆனால், அதற்காக என்ன செய்யலாம் என்று கேட்டால், இந்த பட்ஜெட்டிலே தெரிவிக்க வேண்டியவற்றை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், என்ன காரணத்திற்காக இப்பொழுது கொண்டு வந்தார்கள்? முதலமைச்சர் அவர்கள் பல சலுகைகளையெல்லாம் சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கு உடனே 50 per cent கொடுக்கிறோம், உயர்த்திக் கொடுக்கிறோம், உயர்த்திக் கொடுக்கிறோம், அப்புறம் மண் அடிச்சது, தென்னைமரத்துக்கு இவ்வளவு என்று statement–ஐ எடுத்து, கடகடகடன்னு அடித்தார்கள். தூள் கிளப்பினார்கள், அன்றைக்கு. ஆனால், இதெல்லாம் எதற்கு என்று மக்களுக்குத் தெரியும். (கூச்சல்–குழப்பம்) எதுக்கு என்று தெரியும். இப்பொழுது நீங்கள், அரசு ஊழியர்களுக்கு 50 per cent கொடுக்கிறோம், சேர்த்துக் கொள்வோம்; அது, இது என்று சலுகைகளெல்லாம் சொல்கிறீர்கள் என்று அவனுக்குத் தெரியாதா? ஓட்டுப் வைத்துக்கொள்வோம். ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, ஒரே போடப்போகும்போது, அடடா! ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, ஒரே நாளிலே இரண்டு இலட்சம் பேரை வீட்டுக்கு அனுப்பியது ஞாபகம் வருதே; Supreme Court சொன்னபிறகும் judge கிட்ட இழுத்தார்களே,

ஞாபகம் வருதே; உடனடியாக office, வீட்டைக் காலி பண்ணச் சொன்னார்களே, ஞாபகம் வருதே; செத்துப்போனவர்கள் ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே என்று வராமலா போய்விடும்? அப்பொழுது குத்துவான் மாற்றி. அப்படிக் குத்தினான் என்றால், நாங்கள் அங்கே, நீங்கள் இங்கே. நன்றி, வணக்கம். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்தபொழுது, தமிழகத்தினுடைய நிலைமை என்னவாக இருந்தது என்பதனை மாண்புமிகு அம்மா அவர்கள் பலமுறை இந்த மாண்புமிகு சட்டமன்றத்தில் விரிவாக விளக்கியிருக்கின்றார்கள்.

அந்த நேரத்தில் சில பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற அடிப்படையில் சில சீர்திருத்தங்களை எடுக்கவேண்டிய கட்டாயச் சூழ்நிலைக்கு இந்த அரசு எவ்வாறு தள்ளப்பட்டது என்பதனையும், ஒரு நோய் குணமாவதற்கு, அதனுடைய தாய், குழந்தைக்குக் கசப்பு மருந்து வழங்குவது வழக்கம். அந்தக் குழந்தை அந்த மருந்தினுடைய தன்மையைப் புரிந்துகொள்ளாமல், அது கசப்பாக இருக்கின்றது என்ற காரணத்திற்காக அந்த மருந்தைத் தட்டிவிடுகின்ற ஒரு சூழ்நிலைகூட ஏற்படும். ஆனால், அந்த மருந்து, அந்த நோயைத் தீர்ப்பதற்காகத்தான் என்பது அப்போது, அந்தக் குழந்தைக்குத் தெரியாது. இவ்வளவு நிலைமைகள் எல்லாம் இருந்தும்; சீர்திருத்தத்தால், ஓர் ஆண்டிற்குள் அரசினுடைய பொருளாதாரத்தை முழுக் கட்டுப்பாட்டிற்குள் உறுதியாக நான் கொண்டு வருவேன்; கொண்டு வந்ததற்குப் பின்னால் மீண்டும் அத்தனை சலுகைகளும், திட்டங்களும் இந்த நாட்டிற்காக அர்ப்பணிக்கப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தத் தேர்தல் காலத்திற்காக, இன்று சொல்லவில்லை; *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளை 2002–ல் எடுத்த நேரத்திலே, அந்த நேரத்தில் விளக்கமாகவும், விவரமாகவும் சொல்லியிருந்தார்கள். அந்த நிலைமைகள் மீண்டும்—மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளின் காரணமாக, அனைத்துத் துறைகளிலும் இன்றைக்கு அந்தச் சீர்திருத்தங்கள்—உருவாக்கப்பட்டு, இந்தியாவிலே தமிழகத்தினுடைய பொருளாதாரம், நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத்தான் இன்றைக்கு நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*



மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள்கூட, நேற்று ஒரு கருத்தை அவர்களுடைய நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போதுகூட சொன்னார்கள். எடுத்த எடுப்பிலேயே, இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், வகுத்து, கழித்து, தொகுத்துப் பார்த்தால், ஒன்றும் இல்லையென்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டார்கள். பெருக்கலை அவர்கள் சொல்ல மறந்துவிட்டார்கள். நான்கரை ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சாதனைகளையும், கடந்த தி.மு.க. ஆட்சியில் 1996–லிருந்து 2001 வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்த சாதனைகளையும் ஒப்பிட்டுப் பெருக்கிப் பார்த்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனை நன்றாக அனைவருக்கும் தெரியும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் தனது உரையை நிறைவு செய்யும்போது, 'இப்படி நடந்துவிட்டால்' என்ற ஒரு கற்பனையைச் சொல்லி, தேர்தலுக்குப் பிறகு அவர்கள் இங்கேயும், நாங்கள் அங்கேயும் இருப்போம் என்று சொன்னார். அவருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேர்தலுக்குப் பிறகும் நாங்கள் இங்கேயேதான் இருப்போம். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், நீங்கள் அங்கேயாவது இருப்பீர்களா என்பதே சந்தேகம். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரைமுருகனும் சரி, அவர் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும் சரி, மல்லாந்து படுத்துக்கொண்டு கனவு காண்கின்றார்கள். நிச்சயமாக அது நடக்காது. எங்களுக்குக்கூட ஞாபகம் வருகின்றது. ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் ஆதிதிராவிட மக்களுடைய இரத்தம் தாமிரபரணி ஆற்றிலே ஓடியது ஞாபகம் வருதே. ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, கோயம்புத்தூர் மாவட்டத்திலே ஒரு சிறு கலவரத்தைக்கூட அடக்க முடியாமல் செல்வராஜ் என்கின்ற constable வெட்டிக் கொல்லப்பட்டு, இந்துக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும், கிருஸ்தவர்களுக்கும் பாதுகாப்பு இல்லாத தன்மை அந்த 5 ஆண்டுக் காலத்திலே ஞாபகம் வருதே, ஞாபகம்

வருதே, இன்றைக்கும் ஞாபகம் வருதே; (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டு மக்கள் நிம்மதியாக, அமைதியாக வாழகூட முடியாத ஒரு சூழ்நிலையில் 5 ஆண்டுக் காலம்—நெசவாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள்—அத்தனை பேரும் கஷ்டப்பட்டது தி.மு.க. ஆட்சியிலே ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அம்மா அவர்கள் சொன்னபடி நாங்கள் இங்கே, உங்களுக்கு அங்கேயும் இடமில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் உறுப்பினர்கள் பல கருத்துகளை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவை குறித்து என் பதிலுரையை அளிக்க விரும்புகிறேன். முந்தைய தி.மு.க. அரசு நிதிநிலை மேலாண்மையைச் சரிவர நிர்வகிக்காததால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 2001 ஆம் ஆண்டு மே திங்களில் பதவியேற்றபோது, சீர்குலைந்த நிதிநிலையை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். கடந்த 5 ஆண்டுக் காலமாக நிதி நிர்வாகத்தைத் திறமையுடன் கையாண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆட்சியில், தி.மு.க. ஆட்சியால் விட்டுச் செல்லப்பட்ட மோசமான நிதிநிலையைச் சீர்செய்து, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் இட்டுச் செல்வதற்கு வழிகாட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, பாராட்டி, என் உரையைத் தொடங்குகிறேன்.

ஏழை மக்களின் நலனுக்கு பாதகமின்றி, மிகக் குறுகிய காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு நிதிநிலையில் எய்திய வியத்தகு திருப்புமுனைச் சாதனை, இந்தியாவிலேயே எந்த மாநிலமும் எய்தாத அளப்பரிய ஈடு இணையற்ற சாதனையாகும். வெற்றிகரமாக 5 ஆண்டுக் காலத்தை மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு நிறைவு செய்து, தனது இறுதி வரவு-செலவுத் திட்டத்தை இம்மன்றத்தில் வைத்திருக்கும் இத்தருணத்தில், கடந்த 5 ஆண்டுகளில் மாநிலத்தின் நிதிநிலை எத்தகைய அளவிற்குச் சீர்செய்யப்பட்டுள்ளது என்பதனை



விளக்குவது என் கடமையாகும். ஒரு மாநில அரசின் நிதிநிலையின் ஆரோக்கியத்தை ஒருசில குறியீடுகள் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக எடுத்துரைக்கும். அவற்றில் ஒருசில குறியீடுகள் 5 ஆண்டுகளுக்கு முன்னரும், தற்போதும் இருக்கக்கூடிய நிலையினை ஒப்பிட்டுப் பார்க்க உறுதுணை புரியும். மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில்-Total Revenue Receipt-ல் வட்டிப் பொறுப்புகளின் விகிதமானது கடன் பொறுப்பு நிர்வாகம் எவ்வாறு உள்ளது என்பதனை விளக்கும்.

1995-96-ல் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய முந்தைய அரசு காலத்தில் வருவாய் ரூபாய் 100 என்று இருந்தால், 12 ரூபாய் 20 பைசா மட்டுமே வட்டிக்குச் செலவிடப்பட்டது. ஆனால் 2000-2001 ஆம் ஆண்டுவாக்கில் தி.மு.க. அரசு காலத்தில் வருவாய் 100 ரூபாயாக இருந்தால், வட்டிச் செலவு ரூபாய் 17.06 ஆக உயர்ந்த நிலையில் இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய நிதி நிர்வாகச் சீர்திருத்த நடவடிக்கைகளின் காரணமாக, தற்போது வட்டிச் செலவு, அரசின் வருவாய் 100 ரூபாயாக இருந்தால் 14.27 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்நிலை 12-வது நிதிக் குழு மாநிலங்களுக்கு அறிவுறுத்தியிருக்கின்ற அந்த வரைமுறைகளுக்கு உட்பட்டு, இந்தச் சாதனையை மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு எய்தி இருக்கிறது.

கடன் அளவுகள் முறையாக இருப்பது மட்டுமின்றி, பெறப்பட்ட கடன் தொகைகள் முறையாகச் செலவிடப்படுகின்றனவா என்பதுதான் முக்கியம். அப்படி முறையாகச் செலவிடப்பட்டு மக்களுக்கு மேம்பட்ட பலன்களை அளிக்க வேண்டுமென்பதிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மக்கள் நலன் கருதி, தெளிவான முடிவுகளை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தவரைக்கும், Fiscal deficit-ஐப் பொறுத்தவரைக்கும், வருவாய்க் கணக்குப் பற்றாக்குறை--Revenue deficit-னுடைய பற்றாக்குறையினுடைய விகிதத்தை அளவிடுவதன்மூலம் இதை நாம் கண்டுகொள்ள முடியும்.

அன்றாட நடைமுறைச் செலவுகளுக்குக் கடன் தொகையில் எந்த அளவிற்குச் செலவிடப்படுகின்றன என்பதனைக் காட்டும் ஓர் அளவுகோல் என்பதனை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். 1999-2000 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 81.75 சதவிகிதம் என்ற உயரளவில் இருந்த அன்றாடச் செலவு, 2004-2005 மாண்புமிகு அம்மா அவர்களினுடைய

சீரிய நிர்வாகச் செம்மை காரணமாக 12.62 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு அளப்பரிய சாதனையை இந்த அரசு எய்தி இருக்கிறது.

அதைப்போலவே, மாண்புமிகு அம்மா அவர்களின்மூலம் மாநில அரசால் வாங்கப்படும் கடன்களின் பெருமளவு தொகைகள் கடந்த கால ஆட்சியில் Revenue Expenditure-க்குச் செலவு செய்ததைப்போல் அல்லாமல், தற்போது அம்மா அவர்களினுடைய ஆட்சியிலே சாலை வசதி, குடிநீர் வசதி, பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள் போன்ற நிலையான சொத்துக்களையும், கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கவே செலவிடப்படுகிறது என்பதை அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்நிலையை மேலும் விளக்குவதாயின், 1999–2000 ஆம் ஆண்டுவாக்கிலே, அன்றைய தி.மு.க. அரசால் பெறப்பட்ட ஒவ்வொரு 100 ரூபாய் கடன் தொகையிலும், நான் ஏற்கெனவே அவையில் கூறியதைப்போல, 81.75 ரூபாய் அன்றாட நடைமுறைச் செலவுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. வெறும் 18 ரூபாய் 25 காசு மட்டுமே மூலதனச் செலவான சாலை வசதி, குடிநீர் வசதி, பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள் போன்ற செலவுகளுக்குச் செலவிடப்பட்டன. ஆனால், இந்த நிலையை முழுதுமாகத் திருத்தி அமைத்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைசிறந்த நிதி நிர்வாகத்தால் 2004–2005 ஆம் ஆண்டில் வாங்கப்பட்ட ஒவ்வொரு 100 ரூபாய் கடன் தொகையில் இருந்தும்— மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவாக்க விரும்புகிறேன். 100 ரூபாய் கடன் தற்போது மாண்புமிகு அம்மா அரசால் வாங்கப்படுகிறது என்றால், 12.62 சதவிகிதம் மட்டுமே அன்றாடச் செலவுகளுக்குச் செலவு செய்யப்படுகிறது. மாறாக, 87.38 ரூபாய் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவக்கூடிய, கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கக்கூடிய, சமுதாய வளையத்தை ஏழைகளுக்காக, பாதுகாப்பாக உருவாக்கக்கூடிய வளர் திட்டங்களுக்கு, அது செலவிடப்பட்டுவிடுகிறது. இவ்வாறு நிதிநிலையில், வளர்ச்சித் திட்டத்தில், சமூகப் பாதுகாப்பு வளையத்தில் 2001–க்குமுன், தி.மு.க. ஆட்சியில் தாழ்நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழ்நாட்டை அகில இந்தியாவே பாராட்டும்வண்ணம் தலைநிமிரச் செய்த பெருமை வெற்றி வீராங்கனை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

மேலும், 2001–2002 ஆம் ஆண்டில் அரசின் அன்றாடச் செலவுகளுக்கே சிரமப்பட வேண்டிய நிலையை இவ்வரசு முற்றிலும் தற்போது அகற்றி,



நீக்கி இருக்கிறது. முந்தைய தி.மு.க. அரசு தனது அன்றாடச் செலவினங்களைச் சமாளிப்பதற்காக, அவையில் ஏற்கெனவே பலமுறை சொன்னதைப்போல, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், 2001–2002 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்குச் செலுத்த வேண்டிய பழுப்பு நிலக்கரி மீதான ராயல்டி வகையில் 285 கோடி ரூபாயை முன்கூட்டியே பெற்று, அன்றாடச் செலவுகளுக்கேகூட கையிலே காசு இல்லாமல் திண்டாட்டத்தில் இருந்த தி.மு.க. அரசு, செலவுகளைச் செய்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூர வேண்டும்.

2000–க்கு முன்பு இருந்த மாநிலத்தின் இத்தகைய நிலைகுலைந்த நிதிநிலையினால், 2001–2002 ஆம் ஆண்டு திட்டப் பணிகளுக்குரிய செலவினங்களைக்கூட முழுமையாகத் தர முடியாத ஒரு நிலையைக் கடந்தகால ஆட்சி உருவாக்கிச் சென்றது. 6,040 கோடி ரூபாய் என இருந்த ஆண்டுத் திட்டப் பணிக்கு 5,200 கோடி ரூபாயாகக் குறைக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலையை கடந்தகால ஆட்சியினுடைய நிதி நிர்வாகம் உருவாக்கிவிட்டுச் சென்றிருந்தது. ஆனால், தற்போது இந்நிலை சரிசெய்யப்பட்டு, 2002, 2003, 2004, 2005 ஆகிய காலகட்டத்தில் இந்தத் திட்ட ஒதுக்கீட்டை முழுமையாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடைமுறைப்படுத்தி இருக்கிறது. அதனுடைய உச்சகட்ட வெற்றியாக, 2005–2006 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடான, 9,100 கோடி ரூபாய் அளவை இந்த நிதியாண்டு இறுதியில் நிச்சயம் விஞ்சுவோம் என்ற அளவுக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு செயல் நடவடிக்கைகளில் இருப்பதை அவை அறிந்து மகிழும் என்று கருதுகிறேன்.

அதைப்போலவே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் நடப்பு திட்டப் பணிகளுக்கு, 11,709 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு சாதாரண உயர்வு அல்ல. 2005–2006 ஆம் ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 28 சதவிகித இந்த உயர்வு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியினுடைய தலைசிறந்த நிதி மேலாண்மையால்தான் இந்தச் சாதனையை இந்த அரசு எய்தி இருக்கிறது. அதோடு, 10–வது திட்ட ஒதுக்கீடு 40,000 கோடி ரூபாயை, திட்டக் கால இறுதிக்குள் எய்த வேண்டுமென்ற ஒரு குறிக்கோளை நியமித்து அதன்படி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.

12 ஆம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி இயற்கைப் பேரழிவுகளின்போது ஏற்படும் செலவுகளுக்காக ஒவ்வொரு மாநிலத்திற்கும் Calamity Relief Fund அமைக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்கு மத்திய அரசு 75 சதவிகிதமும், மாநில அரசு 25 சதவிகிதமும் தருகிறது. தமிழ்நாட்டிற்கான இந்த நிதியினுடைய அளவு 209.08 கோடி ரூபாயாகும். இதிலே மைய அரசினுடைய பங்களிப்பு 156.81 கோடி ரூபாய், மாநில அரசினுடைய பங்களிப்பு 52.27 கோடி ரூபாய். இத்தகைய நிதி சாதாரண அளவில் ஏற்படும் இயற்கைச் சீற்றங்களுக்கு உரிய ஒன்று.

மாண்புமிகு உறுப்பினர்கள் மைய அரசு, மைய அரசு என்று நாங்கள் சொல்கிறோமே என்று சொல்லுகிறார்கள். சட்ட நிலை, விதிகளின் நிலை மைய அரசுக்கு எந்தெந்த பணி, மாநில அரசுக்கு எந்தெந்த பணி என்று வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த நியதியின்படி மைய அரசு நடந்துகொள்ள வேண்டும். அதைத் தட்டிக் கேட்க வேண்டிய கடப்பாடு தமிழ்நாட்டிலே இருந்து டெல்லியிலே இருக்கிறவர்களுக்கு இருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது எங்களுடைய கடமை என்ற முறையில்தான் அவற்றை நாங்கள் சொல்கிறோம். ஆனால், சாதாரண அளவிலே ஏற்படுகின்ற இயற்கைச் சீற்றங்களுக்கு Calamity Relief Fund-CRF இருக்கிறது. அசாதாரண அளவிலான, பெருமளவில் சேதங்களை ஏற்படுத்தக்கூடிய பேரழிவுகளுக்கு தேசிய அளவிலே National Calamity Contingency Fund ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய நோக்கமே தேசிய பேரழிவுகளுக்கான நிவாரண நடவடிக்கைகள் அனைத்திற்கும் மாநில அரசு உதவிபெறத் தகுதியுடையதாகி விடுகிறது. இப்படிப்பட்ட தேசியத் திட்டங்கள் குறித்த எதிர்பாராச் செலவு நிதிக்குத் தேவையான நிதியை அளிக்கும் முழுப் பொறுப்பும் மைய அரசுக்கு இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதைப்போல, அவர்கள் இலவசமாகத் தரவேண்டியது இல்லை; யாசிப்பு அல்ல; பிச்சை அல்ல, National Calamity Contingency Fund-னுடைய விதிகளின்படி தேசியப் பேரழிவு ஏற்படுகின்றபோது மாநிலத்திற்கு, அது எந்த மாநிலமாக இருந்தாலும், கட்டாயம் அந்த நிதியை, கேட்கின்ற நிதியைக் கொடுக்க வேண்டிய கடப்பாடு, கடமை, விதிகளின்படி மைய அரசுக்கு இருக்கிறது.

பிற்பகல் 12-40

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத சுனாமி, வெள்ள இடர்பாடுகள் தேசியப் பேரழிவுகள் ஆகும். எனவே இவற்றிற்கான, இந்த நிவாரணப் பணிகளுக்கான மாநில அரசுக்கு நிதி உதவி அளிக்க வேண்டியது மைய அரசினுடைய கட்டாயக் கடமையாகும். 13,685 கோடி ரூபாய் நிதி உதவியும், 2.58 இலட்சம் டன் அரிசியும், 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும் மாண்புமிகு அம்மா அவர்கள், மைய அரசை, தேவையின் அடிப்படையில், சேதாரத்தின் அடிப்படையில் கேட்டார்கள். ஆனால் வெறுமனே 1,000 கோடி ரூபாய் பணத்தையும், 21,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும் மட்டுமே தமிழ்நாட்டுக்கு மைய அரசு தந்திருக்கிறது. அந்த National Calamity Contingency Fund-இனுடைய விதிமுறைகளையே குப்பையில் போட்டுவிட்டு, மாநிலத்தைப் புறக்கணிக்கக்கூடிய ஒரு நிலையை மைய அரசு கையாளக் கூடாது. இங்கேயிருந்து, தமிழகத்திலேயிருந்து டெல்லியிலே சென்று இருக்கின்றவர்கள் இந்த விதிகளைச் சுட்டிக்காட்டி, தட்டிக்கேட்டு, அம்மா அவர்கள் கேட்ட ரூபாய் 13,685 கோடி நிதி உதவியை, அம்மா அவர்கள் கேட்ட அரிசியை, சீமெண்ணெயைப் பெற்றுத் தரவேண்டியது உங்களது கடப்பாடு. அந்தக் கடமையிலிருந்து நீங்கள் தவறி விட்டீர்கள் என்ற குற்றச்சாட்டை நான் அவையிலே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



இதுவரைக்கும் மைய அரசோ நிவாரண உதவி மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 1,114 கோடிக்கு மட்டுமே ஒப்புதல் அளித்திருக்கிறது. அதைப்போலவே வெள்ள நிவாரணத்திற்காக 358.8 கோடி ரூபாயை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது விவசாயிகளைக் காத்திருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே இருக்கின்ற விதிமுறைகளின்படி, C.R.F. norms-படி கொடுக்க வேண்டிய தொகையைவிட மூன்று மடங்கு அதிகமாக மாநில வருவாயிலிருந்து உழவர் நலனில் அக்கறை உள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உழவர்களைப் பாதுகாப்பதற்காக 358.8 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த N.C.C.F. நிதியிலிருந்து மட்டும்தான் இந்தப் பணச் செலவு மேற்கொள்ளப்பட்டதான ஒரு தவறான தகவலைத் தற்போது தந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும் ஒரு தேசியப் பேரழிவு ஆகும். இந்த நிவாரணப் பணிக்கான மொத்தத் தொகையையும் வழங்க வேண்டிய, விதிகளுக்குட்பட்ட கடப்பாடு மைய அரசுக்கு இருக்கிறது. மைய அரசு தன்னுடைய கடமையிலிருந்து தவறி, மாநில முதலமைச்சர் மாண்புமிகு அம்மாவினுடைய கோரிக்கையை ஏற்க மறுத்து, தமிழ்நாட்டு

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 25

மக்களை வஞ்சிக்கின்ற நிலையைக் கடைப்பிடிக்கின்றது. இதை மைய அரசு மாற்றிக் கொள்ளவேண்டும்.

அதேபோல, 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,001.56 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விவசாயிகள் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு, குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் வாழ்நாள் முழுவதும் சந்திக்கும் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றி இருக்கிறது.

அதோடு உலக வங்கியின் உதவியுடன் 17 ஆற்று வடிநிலப் பகுதிகளில் 3,900 கோடி ரூபாய் மூலதனச் செலவில் பாசன வேளாண்மையை நவீனப்படுத்த மற்றும் நீர் ஆதார மேலாண்மைத் திட்டம் என்னும் பெயரில் நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம் அனுமதி பெறும் நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியால் கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பாடு அடைய இந்த உன்னதத் திட்டம் விரைவிலே நடைமுறைக்கு வரவிருக்கிறது.

அதைப்போலவே, ஊரக வளர்ச்சியில் அக்கறை உள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நபார்டு வங்கியின் உதவியுடன் மொத்தம் 619 பாசனத் திட்டங்கள் 635.68 கோடி ரூபாய் செலவில் செயலாக்கத்திற்குக் கொண்டுவரும் ஓர் அற்புத சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

2006 ஆம் ஆண்டு ஜூன் 30 வரையிலான பயிர்க் கடன்கள் குறித்த 645 கோடி ரூபாய் வட்டித் தொகை முழுவதையும் தள்ளுபடி செய்து விவசாயிகள் வயிற்றிலே மாண்புமிகு அம்மா அவர்கள் பாலை வார்த்திருக்கிறார்கள்.

சாலை கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரைக்கும் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அளப்பரிய சாதனையை தொலைநோக்குச் சிந்தனையோடு மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்த்தி வருகிறார்கள். Infrastructure facilities—அடிப்படை வசதிகள்—செம்மையாக்கப்படுகின்றபோதுதான் நாட்டினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதாரம் வளர்ச்சி அடையும்; தொழில் முதலீடுகள் பிற மாநிலங்களிலிருந்து, வெளிநாடுகளிலிருந்து அதிகமாக வரும்; வேலைவாய்ப்புகள் தனியார் துறையிலும் மிக அதிகமாகப் பெருகும்



2006 ஜனவரி 25] [திரு. சி. பொன்னையன்]

என்ற உயரிய நோக்கோடு, பொருளாதாரத்தை total G.S.D.P. அதிகப்படுத்தும் நோக்கோடு, கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கோடு எந்த மாநிலமும் செய்யாத திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 12–45

சாலைகளைப் பராமரிப்பதற்கு மட்டும் 2001–2002 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் இறுதிக் காலத்திலே ஒதுக்கப்பட்ட தொகை வெறுமனே 120 கோடி ரூபாய் என்றிருந்தது. ஆனால் 7 மடங்கு அந்தத் தொகையை மிக உயர்த்தி, சாலைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும், கட்டமைப்பு வசதிகள் பேணிக் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் 7 மடங்கு அதை உயர்த்தி 803.8 கோடி ரூபாய் என உயர்த்தி, அரிய சாதனையை ஈட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலவே, 2006–2007 ஆம் ஆண்டு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மட்டும், சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளுடைய மேம்பாட்டிற்காக இதுகாறும் எந்தக் காலத்திலும் ஒதுக்காத உயர் அளவான தொகையாக, சாதனைத் தொகையாக 3,529.9 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கி இந்த அடிப்படை வசதிகளுக்கு அளப்பரிய சாதனையை, சலுகைகளைச் செய்திருக்கிறார்கள். 2001–2006 ஆம் ஆண்டுகளில் 6,398.56 கோடி ரூபாய் செலவிலே 52,676 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைக் கட்டமைப்புகளைப் புதுப்பித்து, அகலப்படுத்தி, வலுப்படுத்தி, 993 புதிய பாலங்களைக் கட்டும் பணியையும் மேற்கொண்ட பெருமை, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புறங்களை மட்டும் அம்மா கண்காணிக்கவில்லை; நகர்ப்புற மேம்பாட்டிற்கும் கவனம் செலுத்தியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், 900 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் நகர்ப்புற, உள்ளாட்சி அமைப்புகளின் சாலைக் கட்டமைப்புகளை மேம்படுத்த அம்மா அவர்கள் நிதியினை ஒதுக்கியிருக்கின்றார்கள். சென்னை மாநகரம், வரலாறு காணாத அளவிற்குப் பொலிவைப் பெறுகின்ற அளவுக்கு 18 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தை உருவாக்கி சாதனை புரிந்திருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அந்த அடிப்படையில் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள சாலைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு 1,328 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னை மாநகர புறநகர்ப் பகுதிகளுக்கு மட்டும் ஒதுக்கி, அளப்பரிய

சாதனையை இந்த மாநிலத்தின் தலைநகரை மேம்படுத்த அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள். இதுபோன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட தலைசிறந்த அணுகுமுறைதான் இந்தச் சாதனைகளுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன.

2001–2006 ஆம் ஆண்டுகளில் சாதனை எண்ணிக்கையாக 1,274 புதிய ஆரம்பப் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு கல்வித் துறையிலே ஒரு மாபெரும் புரட்சியை உருவாக்கி இருக்கின்ற பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) 1,274 புதிய ஆரம்பப் பள்ளிகள். 2,790 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. 394 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக உயர்வு பெற்றன. 406 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக இன்று மலர்ந்திருக்கின்றன. இப்படிப்பட்ட அளப்பரிய சாதனையை இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத சாதனையை செய்த பெருமை, கல்விக்கு இத்துணை முக்கியத்துவம் தந்த பெருமை, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். அதோடு அல்ல, பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக மட்டுமே 710 கோடி ரூபாயை எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள்.

இலவச பாடப் புத்தகத் திட்டம், இலவச மிதி வண்டிகள் திட்டம், ஏழைக் குழந்தைகளுக்கு நலன் தரும் திட்டம், வறிய நிலையில் இருக்கும் மக்களை வாழ்விக்கும் திட்டம், அகில இந்தியா மட்டுமல்ல, அகில உலகமே பாராட்டுகின்ற உன்னதத் திட்டத்தை, பாமர மக்களுக்காக நடைமுறைப்படுத்தி, பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டிருப்பவர், தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் பல்வேறு சாதனைகளைக் கல்வித் துறைக்குச் செய்திருக்கின்ற தாய், எந்த அளவிற்கு நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள் என்றால், 4,811.81 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார், சதவிகிதத்தில் பார்த்தால் அதிகமாக அவர்கள் கூறியது தோன்றியது. ஆனால் நிதி ஒதுக்கீட்டில் நிதி எந்த அளவுக்கு



அதிகமாக ஒதுக்கப்பட்டது என்றால், தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, நடப்பாண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் கல்விக்காக 4,811.81 கோடி ரூபாயை ஒதுக்கி ஒரு வரலாற்றுச் சாதனையை நடைமுறைப்படுத்தியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 12–50

குடும்ப நலனுக்காக, மக்கள் நல்வாழ்வு– –சுகாதாரத் – –துறைக்கு 2001–2002 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 1,135.98 கோடி ரூபாய் என்றுதான் இருந்தது. ஆனால் நடப்பாண்டுக்கு, 2006–2007–க்கு 1,729.56 கோடியாக மருத்துவத் துறைக்கு நிதியினை அதிகமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள்.

அதைப்போல, ரேஷன் கார்டைப் பொறுத்தவரைக்கும், இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, அரிசி வேண்டும் என்று கேட்கின்ற ஏழைகள் யாராக இருந்தாலும் அவ்வளவு பேருக்கும் அரிசி என்று தயாள சிந்தையோடு இந்தத் திட்டத்தைத் தரணியில் தவழவிட்டிருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அந்த அடிப்படையில் 188 கோடி குடும்பங்கள் தற்போது குடும்ப அட்டைகளைப் பெற்றிருக்கின்றன. 1,500 கோடி ரூபாயாக இதற்கு உணவு மானியத்திற்கான நிதியொதுக்கம் தற்போது செய்யப்பட்டிருக்கிறது. இப்படி 1,500 கோடி ரூபாய் நிதியொதுக்கம் மானியம் என்று இருந்தபோதிலும்கூட, 1,88,000 பேர் பயனாளிகளாக இருக்கின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களும் கண்டு ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு, 3.50 ரூபாயே கிலோ அரிசி என்று, ஏழைகளைக் காக்கின்ற தாயாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று செயல்பட்டு வருகிறார்கள். ஏழைகளின் நலன் காக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தும், நாடே போற்றும் திட்டம் இந்தக் கிலோ அரிசி 3.50 ரூபாய் எனும் உன்னதத் திட்டமாகும்.

அதைப்போலவே, கருவுற்ற தாய்மார்கள், சிசுக்கள், குழந்தைகள், முதியோர் ஆகியோருக்கு, பிற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு, அந்த ஏழைக் குடும்பங்களுக்கு எல்லா விதத்திலும் அவர்களுக்கு உதவியைச் செய்ய வேண்டும் என்று, பிறந்த குழந்தையிலிருந்து முதியோர் வரை ஒவ்வொருவரும் ஏழைக் குடும்பத்தில் பலன் பெற வேண்டும் என்று எண்ணுகிற தாய், கருவுற்ற தாய்மார்கள், சிசுக்கள், குழந்தைகள், முதியோர் அனைவருக்கும் உதவுகின்ற முறையில், தற்போது தரமான சத்துணவுப்

பாதுகாப்பு ஏழைகளுக்குத் தருகின்ற நோக்கோடு 865.85 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். 1.64 கோடி சேலைகளும், 1.64 கோடி வேட்டிகளும் ஏழைகளுக்கு இலவசமாகத் தந்து Social Safety Net என்று சொல்லக்கூடிய, ஏழைகளுக்கு சமுதாயப் பாதுகாப்பு வளையத்தை, இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத அளவிற்கு ஏழைகளுக்காகச் செய்திருக்கின்றவர் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இன்னொரு முக்கியமான ஒன்று. 2006-2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்பு வளையத்திற்காக – சமூகப் பாதுகாப்பு வளையம் என்பது, அது சத்துணவாக இருக்கலாம், வறியோரில் வறியோருக்கு உதவுகிற உதவியாக இருக்கலாம், ஏழ்மை நிலையில் இருக்கின்ற யாராகவும் இருக்கலாம். ஏழைகளின் பலதரப்பட்ட மேம்பாட்டிற்காக அகில இந்தியாவே பாராட்டும்வண்ணம் அம்மா ஒதுக்கியிருக்கின்ற தொகை எவ்வளவு தெரியுமா? 8,117.51 கோடி ரூபாயை ஒதுக்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் நலன் காக்கும் பணிகளில் அகில இந்திய சாதனை புரிந்த ஏழைகளின் பங்காளி, புரட்சித் தலைவி அம்மா என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்கள். ஒதுக்கியிருக்கின்ற தொகையோ 8,117.51 கோடி ரூபாய்.

மாநில அரசு ஊழியர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தோடு 50 சதவீத அகவிலைப்படியை இணைத்து வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இது ஒரு சாதாரண முடிவு அல்ல. நிதி நெருக்கடி உருவாக்கப்பட்டு, சீரழிந்த நிதிநிலையில் தமிழகம் திவாலா என்ற நிலையிலிருந்த தமிழகத்தைக் காக்கின்ற பொறுப்பு, புரட்சித் தலைவி அம்மாவிடம் இருந்தது. மைய அரசு தாக்கீது அனுப்பின, நிதி நிறுவனங்கள் தாக்கீது அனுப்பின. அண்டை மாநிலங்களில் எல்லாம் 12 இலட்சம் பேர், 10 இலட்சம் பேர் என்று அரசு ஊழியர்கள் இல்லை. 5 இலட்சம் பேர், 6 இலட்சம் பேர் என்று அரசு ஊழியர்கள் அண்டை மாநிலங்களில் இருக்கிறபோது, தமிழகத்திலே 12 இலட்சத்திற்குமேல் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற தாக்கீதை மாநில அரசுக்குச் சொன்னதே மைய அரசும் நிதி நிறுவனங்களும். மாண்புமிகு அவை நன்றாக அறியும். அப்படிப்பட்ட நிலையில் கட்டாயமாக அரசு ஊழியர்களுடைய சில சலுகைகளைத் தள்ளிப் போடவேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது மைய அரசு, உருவாக்கியது மைய அரசால் தூண்டப்பட்ட நிதி நிறுவனங்கள். நிதி



நெருக்கடியைத் தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மாவின் அரசுக்குத் தர வேண்டும் என்ற ஒரு சதிவலை பின்னப்பட்ட காரணத்தால், 2001-2002 ஆம் ஆண்டுகளில் இப்படிப்பட்ட நிதிச் சோதனைகளை மாநில அரசுக்குத் தந்தது.

எந்தக் காலத்திலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஊழியர்களுடைய சலுகைகளை நிறுத்துவேன், இல்லை என்று சொல்வேன் என்று சொன்னதே கிடையாது. அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை தன் வயிற்றுப் பிள்ளைகளாக, தாய்ப் பாசத்தோடு பார்க்கின்ற தாய், நிதிநிலை சீரானவுடன் அரசு ஊழியர்களுக்கு அள்ளித் தருவேன் என்று சொன்னார். நிதிநிலையைச் சீராக்கினார். ஒரு நாளுக்கு 18 மணி நேரம், 20 மணி நேரம் சதா சிந்தித்து நாட்டு மக்கள்தான் தன் வயிற்றுப் பிள்ளை என்று பாடுபடுகின்ற தாய் உழைத்த காரணத்தால் நிதிநிலை சீரடைந்தது; செம்மையடைந்தது; உயர்வு நிலை பெற்றது; அதிக நிதி கிடைத்தது. நிதி கிடைத்த காரணத்தால் அம்மா தற்போது முடிவு செய்தார். வாக்குறுதி சொன்னேன் அரசு ஊழியர்களைக் காப்பேன் என்று. வாக்குறுதியை நடைமுறைப்படுத்துகிறேன். தென் மாநிலங்களில் கேரளாவிலோ, கர்நாடகத்திலோ, ஆந்திராவிலோ, பாண்டியிலோ எங்குமே அந்த 50 சதவிகித Dearness Allowance-ஐ சம்பளத்தோடு சேர்க்கவில்லை என்றாலும், என்றாலும்கூட, தென் மாநிலங்களில் யாருமே செய்யவில்லை என்றாலும், எனது பிள்ளைகள், அரசு ஊழியர்களுக்கு இதோ நான் தருகிறேன் என்று சொல்லி, இப்படி இந்த 1,200 கோடி ரூபாய் சலுகையை அரசு ஊழியர்களுக்கு அளித்ததற்காக நாடே அம்மாவைப் பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஊழியர்கள் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள். தூண்டிவிடப்பட்ட அரசு ஊழியர்கள்கூட அம்மாவை நெஞ்சார, மனமாரப் பாராட்டுகிற காட்சியை இன்று தமிழகம் கண்டு கொண்டிருக்கிறது. இதனால் 1,200 கோடி ரூபாய் செலவாகும். இதிலே இவ்வாண்டு மார்ச் மாதத்திற்கான ஊதியம் ஏப்ரல் மாதத்தில் வழங்கப்படுவதால் தற்போதைய நிதியாண்டில் எஞ்சியுள்ள ஜனவரி & பிப்ரவரி ஆகிய இரு மாதங்களுக்கான கூடுதல் செலவாக 200 கோடி ரூபாய் தேவைப்படும். இந்த எஞ்சிய காலம் 2 மாதங்களுக்கும், அடுத்த நிதியாண்டிற்கும் தேவைப்படுகிற கூடுதல் ஒதுக்கீடுகள் அந்தந்தத் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் அவைக்கு ஏற்கெனவே தரப்பட்டிருக்கின்றன. உள்ள சம்பள மற்றும் அகவிலைப்படிக்கான கணக்குத் தலைப்புகளின்கீழ், முறையே 2005-2006 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளிலும், 2006-2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 25

பரவு–செலவுத் திட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்குள்ள நிதியாதாரமும் நிதித் திட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 12–55*

அதைப்போலவே மானியக் கோரிக்கை எண் 49 அவைக்குத் தரப்பட்டிருக்கிறது. ஓய்வூதியதாரர்களுக்கான கூடுதல் ஒதுக்கீடு, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்களுக்கான மானியக் கோரிக்கைகளில் அது சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, 5 ஆம் ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய பணப் பயன்களை வழங்குவதாக உறுதி அளித்துவிட்டு அதற்கான நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் அப்போது தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 5 ஆண்டுகளுக்குப் பின்னர் வழங்குவதாகக் கூறினார்கள். அரசு ஊழியர்களுக்குச் சலுகைகளை அறிவித்தார்கள். கையிலே பணம் இல்லை. சட்டியிலே உணவு இல்லை. அந்த நிலையிலே அறிவித்தார்கள். 5 ஆண்டு கழித்துத் தருவோம் என்று சொல்லிவிட்டார்கள். அரசு ஊழியர்களை வஞ்சித்தார்கள், ஏமாற்றினார்கள். ஆனால் அம்மா அவர்கள், இன்று 1,200 கோடி ரூபாய் சலுகையை அறிவித்திருக்கிறார்கள். அதற்கான நிதியை இந்த நிதியாண்டிலேயே ஒதுக்கிவிட்டு அதற்கு உறுதி செய்துவிட்ட பெருமை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பணப் பயன்கள் அனைத்து ஊழியர்களுக்கும் உடனடியாக தற்போதே வழங்கப்படுமாறு ஏற்பாடு செய்து சாதனை புரிந்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் பேசும்போது சிலவற்றைக் கூறினார்கள். Plan achievement– திட்ட ஒதுக்கீட்டை பொறுத்தவரைக்கும் சாதனைகளைப் பொறுத்தவரைக்கும் 2001–2006– நாங்கள் அளப்பரிய சாதனைகளைப் பெற்றிருக்கிறோம். 1996–2( வாக்கிலே தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அந்தத் திட்டச் சாதனை ரூ. 23,443.08 கோடிதான். ஆனால் தொடர் வறட்சி, சுனாமி பாதி அளப்பரிய வெள்ள பாதிப்பு, மைய அரசினுடைய நிதி தருகி ஒத்துழைப்பு இல்லாமை, கடன் நிறுவனங்களின் தொல்லை இப்படிப்ப சிரழிவுகள் இருந்தபோதிலும் நிர்வாகத் திறமை, நிர்வாகச் செய நிர்வாகத் தூய்மையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவ மக்கள் நலன் கருதி மேற்கொண்ட காரணத்தால், 2001–2006 என்ற



2006 ஜனவரி 25] [திரு. சி. பொன்னையன்]

5 ஆண்டுக் காலத்தில் எங்களது Plan achievement என்ன தெரியுமா? ரூ. 35,634.10 கோடி (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உயர்வு நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் அடைந்திருக்கிறார்கள்.

அதைப்போலவே, தற்போது Gross State Domestic Product என்று சொல்லக்கூடிய மாநில மொத்த வருவாயிலிருந்து Fiscal Deficit என்று சொல்லக்கூடிய நிதிப் பற்றாக்குறை 3 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும் என்று Twelfth Finance Commission கூறுகிறது. மைய அரசும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. மைய அரசே இந்த நிலையை இன்னும் அடையவில்லை. மைய அரசே 4 சதவிகிதம் என்ற நிலையிலே இருக்கிறார்கள். தத்தளிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் தத்தளித்த தமிழகத்தை தலைநிமிர்த்தி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தற்போது GSDP–ல் 3 சதவிகிதத்திற்குக் குறைவாக இருக்க வேண்டும் என்று, 12–வது நிதிக் குழு சொல்வதை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னாலேயே எய்தி, தற்போது 2006–2007–ல் 2.35 சதவிகிதமாகக் குறைத்து அகில இந்திய சாதனையைப் படைத்திருக்கிற பெருமை மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) By retiring high cost loans—அதிகப்படியான வட்டிக்கு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட கடன்களைத் திருப்பிக்கட்டி—proper debt management. இந்த, வாங்குகின்ற கடனை நல்ல பணிகளுக்கு, நல்லமுறையிலே வீண் செலவுகளைக் குறைத்து, செலவிட்டு நிரம்ப தீர்க்கதரிசனத்தோடு நிதி நிர்வாகத்தை, மாண்புமிகு அம்மா அவர்கள் கையாண்ட காரணத்தால், தற்போது 207.27 கோடி ரூபாய் அதாவது total revenue receipt–லே 0.6 சதவிகிதம் என்ற அளவிற்கு revenue receipt–ஐ குறைத்த பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும்.

*பிற்பகல் 1–00*

அதைப்போலத்தான், மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆட்சிக் காலத்தில் உழவர்களின் நலனில், கிராம விவசாயத் தொழிலாளிகளின் நலனில் அம்மா அரசு daily wage to farm labourers—விவசாயக் கூலிகளினுடைய, கூலித் தொகையை 54 ரூபாயிலிருந்து, 80 ரூபாய்க்குக் கொண்டுவந்து நடைமுறையில் அதை நடைமுறைக்குக் கொண்டுவந்த பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். அதேபோல, பால் வளத் துறையிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எந்தக் காலத்திலும் இல்லாத ஒரு சாதனையை அடைந்திருக்கிறது. தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத

அளவிற்குப் பால் உற்பத்தி செய்கின்ற உழவர்களுக்கு அதிகப்படியான பணத்தைத் தருகின்ற அரசு, தமிழ்நாடு அரசு என்ற பெருமையைத் தமிழகம் இப்பொழுது பெற்றிருக்கின்றது. அதைப்போலவே, Aavin Sales Price, வாங்குகிற பாலை, நுகர்வோர்க்கு விற்பதிலும், இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் பாலை நுகர்வோர்க்குத் தருகின்ற அரசும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெருமையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெற்றிருக்கிறது.

கூட்டுறவுத் துறை மூலமாக உழவர்களுக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்னும் சில அளப்பரிய சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். 12 சதவிகிதம் என்று இருந்த, கூட்டுறவுக் கடனுடைய வட்டியை 9 சதவிகிதமாக, இந்தியாவிலேயே முதன்முறையாகக் குறைத்த பெருமை, உழவர்களின் நலனில் அக்கறையுள்ள, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை அவைக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே, 2,598 கோடி ரூபாய் கூட்டுறவுப் பயிர்க் கடன். அதை ஈராண்டுக் காலம் கட்டாமல், அதற்குப் பிறகு, மூன்று ஆண்டுக் காலம் சம தவணையில் கட்டலாம் என்ற ஆணையை இந்தியாவிலேயே முதன்முறையாக உழவர்களுக்குத் தந்த அரசும் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒட்டுமொத்தமாக கடந்தகால ஆட்சி செய்யாத அளவிற்கு உழவர்கள் பட்ட கூட்டுறவுக் கடன், ஒரு கோடி, இரண்டு கோடியல்ல, 1,079 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் சம்பந்தப்பட்ட வட்டியைத் தள்ளுபடி செய்து உழவர்கள் வயிற்றிலே பாலை வார்த்திருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். கிராமப்புற மக்களுக்குக் குடிநீர் வசதியை அதிகம் செய்துதர வேண்டுமென்று நிதித் தட்டுப்பாடு இருந்தபோதிலும் நிதியாதாரத்தைப் பெருக்கவேண்டும்; கிராமப்புற மக்களைக் காக்கவேண்டும்; குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதிலே மிகவும் அக்கறையாக இருந்த புரட்சித் தலைவி அம்மா, 318 combined water supply schemes கொண்டுவந்தார்கள். 2001–2006–லே, 1.5 கோடி மக்கள் பலன் அடையக்கூடிய அளவிற்கு, 18,951 கிராமங்கள் பலன் அடையக்கூடிய அளவிற்கு, 150 நகரங்கள் பலன் அடையக்கூடிய அளவிற்கு, ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல, 2,423 கோடி ரூபாய் ஒதுக்கி, குடிநீர்ப் பிரச்சினையை எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு தீர்க்க நடவடிக்கை எடுத்த பெருமை (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.



அதைப்போலவே, 22,069 கிராமக் குடியிருப்புகளுக்குப் பாதுகாப்பான தண்ணீரைத் தரவேண்டும். அதுவும், power pump மூலம் தரவேண்டும் என்று, 993 கோடி ரூபாயும், இந்தியாவில் எந்த மாநிலத்திலும், எந்த முதலமைச்சருக்கும் தோன்றாத சிந்தனையாக, தாய்மார்களுக்கு, அவர்களுக்குச் சலுகை தரவேண்டும், வசதி தரவேண்டும் என்ற முறையிலே செய்யப்பட்டு, 39,796 கை பம்புகளை, mini power pump–களாக்க 239 கோடி ரூபாயும் ஒதுக்கி, இப்படி குடிநீர்ப் பிரச்சினைக்கு பரிகாரம் தந்த தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1–05

சென்னையிலே இதைப்போல அளப்பரிய சாதனை. வீராணம் திட்டம், ஈடேறுமா, ஈடேறாது என்று கூறியவர்கள் உண்டு. கனவு என்று சொன்னவர்களெல்லாம் உண்டு. ஆனால் சொன்னதைச் செய்கின்ற தாய், செய்ய முடிவதை மட்டுமே சொல்கின்ற தாய், சொல்லிவிட்டால் எப்படியும் முடிப்போம் என்ற முறையிலே செயல்படுகின்ற தாய். வீராணம் திட்டத்தை அளப்பரிய ஒரு சாதனையாக, தொழில்நுட்ப சாதனையாக அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, ஒரு novel and historic step என்ற முறையிலே அந்தத் திட்டத்தை பிப்ரவரி 2003–ல் ஆரம்பித்து, அக்டோபர் 2004–ல் மிகக் குறுகிய காலத்தில், அந்தத் திட்டத்தை ஈடேற்றி, சென்னை நகரைவிட்டு மக்களெல்லாம் வெளியூருக்குக் குடியேற வேண்டுமென்ற அவல நிலையில் இருந்த மக்களுக்கு வாழ்வைத் தந்து, குடிநீர்ப் பிரச்சினையை சென்னையிலே தீர்த்து, சென்னை மாநகரத்திலே இருக்கிற 14 சட்டமன்றத் தொகுதிகளிலே இருக்கின்ற மக்களும் இனிமேல் புரட்சித் தலைவி பக்கம்தான் நாங்கள் என்று சொல்லக்கூடிய அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) வீராணம் திட்டத்தையும், தற்போது desalination plant, கடல் நீரை நல்ல நீராக ஆக்குகின்ற திட்டத்தையும் இந்த நகர மக்களுக்குத் தந்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும்.

அதைப்போலவே, இந்தியாவிலேயே உலகத்திலுள்ள தொழிலதிபர்கள் எல்லாம் தமிழகத்தை நோக்கி தானாகவே தேடி வருகின்ற அளவிற்கு, முதலீடு செய்ய வருகின்ற அளவிற்கு ஒரு உன்னத புரட்சியை, தமிழ்நாட்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் அதை மின் துறைமூலம் உருவாக்கியிருக்கிறார்கள். uninterrupted power supply, தங்குதடையற்ற மின்சாரம் எங்கிருக்கிறதோ அங்குதான் தொழில் முதலீடுகள் வந்து

குவியும் என்பது பொருளாதாரத் தத்துவம். அதைக் கருத்தில்கொண்டு, தமிழகத்திலே அளவுகடந்த மின்சாரத்தைக் கொண்டு வர வேண்டும். 1996–லிருந்து 2001 வரை 560.69 மெகாவாட் மட்டுமே கூடுதல் உற்பத்தி என்ற நிலையிருந்தது. அது போதாது என்று அம்மா சொன்னார். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார். அந்த அடிப்படையில் 1,897 மெகாவாட் அதிகப்படியான மின் உற்பத்தியை மேற்கொண்ட காரணத்தால், நவீன தொழில்நுட்பங்களை மின் துறையிலே தவழவிட்ட காரணத்தால், இந்தியாவிலே uninterrupted and reliable power supply உள்ள ஒரே மாநிலம் தமிழகம் என்று கருதி இங்கு தொழில் முதலீடுகள் வந்து குவிவதற்குக் காரணம் வகுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதைப்போலவே, தமிழ்நாட்டினுடைய தகவல் தொழில்நுட்பங்களைப் பொறுத்தவரைக்கும் அம்மா அவர்கள் பிரத்தியேக கவனம் செலுத்துகிற காரணத்தினால், Tamil Nadu has been judged as the best State in India in terms of ease of doing business—By the Business Standard. Business Standard அதை வெளியிட்டிருக்கிறது. Tamil Nadu has been judged as the "Asian region of the future" by the international magazine fDi in Hong Kong. இப்படி ஆய்வு அறிக்கைகள் எல்லாம். தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு தன்னிகரற்ற மாநிலமாக முதலீட்டுத் துறையிலே இருக்கிறது என்ற பெருமை, தமிழகத்தில் தொலைநோக்குச் சிந்தனையோடு ஆக்கத் திட்டங்களைப் புரட்சித் தலைவி தந்த காரணத்தினால், தற்போது உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலத்தான், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். கிராமத்திலே இருக்கின்ற விவசாயிகள் செய்கின்ற விளைபொருட்களை—Value added products-மேம்படுத்தப்பட்ட மதிப்புக் கூட்டுப் பொருளாக உருவாக்குவதன் மூலமாக, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்; விவசாயத்தையொட்டிய தொழில்கள் உருவாகும்; படித்தவர்களுக்கு வேலைகள் கிடைக்கும் என்ற உன்னத திட்டத்தை, இந்தியாவிலேயே முதன்முறையாக, 'கிராமத்திலே வளர்தொழில்கள்' என்ற திட்டத்தைக் கொண்டுவந்த பெருமை, தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். அந்த அடிப்படையில் தற்போது 1,272 தொழில் திட்டங்கள், 803 கோடி ரூபாய் செலவிலே தற்போது அனுமதி அளிக்கப்பட்டு, கிட்டத்தட்ட அதிலே ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்பு பெறக்கூடிய ஒரு உன்னத கிராமப் பொருளாதாரப் புரட்சியை உருவாக்கியிருக்கின்ற பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.



அதைப்போலத்தான் 'நமது கிராமத்' திட்டம். 'நமது கிராமத்' திட்டம், மக்களெல்லாம் பாராட்டுகிற திட்டத்திற்கு அம்மா தற்போது 2006–2007–லே 175 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போலவே, 13 ஆயிரத்து 62 Integrated Women Sanitary Complexes, மகளிர் சுகாதார வளாகங்கள், பெண்கள் நலனில் அக்கறை உள்ள, தாய்க் குலத்தின் நலனில் அக்கறை உள்ள தாய், இந்தியாவிற்கே வழிகாட்டியாக 13,062 தண்ணீர் வசதியுடைய Integrated Women Sanitary Complexes உருவாக்கி 278 கோடி ரூபாய் செலவிலே இதை உருவாக்கி இன்று அகில இந்தியா மட்டுமல்ல, பிற நாடுகள்கூட பாராட்டக்கூடிய அளவிற்கு மகளிர் சுகாதார வளாகங்களை உருவாக்கியதில் மாபெரும் சாதனை புரிந்திருக்கிறது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதனைக் கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

*பிற்பகல் 1–10*

அதைப்போல, பெண்களுக்கு Girl child protection scheme என்ற ஒரு திட்டத்திலே 85 ஆயிரம் பெண் குழந்தைகளுக்குப் பலன் கிட்டுவதற்காக 125 கோடி ரூபாய் ஒதுக்கி, ஏழைக் குழந்தைகளினுடைய வாழ்வுக்கு மலர்ச்சியை உருவாக்கி இருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

புது வாழ்வுத் திட்டம் என்ற ஓர் உன்னதத் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமத்தில் இருக்கின்ற, பொதுவாகப் பெண்களுக்கு—they should be provided with empowerment என்ற முறையில் பெண்களுக்கு—பண அதிகாரம், மற்ற வாழ்விலே அதிகாரம் வேண்டும்; அதோடு வறுமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக 717 கோடி ரூபாய் ஒதுக்கி புது வாழ்வுத் திட்டத்தை எல்லோரும் பாராட்டும் வண்ணம் கொண்டுவந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்றாலே அவை புரட்சித் தலைவி அம்மாவினுடைய மறுபிறவி என்று கூறக்கூடிய அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்தியாவே வந்து, பிற மாநிலங்கள் வந்து தமிழகத்தைக் காணுகிற காட்சியைப் பார்க்கிறோம். 1991–லே அம்மாவின் இதயத்தில் உதித்த உன்னதமான திட்டம் இது. ஒரு குடும்பத்திலே பெண்களுக்குப் பண அதிகாரம் வருகிறபோது, அந்தக் குழந்தைகள் பேணப்படுவார்கள்; அந்தக் கணவன் பேணப்படுவார்; பெரியவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்; வீட்டிலே பொருளாதாரம் செம்மையாகிறபோது, அந்த ஊரிலே, நாட்டிலே பொருளாதாரம் செம்மையடையும் என்ற நல்ல நோக்கத்தோடு தொலைநோக்குத் திட்டமாக ஒரு பொருளாதார உன்னத திட்டமாக

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த உன்னத திட்டம்தான் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம். இந்தத் திட்டத்திலே இன்று 50 இலட்சம் பேர் பயனாளிகளாக இருக்கிறார்கள். 3 இலட்சம் Self help groups இருக்கின்றன. இதிலே 900 கோடி ரூபாய் savings-சேமிப்பாக இன்று இருக்கிறது. இவர்களுக்கு 1,563 கோடி ரூபாய் கடன் வழங்கக்கூடிய வகையில் செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற மகளிர் சுய உதவிக் குழுக்கள் எல்லாம் அரசியலுக்கு அப்பால் நின்று பெண்குலத்தைக் காக்க வந்த தாய், புரட்சித் தலைவி அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் என்றென்றும் அம்மாவின் பக்கம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தின்மூலம் மகளிருக்கு, தாய்க்குலத்திற்கு, ஏழைகளுக்குப் பல நல்லவற்றைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதேபோலத்தான் உழவர் பாதுகாப்புத் திட்டம். தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டமே என்று சொன்னார்கள். தி.மு.க. ஆட்சியில் ஒரே நேரத்தில் 100 ரூபாய் சந்தா கட்ட வேண்டுமென்று சொன்னீர்கள். ஏழைக் குடியானவன், ஏழை விவசாயத் தொழிலாளி எங்கே போவான் 100 ரூபாய்க்கு? உங்கள் திட்டம் தோற்றுவிட்டது. அதுமட்டுமல்ல; உங்கள் திட்டம் குறுகிய திட்டமாக இருந்தது. ஆனால் அம்மா அவர்கள் உண்மையிலேயே பலன் அளிக்கக்கூடிய, செயலாக்கக்கூடிய ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். உங்கள் திட்டத்தை நீங்கள் ஏட்டளவிலே கொண்டுவந்தீர்கள். நடைமுறைப்படுத்தாத திட்டமாகக் கொண்டுவந்தீர்கள். உங்கள் திட்டம் ஏட்டளவுத் திட்டம் என்பதால்தான் இதுகாறும் எடுபடாமலேயே இருந்துவிட்டது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டத்தை அறிவிக்கின்றபோது உடனடியாக உழவர்களுக்கும், விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் பலன் கிட்டுமா, கிட்டக்கூடிய திட்டத்தைத்தான் அறிவிக்க வேண்டுமென்று, தானே சிந்தித்தார், தானே அதிகாரிகளுடன் கலந்தார், தானே கொள்கை முடிவெடுத்தார், இப்படி, இப்படி இதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற ஆணையை, தானே இட்டார். அதனுடைய விளைவு, இன்று ஒரு சாதாரண விவசாயத் தொழிலாளியாக இருந்தாலும், 51 இலட்சம் சிறுகுறு விவசாயிகள், 86 இலட்சம் விவசாயத் தொழிலாளிகள் வயிற்றிலே பாலை வார்த்திருக்கிறார்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கொண்டுவந்த புனித திட்டம் சத்துணவுத் திட்டம். கிராமத்து மக்கள், நகர்ப்புற மக்கள்,



ஏழைகள் எல்லாம் நாங்கள் எல்லாம் இரட்டை இலை பின்னால் என்று சொல்லக்கூடிய உன்னத திட்டம். அந்தத் திட்டத்தை அவர் கொண்டு வந்தார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியிலே அவருடைய அரசியல் வாரிசாக இருக்கின்ற அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத் திட்டத்தைவிட, தலைசிறந்த திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத் திட்டத்தைவிட மிக உன்னதத் திட்டம் என்று மக்கள் கூறக்கூடிய அளவுக்கு (குறுக்கீடு) புரட்சித் தலைவர் அவர்களை ஆசானாக ஏற்றுக்கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டம், இந்த உழவர் பாதுகாப்புத் திட்டம். சத்துணவுத் திட்டத்தையும் விஞ்சிய திட்டம் என்று பட்டிதொட்டி மக்கள் எல்லாம் நெஞ்சார, வாயார பாராட்டுகிற திட்டமாக (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்தியாவே கண்டு ஆச்சரியப்படுகிற திட்டமாக, இந்த உன்னதத் திட்டத்தை, இந்தப் புரட்சித் திட்டத்தை புரட்சித் தலைவி கொண்டுவந்திருக்கிறார். இதனால் கிராமப்புறத்தில் உள்ள உழவர்கள் எல்லாம் அளப்பரிய பலனைப் பெறுகிறார்கள். ஒரு வீட்டிலே ஒரு திருமணம் என்றால் 2,500 ரூபாய். (குறுக்கீடு) ஒட்டுமொத்தம் குடும்பத்திற்கு 8,000 ரூபாய் தருகிறார். அதைப்போலவே ஒரு இலட்சம் ரூபாய், உயிரிழப்பு என்றால், இயற்கை உயிரிழப்பு என்றால், 10 ஆயிரம் ரூபாய். ஈமச் சடங்கு என்றால், 2,500 ரூபாய். கருவுற்ற தாய்க்குப் பிரசவம் என்றால், பணம்; கருக்கலைப்பு என்றால் பணம்; படிப்புக்குப் பணம்; ஓய்வூதியப் பணம்; இப்படி ஒவ்வொரு குடும்பமும் கையிலே பணத்தைக் காணக்கூடிய அளவிற்கு ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு குக்கிராமத்திலும் அம்மா அறிவித்த இந்தத் திட்டம், எப்படிச் சத்துணவுத் திட்டத்தினுடைய பலனை ஏழைக் குழந்தைகள் அன்றாடம் அனுபவிக்கிறார்களோ, அதுபோல, அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற உழவர் பாதுகாப்புத் திட்டத்தை, விவசாயியும், விவசாயத் தொழிலாளி என்ற 70 சதவீத தமிழகத்து மக்களும் அனுபவித்து வருகின்ற, கண்ணாலேயே அவர்கள் பார்த்து கைகூடப் பெற்றுவருகிற இந்த அளப்பரிய திட்டத்தால், இன்று 70 சதவீத தமிழ்நாட்டு மக்கள், எங்களுடைய தாய், எங்களுடைய தலைவி, என்றென்றும் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மாதான் என்று மக்களே, மாற்றுக் கட்சிக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள்கூட, அம்மாவே எம் தலைவி இனிமேல் என்று சொல்லக்கூடிய மாற்றத்தை உருவாக்கி இருக்கிற திட்டம்தான் உழவர் பாதுகாப்புத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உன்னத திட்டம். இப்படிப் பல்வேறு அளப்பரிய சாதனைகளைச் செய்திருக்கின்றவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 25

பிற்பகல் 1-15

அடுத்து, திட்டத்தில் சொன்னீர்கள், சில திட்டங்களில் குறைவு, சில திட்டங்களில் இல்லை என்று சொன்னீர்கள். அப்படிக் கணக்கெடுக்கக் கூடாது. ஒட்டுமொத்தமாக எத்தகைய திட்டங்களில் அதிக முதலீடு செய்தால், ஒட்டுமொத்தப் பொருளாதாரம்—Gross State Domestic Products—will get augmented; அதைத்தான் கணக்கில் எடுக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் எந்தக் காலத்திலேயுமே இல்லாத அளவிற்கு இந்த 2006–2007 ஆம் ஆண்டு மட்டும் Highways–க்கு 3,529.9 கோடி ரூபாயை அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். Rural Development and Panchayat Raj-க்கு 3,246.60 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல, நகர்ப்புற நிர்வாகத்திற்கும், தண்ணீருக்கு மட்டுமே 1,542.18 கோடி ரூபாயைத் தந்திருக்கிறார்கள். மின் துறைக்கு 1,772.25 கோடி ரூபாய், நீர்ப் பாசனத்திற்கு 1,084.64 கோடி ரூபாய். இதோடு நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், ஏழை எளிய மக்களினுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, Social Safety Net என்ற முறையிலே, சமூகத்தில் பின்தங்கியிருக்கின்ற, தத்தளித்துக் கொண்டிருக்கிற மக்களுக்கு வாழ்வாதாரம் தர, எந்த மாநிலமுமே தராத அளவிற்கு, 8,117.51 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அவர்கள் Social Safety Net என்ற முறையிலே ஒதுக்கியிருக்கிறார்கள்.

Whole Life Cycle Approach - Whole Life Cycle Approach to Supplementary Nutrition என்ற ஒரு உன்னத திட்டத்தைக் கொண்டுவந்த பெருமை, இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

ஒரு பள்ளிக்கூடத்திற்குச் செல்வதற்கு முன்னால் அந்தக் குழந்தைக்கு உதவி, கருவிலே இருக்கின்றபோதே அந்தக் குழந்தைக்கு உதவி, adolescent girls என்று வயது வந்த நிலையிலேயே அவர்களுக்கு உதவி. கருவுற்ற தாய்மார்களுக்கு உதவி. வயதாகிவிட்டால் Old Age Pension என்று உதவி. எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார் தெரியுமா? 865.85 கோடி ரூபாய் இந்தச் சமூகப் பாதுகாப்புக்காக ஒதுக்கியிருக்கிறார். கல்விக்கென ரூ. 4,811.81 கோடி. மேல் படிப்புக்காக ரூ. 825.94 கோடி. மருத்துவத் துறைக்காக மட்டும் ரூ. 1,731.56 கோடி. அதேபோல, சத்துணவுக்கு ரூ. 757.74 கோடி. இப்படி அதிகப்படியான நிதியை, சமூகப் பாதுகாப்பு வளையத்தைப் பேணிக் காக்க, வளர்ச்சித் திட்டங்களை ஈடேற்ற, நாட்டின் எதிர்காலம் முக்கியம் என்ற நோக்கோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருப்பதை இந்த மாண்புமிகு அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



2006 ஜனவரி 25] [திரு. சி. பொன்னையன்]

மாண்புமிகு உறுப்பினர்கள் சிவபுண்ணியம் மற்றும் ஜி.கே. மணி ஆகியோர் அரசினுடைய கடன் மற்றும் வட்டிச் சுமை கூடி வருவதாகவும், நிதிப் பற்றாக்குறை அதிகரித்து வருவதாகவும் கூறினார்கள். இதுகுறித்து நான் சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன். வட்டிச் செலவைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே கூறியதைப்போல 2000-2001 ஆம் ஆண்டில் அரசின் வருவாயில் அச்செலவு 17.06 சதவீதமாக இருந்தது. நடப்பாண்டு 2005–2006 ஆம் ஆண்டு, Revised Estimate, திருத்திய மதிப்பீடுகளின்படி 14.27 சதவீதமாகக் குறைந்துள்ளதை நான் மகிழ்ச்சியுடன் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் மாநிலத்தின் மொத்த உற்பத்தியின் சதவீதமாகப் பார்க்க வேண்டுமென்பது பொருளாதாரக் கொள்கை. 12–வது நிதிக் குழு, அரசின் நிதிப் பற்றாக்குறை, 2008-2009 ஆம் நிதியாண்டுக்குள் மாநிலத்தின் மொத்த உற்பத்தியில், GSDP-யில் 3 சதவீதமாக இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த மாநிலமும் மேற்கொள்ளாத அளவிற்கு செம்மையான நிர்வாகத்தை மேற்கொண்ட காரணத்தால், 2008–2009–ல் எய்த வேண்டிய அந்த இலக்கை 2004–2005-லேயே எய்தி, மாபெரும் அகில இந்தியச் சாதனையைச் செய்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் 3 சதவீதம் அல்ல, 2.95 சதவீதம் என்று குறைத்து, இன்று பிற மாநிலங்களெல்லாம் எப்படி அம்மா அவர்களின் அரசு இப்படிப்பட்ட அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறது என்று கேட்கின்ற அளவிற்கு சாதனையைப் புரிந்து இருக்கிறார்கள் என்பதை திரு. சிவபுண்ணியம் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

மேலும் 12-வது நிதிக் குழு பரிந்துரையின்படி, தமிழக அரசின் நிதிப் பற்றாக்குறை 2004–2005 ஆம் ஆண்டிலிருந்த அளவைவிட 2008-2009 ஆம் ஆண்டு வரை கூடுதலாக இருக்கக் கூடாது என்ற வரையறை விதித்துள்ளது. இந்த வரையறையை நடைமுறைப்படுத்தி, ரூ. 5,575 கோடியைத் தாண்டாத அளவிற்கு, தற்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைக் கட்டுப்படுத்தி இருக்கின்ற பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றும் முக்கியமான ஒன்று. தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின், சீரிய தூய்மையான நிர்வாகத் திறமையால், நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் மேலாண்மை மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றது. 12–வது நிதிக் குழு பரிந்துரைத்ததைவிட மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றது. அதன் காரணமாக, மைய அரசிற்கு தமிழக அரசு செலுத்த வேண்டிய கடன் தொகையில் 12–வது நிதிக் குழுவின் பரிந்துரையில் உள்ள கடனைத் தள்ளுபடி பெறக்கூடிய தகுதியைப் பெற்றிருக்கின்ற தலைசிறந்த மாநிலம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மாநிலம் என்ற பெருமையை நாம் தற்போது அடைந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மணி அவர்கள், நிதிநிலை குறிப்பு பகுதி 1, பக்கம் 38–ல் குறிப்பிட்டுள்ள குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு, வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றில் 2004–2005 ஆம் ஆண்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் குறித்து, நான் நேற்றே சொன்னேன். Prior period adjustment என்று நான் உங்களுக்குச் சொன்னேன். மொத்த மூலதனச் செலவை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 2004–2005 ஆம் ஆண்டு கணக்குகளில் மொத்த மூலதனச் செலவு ரூ.4,563.96 கோடிகளாக இருந்தது. நடப்பு ஆண்டு 2005–2006–ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீடுகளில் ரூ. 4,843.18 கோடியாக உயர்ந்து, 2006–2007–ல் ரூ. 5,334.54 கோடியாக இது நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது.

12–வது நிதிக் குழுவினுடைய வரையறைக்கு உட்பட்டு, இது நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. நிதிப் பற்றாக்குறை உயராமல் கட்டுப்படுத்தியுள்ள அதே வேளையில் அப்பற்றாக்குறையுள்ள வருவாய்ப் பற்றாக்குறையை நாம் குறைத்திருக்கிறோம். This fiscal deficit includes the revenue deficit also. ஆனால், 2000–2001 ஆம் ஆண்டு வாக்கிலே revenue deficit was alarmingly high. அந்த நிலையை மாற்றி, revenue deficit –ஐக் கட்டுப்படுத்தி, வாங்குகிற கடனை மூலதனச் செலவுக்கு அடிப்படை வசதிகளுக்குச் செலவு செய்யக்கூடிய சிறந்த பொருளாதார அணுகுமுறையை, கட்டமைப்புகளை உருவாக்கக் கூடிய பொருளாதார அணுகுமுறையை, அதன்மூலமாக ஒட்டுமொத்த மாநில வருமானம் பெருகக்கூடிய பொருளாதார அணுகுமுறையைக் கடைப்பிடித்த பெருமை, பொருளாதார நுணுக்கத்தோடு செயல்பட்ட புரட்சித் தலைவி அம்மாவைச் சாரும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.



இதனால்தான் அரசினுடைய சாதனையை 22–1–2006 தேதியிட்ட 'இந்து' நாளிதழ்கூட அதை வெகுவாகப் பாராட்டியிருக்கிறது. 2001–2002 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அதலபாதாளத்தில் இருந்த நிதிநிலையைச் சீர்செய்து, அரசின் நிதிநிலை குறித்து credit rate நிறுவனங்கள் வழங்கும் credit rating—இந்தியாவிலேயே, highest credit rating—அதாவது உயர்ந்தபட்ச credit rating பெற்ற தலைசிறந்த இரண்டு மாநிலங்கள் இந்தியாவிலே உண்டு. அதிலே தமிழகம் ஒன்று என்ற பெருமையைத் தமிழகத்திற்கு ஈட்டித் தந்த பெருமை தமிழகத்தினுடைய ஒரு பொருளாதார நிபுணராகச் செயல்படுகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதனை நான் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்படி உன்னதமான சாதனைகளை அம்மா அவர்களுடைய அரசு நடைமுறைப்படுத்தியிருக்கிறது. வரலாறு காணாத சாதனை. சுதந்திரத் தமிழ்நாட்டில், பலவித ஆட்சிகள், பல காலக்கட்டத்தில் பலவித நிதி நிலைப்பாட்டில் இருந்தன. ஆனால், சீரழிந்த நிதிநிலை, திவாலான தமிழக நிதிநிலை என்ற நிலையிலிருந்த தமிழகத்தை, இன்று அகில இந்திய உலக வங்கி, Asian Development வங்கி போன்ற உலக அமைப்புகளே பாராட்டும் வண்ணம், மிகக் குறுகிய காலத்தில் தலைநிமிர்த்தி, சீர்தூக்கி, ஏழைகளைப் பாதுகாத்து, ஏழைகள் நலத் திட்டங்களை அள்ளி அள்ளி வழங்கி, அதே நேரத்தில் Capital expenditure என்று சொல்லப்படக்கூடிய கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி, அதன் மூலமாக மாநில வருமானத்தைப் பெருக்கி, சமூகப் பாதுகாப்பு வளையத்தையும் ஏழைகளுக்குத் தந்து, ஒட்டுமொத்த பொருளாதாரச் செம்மையை. [illegible]வாத தாயே பாராட்டக்கூடிய அளவிற்கு அகில இந்தியாவே, பாரதப் பி[illegible]தமரே பாராட்டக்கூடிய அளவிற்கு இப்படிச் செய்திருக்கின்ற பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

பிற்பகல் 1-25

எனவேதான் மக்கள், தெளிவாக இருக்கிறார்கள். காஞ்சிபுரத்திலும், கும்மிடிப்பூண்டியிலும் மக்கள் கூட்டணி புரட்சித் தலைவி அம்மாவின் பக்கம்தான் நாங்கள் என்று சொன்னார்கள். தற்போது, இந்த 5 ஆண்டுக் காலத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நடைமுறையில் செயல் திட்டத்தில் காட்டியிருக்கிற இந்த அளப்பரிய சாதனையை ஒரு நாளைக்கு 20 மணி நேரத்திற்கு மேலாக உழைத்து, தன் வயிற்றில் பிள்ளை இல்லை,

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 25

தமிழகத்து ஏழைகள், தமிழகத்து அனைத்துத் தரப்பு மக்கள்தான் தன் வயிற்றுப் பிள்ளைகள் என்று தமிழகத்து மக்களினுடைய நலனுக்காக ஒரு நாளைக்கு 20 மணி நேரம் புரட்சித் தலைவி உழைத்த காரணத்தால், நிர்வாகத்தைத் தூய்மையாக நடத்திய காரணத்தால், அனைத்துத் துறைகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து fingertip knowledge of each and every department என்ற முறையிலே ஒவ்வொரு துறையினுடைய உள் விவகாரங்களை நன்கு நுனி விரலில் வைத்து பிரச்சினைகளை அணுகிய காரணத்தால், தாழ்ந்த தமிழகம் இன்று தலை நிமிர்ந்து விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) வீழ்ந்த தமிழகம் இன்று உயர்ந்து விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 7 கோடி தமிழகத்து மக்களும், தங்களது தலைவி, புரட்சித் தலைவி அம்மாதான்; வருங்காலத்திலும் புரட்சித் தலைவி அம்மாதான் தமிழகத்தை—ஏன் பாரதத்தையே (மேசையைத் தட்டும் ஒலி) அலங்கரிக்கக்கூடிய திறமை மிக்க தலைவி, திறமை மிக்க முதலமைச்சர், திறமை மிக்க நிர்வாகி என்ற பெயரைப் பெற்றுத் தந்திருக்கின்ற மக்களுக்கு நான் நன்றி கூறி என் உரையை முடிக்கின்றேன்.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 27–01–2006 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 27–01–2006, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.



2006 ஜனவரி 25] [பேரவைத் தலைவர்]

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

27–01–2006 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 27–01–2006 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. கன்னியாகுமரியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக சென்னையில் உள்ள திருவாளர்கள் ஜெர்மன் தொழுநோய் மற்றும் காசநோய் நிவாரண சங்கத்திற்கு திருநெல்வேலியிலுள்ள தினேஷ் எண்டர்பிரைசஸ் நிறுவனம் விற்பனை செய்துள்ள மேசை மின் விசிறிகளின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரித் துறையின் 2–8–2005 ஆம் நாளிட்ட 88 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

52. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 6–9–2005 ஆம் நாளிட்ட 95 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

53. மோட்டார் வாகனங்களுக்குரிய திரவ பெட்ரோலிய வாயு மாற்றுக் கருவிகளின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை நான்கு சதவீதமாகக் குறைத்து வணிக வரித் துறையின் 19–10–2005 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

[2006 ஜனவரி 25

54. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

55. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

56. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

57. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

58. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2004–2005 ஆம் ஆண்டின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு கடல்சார் வாரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

57. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2003–2006)

58. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2003–2006)

59. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003–2006)

60. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூறாவது அறிக்கை. (2003–2006)

61. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. (2003–2006)



2006 ஜனவரி 25]

62. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2003–2006)

63. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2003–2006)

64. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2003–2006)

65. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2003–2006)

66. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2003–2006)

67. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2003–2006)

68. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2003–2006)

69. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2003–2006)

70. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. (2003–2006)

71. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. (2003–2006)

72. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. (2003–2006)

73. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூறாவது அறிக்கை. (2003–2006)

74. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2003–2006)

75. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2003–2006)

76. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (2003–2006)

[2006 ஜனவரி 25

77. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003–2006)

78. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (2003–2006)

79. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (2003–2006)

80. மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஆறாவது அறிக்கை. (2003–2006)

81. மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. (2003–2006)

82. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கை. (2003–2006)

D
V214, 3 ' 106
P06.90.2

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227008
சென்னை-600 008
நூலகம்

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.